
# தொண்டன்







## தொண்டன் 40வது ஆண்டு
## சிறப்பு மலர் (1969 – 2009)

டிசம்பர் 2008 - ஜனவரி 2009

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




COMMERCIAL BANK

Best Complements...!

COMBANK e-Exchange
Money Transfer Service

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

டிசம்பர் - 2008 ஜனவரி 2009

மலர்: 40 இதழ்: 11

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**பதிப்பு**
வணசிங்கா அச்சகம்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | : | 02 |
| ஆசிச் செய்திகள்... | : | 03 |
| வாழ்த்துகிறேன்... | : | 05 |
| தொண்டன் வழி... | : | 06 |
| வாக்கு மனிதர்... | : | 12 |
| தொண்டனே நீ... | : | 15 |
| ஒரு சாதனை... | : | 16 |
| மாணவர் பக்கம் | : | 20 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | : | 21 |
| நேரத்தின்... | : | 24 |
| உங்கள் சுகமான... | : | 27 |
| இனிய நத்தார் | : | 28 |
| 40 ஆண்டுகளில்... | : | 31 |
| விருது பெறும்... | : | 33 |
| வெள்ளை மாளிகையில்... | : | 35 |
| மட்டக்களப்புக் கிராமிய... | : | 40 |
| கரித்தாஸ்... | : | 42 |
| இலக்கிய மஞ்சரி | : | 43 |
| புனித பவுல்... | : | 45 |
| வசை பாடல்... | : | 48 |
| கடுகுக் கதை... | : | 50 |
| கைமாறு | : | 51 |
| தொண்டனை... | : | 54 |
| தொலைக்காட்சியில்... | : | 55 |
| நிஜம்தானா... | : | 58 |
| கடல்கோள்... | : | 59 |
| எங்கள் ஏணி | : | 62 |
| சமாதானம் | : | 63 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com

விலை : 50/=
ஆண்டு சந்தா : 350/=
(தபாற்செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புடன் உங்களோடு...

**ஆசிரியர்**

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்", "எண்ணென்ப ஏனையெழுத்தென்ப இவ் விரண்டுங் கண்ணென்ப வாழும் உயிர்க்கு". இவ்வாறு நோக்கும்போது மனித, நாகரீக, சமூக, பொருளாதார, அறிவியல் வளர்ச்சியிலே எழுத்து அல்லது எழுதுகோல் ஆற்றும் பங்களிப்புக்கு அளவு கோல் இருக்க முடியாது. எழுத்தாணியால் ஒருவர் தலை நிமிரவும் முடியும்; தலை குனியவும் முடியும். அதே **எழுத்தாணியால் ஒருவரை ஏன் சமூகத்தை, நாட்டை புகழின் உச்சியிலும் நிறுத்த முடியும்; பாதாளத்தின் அடியிலும் வீழ்த்த முடியும்.**

ஒருவர் தனது கருத்தை எழுத்துருவில் வழங்கும்போது அதற்குப் பெறுமதி அதிகம். கருத்துகள், எழுத்துக் கோர்வையின் நிலை, தன்மை, காலம், இடம், சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப அதன் கருப்பொருள் வித்தியாசப்பட வாய்ப்புண்டு. இருப்பினும் எழுதியது எழுதியதுதான். இதனாலேயே **"நாக்கைக் கொடுத்தாலும் எழுத்தைக் கொடுக்காதே"** என்பார்கள்.

பல சாம்ராஜ்ஜியங்களின், அரசாங்கங்களின் ஏன் குழுக்களின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இந்த எழுத்து மையமாக (கூர்மையாக) இருப்பதனால், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்கள் என்போர் எப்போதும் குறிவைக்கப்படுவது நாம் அறிந்த விடயமே. குறிப்பாக நமது **இலங்கை நாட்டில் பத்திரிகையாளர்கள் குறிவைக்கப்பட்டு பின் இல்லாதொழிக்கப்படுவது சர்வசாதாரண விடயமாகப் போய்விட்டது.**

அண்மைக் காலங்களில் ஊடகத்துறைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை, அநியாயங்களை, அழித்தொழிப்புகளைப் பார்க்கின்றபோது **இலங்கை நாட்டில் கருத்துச் சுதந்திரம் அற்றுப் போயுள்ளதென்பது நிருபணமாகிறது.** ஆக, மொத்தத்தில் ஜனநாயகம் பெயரளவில் பேசப்படுகின்ற விடயமாக மட்டுமே உள்ளது.

ஒரு வல்லரசைத் தோற்கடித்த பெருமிதம், வேறு ஒரு நாட்டைக் கைப்பற்றிய வீராப்பு தற்போது அரசாங்கத்திற்கு. கைப்பற்றிய கிழக்கை தக்கவைக்கவே இவ்வளவு கெடுபிடிகள் இருக்கும் போது.....ம்! நடந்துகொண்டிருக்கும் அடாவடித்தனங்களையும், கடத்தல் கைங்கரியங்களையும், நள்ளிரவில் கூடிக் குறையும் விலைவாசியையும் மக்கள் கண்டுகொள்ளாமல் இருக்கும் வண்ணம் வர்ணனை செய்யப்படுகின்ற ஸ்கோர் விபரம் (கிறிக்கற் / ஆளில்லா நிலப்பரப்பு) பிரமாதம். **பொருத்தமான அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்காமல் யார் மனதையும் யாரும் வெல்ல முடியாது.**

மக்களை இனியும் ஏமாற்றிவிடலாம் என்று அரச தரப்பு நினைத்தால் அதைவிட முட்டாள்த்தனம் வேறு எதுவுமில்லை. **மக்கள் விழித்துவிட்டார்கள். இனிமேல் வெளுத்துக் கட்டுவார்கள்.**

இன்று பல புதிய வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் அளப்பரிய சேவையினை மக்களுக்கு வழங்குவதில் முனைப்போடு நிற்கின்றன. அந்தவகையில் கிறிஸ்மஸ் காலத்தில் 'சூரியன் F.M' நடாத்திய "உதவிக் கரங்கள்" வரவேற்கத்தக்கதும், பாராட்டத்தக்கதுமாகும். சக்தி F.M ,T.V கலைஞர்களை வளர்ப்பதிலும், 'தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்' என தனது செய்தியரங்கில் உள்ளடக்கியுள்ள விடயங்களுக்கும் சபாஷ் சொல்லியே ஆகவேண்டும்

இவை யாவற்றையும் கூறிக்கொண்டு நமது மறைமாவட்டத்திலிருந்து 40 ஆண்டுகளாக மேலே சொல்லப்பட்ட, சொல்லப்படாத சவால்களுக்கு மத்தியில் வெற்றிநடை போடும் சமய - சமூக - இலக்கிய சஞ்சிகையாகிய 'தொண்டனைப்' பற்றி நச்சென்று நாலு வரியில் சொல்லிவிடுகிறேன்.

- **தொண்டா! நீ வெளிவர முன்நின்றவர்கள் வாழி!**
- **தொண்டா! உனை வீழ விடாமல் தாங்கி நிற்கும் எழுத்தாளர்கள் வாழி!**
- **தொண்டா! நீயாற்றும் பல்கதம்பப் பணி வாழி!**
- **தொண்டா! தமது அறிவுக் கண்களை அகல விரிக்க உன்னை வாங்கிப் படிக்கும் வாசகப் பெருமக்கள் வாழிய வாழியவே!**



## இறைவாக்கு

**"உங்களுள் பெரியவர் சிறியவராகவும் ஆட்சி புரிபவர் தொண்டு புரிபவராகவும் மாறவேண்டும்"**

(லூக்கா: 22:26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



நமது மறைமாவட்ட மாதாந்த ஏடான 'தொண்டன்' நாற்பது ஆண்டுகள் நிறைவு காண்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். ஒரு சஞ்சிகை நாற்பது ஆண்டுகள் தொடர்ந்து வெளிவருவதென்பது சாதாரண விடயம் அன்று. சஞ்சிகை வெளியீட்டில் எதிர்கொள்ளப்படும் பல்வேறு தடைகள், பிரச்சினைகளுக்கெல்லாம் முகம் கொடுத்து, தம் இருப்பை நிலைநிறுத்திக்கொள்வதென்பது ஒரு சாதனையே.

திருகோணமலை மேற்றாசன ஐக்கிய சங்கத்தின் 41வது மாநாட்டில் எடுத்த ஒரு தீர்மானத்தின்படி 1969ம் ஆண்டு பெப்ரவரி முதல் தொண்டன் வெளிவரத் தொடங்கியது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் திருச்சபையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியை, மாற்றங்களை மக்களிடம் எடுத்துச் செல்வதோடு விசுவாச வாழ்வில் இறைமக்களை வளர்த்தெடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தொண்டனின் முதல் ஆசிரியர் தாண்டவன்வெளியைச் சேர்ந்த எஸ்.அந்தோனிப்பிள்ளை அவர்களாகும். அப்போது நமது மறைமாவட்டத்தில் துணை ஆயராக இருந்த காலஞ்சென்ற அதி வணக்கத்துக்குரிய வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் விளங்கியதோடு பின்னாட்களில் தொண்டனின் ஆசிரியராகவும் பணி புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலப்போக்கில் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தன்னை அகலப்படுத்திக்கொண்ட தொண்டன் இன்று சமய - சமூக - இலக்கிய ஏடாக எல்லா மக்களும் படித்துப் பயனடையக் கூடியவாறு வளர்ந்துள்ளது.

கிழக்கு மாகாணத்திலிருந்து தொடர்ந்து வெளிவரும் ஒரே ஏடாக விளங்கும் "தொண்டன்" பல்லின மக்கள் வாழும் இம்மாகாணத்தில் சமூக ஒற்றுமை, சமயப் புரிந்துணர்வு, நல்லிணக்கம் போன்றவற்றை ஏற்படுத்துவதில் முன்னின்று உழைக்க வேண்டுமென்று விரும்புகின்றோம். அத்துடன் ஊடகத் துறையின் இன்றைய செல் நெறியை இனங்கண்டு தன்னை வளர்த்துக்கொள்வதன் மூலம் புதிய இலக்குகளைச் சென்றடையலாம்.

இதுவரை காலமும் தொண்டனின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய ஆசிரியர்கள், படைப்பாளிகள், விநியோகஸ்தர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். கிழக்கின் வெளியீடுகளில் தனித்துவமாய் நிற்கும் தொண்டன் வருங்காலங்களில் மேலும் வளர்ந்து நீண்டு நிலைக்க இறை ஆசீர் வேண்டுகிறோம்.

+ ஜோ. கிங்ஸிலி சுவாம்பிள்ளை

• திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

"விவசாயி மழைக்காகக் காத்திருப்பது போல் மாணவன் பரீட்சை முடிவுகளுக்காகக் காத்திருப்பதுபோல் தாய் பிறக்கப்போகும் தன் குழந்தைக்காகக் காத்திருப்பதுபோல் நானும் 'தொண்டனின்' வரவுக்காக மாதந் தோறும் காத்திருக்கிறேன். அது என் கரங்களில் கிடைத்தவுடன் நானே இவ்வுலகில் செல்வந்தன் என்ற உணர்வு அதனைப் படித்து முடிக்கும் வரை என்னை ஆட்கொள்கின்றது. முழுமையாகப் படித்த பின்னர்தான் நிம்மதிப் பெருமூச்சு விடுவேன்" என ஒரு வாசகர் மகிழ்ச்சியுடன் கூறுமளவிற்கு 'தொண்டன்' வளர்ச்சியடைந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

'தொண்டன்' திங்களிதழ் 40 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது அல்லது 40வது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறது என்பதைக் கேள்வியுற்றபோது இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தவர்களில் நானும் ஒருவன். ஏனெனில், சில காலம் அதன் ஆசிரியராகவும் பல ஆண்டுகள் அதற்கு ஆக்கங்களைப் படைத்தவனாகவும் இருந்ததை எண்ணிப் பெருமை அடைகிறேன். எழுத்துத் துறையில் நான் எழுச்சியடைய 'தொண்டன்' என்னைப் பல விதத்திலும் ஊக்குவித்து உரமூட்டியது என்பதால் நான் என்றென்றும் நன்றிக் கடன் பட்டுள்ளேன்.

மழைக்கு முளைத்த காளான் போன்று இன்றைய உலகில் பலவிதமான பத்திரிகைகள், நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் முளைத்தெழுகின்றன. ஆயினும் முளைப்பதெல்லாம் தளைப்பதில்லை. தளைப்பதெல்லாம் வளர்ச்சியடைவதில்லை. வளர்ச்சியடைவதெல்லாம் பலனளிப்பதில்லை. இத்தகைய கண்ணோட்டத்திற்கு எதிர்மாறாக பல தடைகளைத் தாண்டி எதிர் நீச்சலடித்து 40 ஆண்டுகளை 'தொண்டன்' எட்டிப் பிடித்திருக்கிறது என்றால் அது ஒரு பெரும் சாதனைதான்.

அதன் வளர்ச்சிப் பாதையை நோக்கும் இடத்து 'கத்தோலிக்கம்' என்று குறுகிய வட்டத்தினுள் முடங்கிக் கிடக்காமல், இன, மத, பிரதேச, வயது வேறுபாடின்றி அனைவரையும் கவரக்கூடியதாக, அனைவருக்கும் ஏதோவொரு செய்தியைக் கொடுப்பதாக, அனைவரையும் உள்வாங்கும் பலதரப்பட்ட அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவருவது பாராட்டத்தக்கது. சிந்தனையைத் தூண்டிவிடும் ஆசிரியர் பக்கம், சிறுகதை, தொடர்கதை, கவிதை, கட்டுரை, மாணவர் பக்கம், போட்டிகள், திருச்சபை - உலக - மறைமாவட்டச் செய்திகள், பல துறைகளிலும் சிறப்புப் பெற்ற மாமனிதர்களுடனான நேர்காணல் போன்ற மேலும் பல ஆக்கங்களை உட்கொண்டு பலவித அழகிய மலர்ச்செடிகளைக் கொண்ட ஒரு பூங்கா என ஒப்பிடுமளவுக்கு உயர்ந்து நிற்கின்றது.

அந்தவகையில் இச்சாதனையின் பின்னணியில் இலைமறை காயாக இருந்து செயற்பட்ட அனைத்து நல்ல உள்ளங்களையும் நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். தொண்டன் ஒரு நாள் பெரியதொரு விருட்சமாக வளரும் என்ற எதிர்நோக்குடன் அதன் முதல் விதையை விதைத்தவர்கள், உடன் நின்றவர்கள், தண்ணீர் ஊற்றியவர்கள், உரமிட்டவர்கள், களை பிடுங்கியவர்கள், அரணாயிருந்து காவல் காத்தவர்கள் மற்றும் அதன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருப்பவர்கள், இருக்கின்றவர்கள் அனைவரையும் என்றுமே மறக்க முடியாது.

ஒரு மனிதனின் ஆயுளிலே 40வது ஆண்டு முக்கியமானது. ஏனெனில், அந்த வயதுக்குப் பிறகு அவனது உடல் நலத்தில் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டும். மேலும் பல ஆண்டு வாழவேண்டுமாயின் மருத்துவரிடம் சென்று, ஆலோசனைகள் கேட்டு பல பரிசோதனைகள் செய்யவேண்டும். திருமணம் முடித்து குழந்தைகளுடன் இருப்பவர்கள் குழந்தைகளுக்கான எதிர்காலத் திட்டங்களைத் தீட்டவேண்டும். அதே போன்று நாற்பது வயதை எட்டியுள்ள தொண்டனும் தனது வளர்ச்சிப் பாதையை நன்கு அலசி ஆராய்ந்து, களைய வேண்டியவற்றைக் களைந்து, மெருகூட்ட வேண்டியவற்றை இணைத்து, மேலும் வாசகர் வட்டத்தை அதிகரிக்கக் கூடியவற்றில் அக்கறை எடுத்து பொன்விழா, வைரவிழா, நூற்றாண்டு விழாக்களைக் கண்டு இறையரசின் விழுமியங்களை அனைத்து நெஞ்சங்களிலும் விதைத்து வீறுநடை போட ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

பேரருள்தந்தை. கலாநிதி. பொன்னையா யோசப்
**துணை ஆயர்**
**திருகோணமலை - மட்டக்களப்பு**
**மறைமாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறேன்

தமிழோடு கிறிஸ்தவமும் தலைநிமிர்ந்து
துரணியிலே சிறப்படையத் தொண்டுசெய்யும்
தமிழிதழாம் தொண்டனுக்கு வாழ்த்துச் சொல்ல
தகுதியெனக் கில்லைதான் எனினும் நானோர்
தமிழ்க்கவிஞன் என்பதனால் மனம்திறந்து
தொண்டனைநான் வாழ்த்தாமல் விட்டேனென்றால்
தமிழன்னை இழிவாக நினைப்பாளென்னை
தமிழனென்று சொல்வதிலும் அர்த்தமில்லை

மதகுருமார், மறைமுதல்வர், துறவியெல்லாம்
மலர்ந்ததிரு வாயமுதை அள்ளித்தந்து
கதை, கவிதை, கட்டுரைகள், செய்தியென்று
கற்கண்டாய் நம்வாழ்வைப் பண்படுத்த
இதமாக எமக்களித்து நாற்பதாண்டு
எம்மோடு பயணித்த தொண்டனுக்கு
இதயத்தில் தோய்த்தெடுத்த வாழ்த்தைச்சொல்ல
இன்றும்நான் வாழ்வதுதான் பெருமையம்மா

புதுத்தகவல் புதுப்பார்வை புதியபோக்கில்
புல்லரிக்கும் ஆசிரியர் தலையங்கங்கள்
விதம்விதமாய் வேதத்தின் தத்துவங்கள்
வித்தாரச் செருக்கின்றி நமக்குத்தந்து
கதம்பமாலை போலெங்கள் கருத்தையின்றும்
காந்தமென இழுத்தெடுக்கும் தொண்டன்சேவை
சுதந்திரமாய் காற்றைப்போல் பரவியெங்கும்
சுடரொளியாய் இருளகற்ற வாழ்த்துகின்றேன்



– கவிஞர் செ. குணரத்தினம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "தொண்டன்" வழி தனி வழி

"தொண்டன்" சஞ்சிகை 40 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது பெருமிதமும் பெருமையும் ஒருசேர மனதைக் கௌவிக்கொள்கின்றன.

தமிழகத்திலிருந்து வெளிவந்த தீபம் (நா. பார்த்தசாரதி), ஞானரதம் (ஜெயகாந்தன்), சுபமங்களா (கோமல் சுவாமிநாதன்) முதலிய சஞ்சிகைகளும் இலங்கையில் வெளிவந்த எண்ணற்ற சஞ்சிகைகளும் இடையில் நின்றுபோக, "தொண்டன்" இன்னும் தொடர்ந்து வருகிறது.

இவ்வாறு தொடர்ந்து வரும் சஞ்சிகைகளில் "மல்லிகை" ஒன்றே தொண்டனுக்கு நிகராகும் (காலத்தில்).

மட்டுநகரிலிருந்து வெளிவந்த 'மலர்' (அன்புமணி), 'பாடும் மீன்' (ரீ. பாக்கியநாயகம்), 'அரங்கம்' (தவராசா), 'போது' (வாகரை வாணன்) முதலிய சஞ்சிகைகள் அவ்வப்போது தோன்றி இடையில் மறைந்துவிட்டதை இலக்கிய அன்பர்கள் நன்கு அறிவார்கள். (இவற்றைவிட வேறு சில சஞ்சிகைகளும் மட்டக்களப்பில் தோன்றி இடையில் நின்றுவிட்டமை யாவரும் அறிந்த செய்தி. இவ்வாறே இலங்கை முழுவதிலும் - கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை, கல்முனை முதலிய மாவட்டங்களில் பல்வேறு இலக்கிய சஞ்சிகைகள் தோன்றி மறைந்துள்ளன. இத்தகைய பின்னணியில் தொண்டனின் தொடர்ச்சியான வரவு, நிச்சயமாக ஒரு சாதனையேதான். இதற்காக 'தொண்டன்' ஆசிரியர் குழு பாராட்டுக்குரியது.

ஒரு பத்திரிகை சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவருவது பின்வரும் அம்சங்களிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளது.

(அ) *கட்டுக்கோப்பான நிர்வாகம்*
(ஆ) *உறுதியான விநியோக வலைப்பின்னல்*
(இ) *தொடர்ச்சியான விளம்பரங்கள்*
(ஈ) *சஞ்சிகையின் கவர்ச்சியான வடிவமைப்பு*
(உ) *காத்திரமான ஆக்கங்கள்*

இவை அனைத்திலும் "தொண்டன்" திருப்தியாக உள்ளது. (விளம்பரங்கள் புறநடை)

**கட்டுக்கோப்பான நிர்வாகம்:**

கட்டுக்கோப்பான நிர்வாகத்தைப் பொறுத்தவரை, திரு.மட். மறைமாவட்டம் இதற்குப் பொறுப்பாக உள்ளது. ஆசிரியர் குழு இணை ஆசிரியர் "மலர்வேந்தன்" முதலியோர் அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றனர்.

விநியோக வலைப்பின்னலும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பைப் பொறுத்தவரை தொடர்ச்சியான விளம்பரங்களைப் பெறுவது சாத்தியமற்றது. ஆனாலும், அட்டைகளில் அளவான விளம்பரங்கள் இடம்பெறுகின்றன.

சஞ்சிகையின் வடிவமைப்பு ஒவ்வொரு இதழும் புதுமையாக - வாசகர்களைக் கவரும் வண்ணம் அமைகிறது. அவ்வாறே,

- அன்புமணி -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திரமான ஆக்கங்களும் ஒவ்வொரு இதழிலும் இடம்பெறுகின்றன. சிறப்பு மலர்களில் சிறப்புக் கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

தொண்டன் ஒவ்வொரு இதழும், ஏதோ ஒரு வகையில் வாசகரைக் கவரும் வண்ணம் புதுமையாக அமைந்துவிடுகிறது. ஆக்கங்கள் கருத்தூன்றிப் படிக்கும் ஆவலைத் தூண்டுகின்றன.

**ஆக்கங்கள்**

தொண்டனில் நிலையான சில ஆக்கங்கள் உள்ளன. அவை: 'அன்புடன் உங்களோடு' (ஆசிரியத் தலையங்கம்), நேர்காணல், சமயக் கட்டுரை, மாணவர் பக்கம், இலக்கிய மஞ்சரி, விவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம், வர்ணம் தீட்டும் போட்டி முதலியனவாம்.

இவை தவிர சிறுகதை, கவிதை, விசேட கட்டுரை முதலியன தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன. இவற்றின்மீது ஒரு கண்ணோட்டம் செலுத்தியபோது, மனதில் நினைத்த சில விடயங்களை இங்கு குறிப்பிடுகின்றேன்.

ஆசிரியரின் 'அன்புடன் உங்களாடு' என்ற ஆசிரியத் தலையங்கம், அவ்வப்போதைய சமகால நிகழ்வுகளைத் தொட்டுச் செல்வது சிறப்பு.

உதாரணமாக 2008 ஜூன் இதழ் ஆசிரியத் தலையங்கம் மக்கள் படும் துன்பத்தைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது. அதன் இறுதிப் பகுதி இவ்வாறு அமைகிறது:

"....தொடரும் யுத்தம், எரிபொருள் விலையுயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், இலங்கை மக்கள் நெருப்புக்குள் நிற்கிறார்கள். எவ்வளவு காலத்துக்கு நிற்கமுடியும்? இதன் எதிரொலிப்புகள் தென்னிலங்கையிலும் கேட்கத் தொடங்கிவிட்டன. போர் வெறியையும் பிடிவாதங்களையும் பொறுப்புள்ளவர்கள் கைவிடாவிட்டால் காலம் தன் கடமையைச் செய்யும்" இவ்வாறு முடியும் ஆசிரியத் தலையங்கத்தின் கடைசி வரி எத்தனையோ உண்மைகளைச் சொல்வதை நாம் அவதானிக்கலாம்.

**சிறப்புக் கட்டுரைகள்**

ஒவ்வொரு இதழிலும் தனித்துவமான சிறப்புக் கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

ஜூன் 2008 இதழில் அன்னை தெரேசா பற்றிய கட்டுரை: தூய வாழ்வு (எழுதியவர்: அருள்தந்தை டக்ளஸ் ஜேம்ஸ்), பதுவைப் புனித அந்தோனியார் (எழுதியவர்: வயலற் சந்திரசேகரம்), புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியலும் இன்றைய தமிழர் சமூகமும் (தொடர்கட்டுரை: ம. குமுதா), தமிழக நுண்கலைகள் (எழுதியவர்: கலாநிதி எஸ். ஏ. ஐ. மத்தியூ), எனது பயணங்களில் (அருட்பணி ஜெயந்தன் - தொடர்கட்டுரை) இடம்பெறுகின்றன.

இலக்கிய மஞ்சரி எழுதும் ஆழியோன் அவ்வப்போது ஏதாவது புதுமையாக எழுதுவார். ஜனவரி 2008 இதழில் நோபல் பரிசு பெற்ற கவிஞர் ரவிந்திரநாத் தாகூர் பற்றி எழுதியிருந்தார். அதில் 'கீதாஞ்சலி' கவிதைகளில் ஒன்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு இடம்பெறுகிறது. கூடவே அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் இடம்பெறுகிறது. இவ்விடயம் கவிஞரின் "Lover's Gift" நூலில் இடம்பெறுவதைக் குறிப்பிட்டு "முடிந்தால் நாம் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாசிக்க முயற்சி செய்யவேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார். (புத்தகத்தின் விலை: 1481.25)

ஜூன் 2008 இதழில் தென்கச்சி சுவாமிநாதன் எழுதிய ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். நகைச்சுவை நிறைந்த அக்கட்டுரையில் வேட்பாளர்கள் வயதான அம்மையாரிடம் சென்றபோது அவர், "என்னமோப்பா, நீங்க இரண்டு பேரும் சண்டை போட்டுக்கொள்ளாம ஒத்துமையா இருந்தா அதுவே போதும்" என்கிறார்.

**கவிதைகள்**

தொண்டனில் வெளிவரும் கவிதைகள் பெரும்பாலும் சமகாலப் பிரச்சினைகளைப் பாடுபொருளாகக் கொண்டும் மக்களின் அவலங்களை அம்பலப்படுத்துவதாகவும் அமைந்திருக்கும்.

அருட்சகோதரர் பெனியின் கவிதைகள் புதுமையாய் அமைந்தன. ஏனையோர் கவிதைகளும் சோடைபோனதில்லை. சிலவற்றை மேலோட்டமாகப் பார்க்கலாம்.

ஜூன் - ஜூலை 2008 இதழ் அட்டையில் ஒரு நான்கு வரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவிகளின் இரத்தம்
ஆபேலின் இரத்தம் - அது
அவமாகப் போவதில்லை
ஆண்டவன் சந்நிதியைத் தட்டும்

அதே இதழில் வாகரை வாணன் எழுதிய ஒரு சந்தக்கவிதை

அய்யனை மனத்திலேந்தி
அருளினை முகத்திலேந்தி
கையினில் பாலனேந்தி
கருணையை விழியிலேந்தி
மெய்யினை நாவிலேந்தி
வேதத்தைச் சொல்லிலேந்தி
உய்வினைத் தன்னுள் ஏந்தி
உத்தமன் தோன்றலானான்

'ஒரு புனிதனின் தோற்றம்' என்ற தலைப்பில் வெளியான நான்கு கவிதைகளுள் இது ஒன்று.

ஆகஸ்ட் 2006 இதழில் நிலா தமிழின் தாசனின் உருக்கமான கவிதை ஒன்று இடம்பெறுகிறது. அதில் சில வரிகள்:

ஒருமுறைதானே நீ மனுமகனாய்ப் பிறந்தாய்
மறுமுறை ஒருக்கால் பிறக்க ஏன்மறந்தாய்
ஆம்! ஒரேயொரு ஏரோதினாலேயே
எத்தனையோ இன்னல்களைச் சுமந்த இயேசுவே
இன்று எண்ணிக்கையற்ற ஏரோதுக்கள்
மண்ணிற் புரள்கையில், ஐயோ நீர்
விண்ணை விட்டிறங்காதிருப்பதுதான் விவேகம்




முதலாவது நத்தார் வாழ்த்தட்டையை உருவாக்கியவர் சேர் ஹென்றி கோல் என்பவர். இவர் பிரித்தானிய தபாலகத்தில் வேலை செய்தவர். ஓர் ஓவியரை வாடகைக்கு அமர்த்தி மூன்று காட்சிகளை வரையச் செய்தார். நடுவில் ஒரு குடும்பம் இராவுணவு மேசையை சுற்றி அமர்ந்திருக்க. இடது பக்கத்தில் பசித்தவருக்கு உணவளிக்கும் காட்சியும் வலது பக்கத்தில் ஆடையில்லாதவருக்கு ஆடை அணிவிக்கும் காட்சியும் வரையப்பட்டன. "A MERRY CHRISTMAS AND A HAPPY NEW YEAR" என அதன்மேல் எழுதப்பட்டது. தொடர்ந்து அந்நாட்டு ஆங்கிலப் பாடசாலைச் சிறுவர் தம் பெற்றோருக்கு வாழ்த்து அட்டைகளை எழுதி அனுப்பினர். அவை அவர்களால் எவ்வளவு நன்றாக எழுத முடியும் என்பதை அவர்களின் பெற்றோருக்கு நிரூபித்தனர்.

**- மற்றில்டா இராஜேந்திரம் -**

இப்படித் தொடர்கிறது கவிதை. இவரது கவிதைகள் பல்வேறு வகையாக வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**தொண்டனின் சில நிமிடங்கள்** (நேர்காணல் கட்டுரை)

ஒவ்வொரு இதழிலும் வெளியாகும் மேற்படி கட்டுரைகள் மிகவும் சுவாரஷ்யமானவை. மட்டக்களப்பில் இலைமறை காயாக இருந்த பலர் இந்த நேர்காணல்கள் மூலம் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் ஜூலை 2006 இதழில் கலாசூரி வினாயக மூர்த்தியின் நேர்காணல் இடம்பெற்றது. (நேர்கண்டவர் - ஆழியோன்) வித்தியாசமான கேள்விகளும் அதற்கான பதிலும் உரியவரிடமிருந்தே கிடைப்பதால், அதை ஒரு சத்தியவாக்கு மூல மாகவே நாம் கொள்ளலாம்.

ஓகஸ்ட் 2006 இதழில் ஒரு வித்தியாசமான நேர்காணல். யூஜின் ஹேர்பர்ட் அடிகளார் காணாமற் போனவர்களில் ஒருவர். மக்களுக்காகத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்தவர். அவரோடு பழகிய சிலரிடமிருந்து அவரைப் பற்றிக் கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கான பதில்கள் பிரசுரமாகி யிருந்தன.

இலக்கியவாதிகள் மட்டுந்தான் நேர்காண லுக்குப் பொருத்தமானவர்கள் என்றில்லாமல், ஏனையோரும் இதில் இடம்பெறுகின்றனர். ஜூலை 2007 இதழில் மட்டக்களப்பில் கடமையாற்றும் இலங்கை வளிமண்டலவியல் அதிகாரி கண பதிப்பிள்ளை சூரியகுமார் அவர்களின் நேர்காணல் இடம்பெற்றது.

வானிலை எதிர்வு கூறும் இத்திணைக்க ளத்தில் சில முக்கியமான பணிகளும் இடம்பெறு கின்றன. அவரைப் பற்றிய ஒரு பிற்குறிப்பு பின்வரு மாறு அமைகிறது.

"திரு. க. சூரியகுமார் 1985ல் வளிமண்ட லவியல் அவதானியாக வளிமண்டல தொழில்நுட்ப சேவைக்குள் நுழைந்தார். தற்போது வளிமண் டலவியல் அதிகாரியாக, மட்டக்களப்புப் பிராந்திய அலுவலகப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றுகிறார். இவர் ஒரு கவிஞரும் கூட. அரச ஊழியர்களுக்கென கலாசார அமைச்சு நடாத்திய போட்டியில் 2003ம் ஆண்டில் கவிதைக்கான பரிசினை வென்றவர். இவரது அலுவலகத்திற்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கென விசேட உரை வழங்குவதில் வல்லவர்"

அதுசரி, வளிமண்டலத்துக்கும் கவித்திற னுக்கும் என்ன சம்மந்தம்? உண்மைதான். இந்த சூரியகுமாரின் தந்தைதான் பிரபலக் கவிஞர் "மூனா கானா" என்றால் விஷயம் தெளிவாகிறதல்லவா?

**துணுக்குச் செய்திகள்**

ஒவ்வொரு இதழிலும் இடம்பெறும் இத்தகைய செய்திகள் அறிவுக்கு விருந்தாகின்றன. தை 2008 இதழில் இடம்பெறும் துணுக்குச் செய்தி இது:

எலிப் பொறி (Mouse Trap) சாதனை படைத்த நாடகம். திரைப்படங்கள் நூறுநாள் ஓடினால் அல்லது இருநூறு நாள் ஓடினால் பெரும் அமர்க்களமாக விழாக்கள் நடப்பதுண்டு. ஓராண்டு காலம் ஓடிய திரைப்படங்களும் உண்டு. ஆனால், பல்லாண்டு காலம் நடைபெற்றது ஒரு நாடகம். லண்டன் நாடக அரங்கில் ஒரு நாள் கூட நிறுத்தி வைக்காமல் சுமார் 47 வருடங்களுக்கு மேல் நடைபெற்றது ஒரு நாடகம். அந்த நாடகம் (the Mouse Trap) த மௌஸ் ட்ராப். (பின்குறிப்பு: இந்நாடகத்தை எழுதியவர் பிரபல மர்மக்கதை எழுத்தாளர் 'அகதா கிறிஸ்ரி' என்பது குறிப்பிடத்தக்கது)




**பெப்ரவரி 2008 இதழில் உண்மைப் பணியில் ஊடகங்கள்**

2008ம் ஆண்டுக்கான உலகத் தொடர்பாடல் தினம் "உண் மைப் பணியில் ஊடகங்கள்" எனும் தலைப்பில் கொண்டாடப் படவுள்ளதாகத் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அண்மையில் தெரிவித் தார். உண்மைகளைத் தேடி அதனை மற்றவர்களுடன் பகிரும் பணியை ஊடகங்கள் என்றும் செய்யவேண்டும். இன்றைய ஊடகங்கள் இந்த மையக் கருத்தை நன்கு புரிந்துகொண்டு அதன்படி தமது பணிகளை மக்கள் மத்தியில் ஆற்றவேண்டும். ஆபத்துகள் அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில் உண்மையைத் தேடுவது மிகவும் சவால் நிறைந் தது. அத்துடன் அதனைத் தமக்குள் வைத்திருப்பதும் உண்மையான பணி என்றும் கூறமுடியாது. உண்மையைத் தேடி அதைப் பகிர்வது ஊடகங்களின் முக்கிய பணியாகும் என்று குறிப்பிட்டார் திருத்தந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஒவ்வொரு இதழிலும் சுவாரஷ்யமான பல துணுக்குச் செய்திகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

**அரசியல்**

ஓர் இலக்கிய சஞ்சிகையில் அரசியல் இடம்பெறலாமா? ஆம்! அது வாழ்வியலாக இருந்தால். இன்று மக்களைப் பாதிக்கின்ற ஏராளமான வாழ்வியற் பிரச்சினைகள் தவறான அரசியல் காரணமாகவே ஏற்பட்டன; ஏற்படுகின்றன. அந்த வகையில் தொண்டனில் இடம்பெறும் சில அரசியல் விடயங்கள் சிந்தனையைத் தூண்டுவதாக அமைகின்றன.

ஜனவரி 2008 இதழில் "தீர்வை முன்னிலைப்படுத்தாத தீர்மானம் பயனளிக்குமா?" என்ற தலைப்பில் பயனுள்ள அரசியல் அலசல் இடம்பெறுகிறது.

பெப்ரவரி 2008 இதழில் 'தேசிய ரீதியில்' ஒடுக்கப்படும் சிறுபான்மை மக்களைப் பாதுகாப்பதற்கு வலுவான சர்வதேச 'சிறுபான்மை சமூக நிறுவனமொன்றின் அவசியம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை.

மார்ச் 2008 இதழிலும் இக்கட்டுரை தொடர்கிறது. (இதை எழுதியவர் அதிரதன் - மட்டக்களப்பு)

ஏற்கனவே ஜூலை 2007 இதழில் "பேரின வாதமும் பிளவுபட்ட தேசிய வாதமும் 1921-2005" என்ற தலைப்பில் அரசியல் அலசல் இடம்பெறுகிறது.

ஒக்டோபர் - நவம்பர் 2007 இதழில் 'படுகொலைக் கலாசாரம் முடிவுக்கு வருமா?" என்ற தலைப்பில் 2007 செப்டம்பர் 26ம் திகதி மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அருள்தந்தை பாக்கிய ரஞ்சித் அவர்கள் கிளைமோர் தாக்குதலில் பலியான விபரம் எழுதப்பட்டுள்ளது.

இவையெல்லாம் அரசியல் மட்டுமல்ல. எமது மக்களின் ஜீவமரணப் போராட்டத்தின் மையமான வாழ்வியல் பரச்சினைகளாகும். 'தொண்டன்' இத்தகைய கட்டுரைகளையும் வழங்குவது வரவேற்புக்குரியது.

**குறும்பா**

'மகாகவி'யின் குறும்பா, கவிதை உலகில் ஒரு புது வாசலைத் திறந்தது. ஆனால், என்ன காரணமோ அக்கவிதை வடிவம் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை.

அண்மைக் காலமாகத் தொண்டனில் இடம்பெறும் குறும்பாக்கள் மகாகவியின் குறும்பாக்களையும் விட ஒருபடி மேலோங்கி நிற்பதை அவதானிக்க முடிகிறது.

மார்ச் 2008 இதழில்


**காருண்யம் வேண்டுவது புத்தம்
காண்பதுவோ நாடெல்லாம் ரத்தம்
காசுக்கு இரண்டு கொலை இலேசாகச் செய்திடலாம்
பேசுங்கள் உரிமைகளை நித்தம்**

ஏப்ரல் 2008 இதழில்

**நாடெல்லாம் தேர்தல்தான் பேச்சு
நாமெல்லாம் வாயில்லாப் பூச்சி
ஓடாகத் தேய்ந்தாலும் உயிர்வீடு சேர்ந்தாலும்
போடய்யா விரல்மீது பூச்சு**

ஜூன் 2008 இதழில்

**கண்நாவல் பழம்போல் கறுப்பு
காணும்பல் முத்துப்போல் சிரிப்பு
கல்யாணக் கதைவந்தால் காணிமனை காசுதேடும்
காதலனுக் குளடடி செருப்பு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே 2008 இதழில்

பெண்ணடிமை போதுமடா நிறுத்து
பேசுகிறார் அந்தோனி பெருத்து
எண்ணியஞ்சு இலட்சமதை இவர்வாங்கிக்
கல்யாணம்
பண்ணியது பலருக்குச் சிரிப்பு

இக்குறும்பாக்களை "மலர்" எழுதுகிறார். கஞ்சிக்குப் பயறு போட்டதுபோல் இது மிகவும் குறைவாகவே உள்ளது. ஒரு பொருளில் குறைந்தது நான்கு குறும்பாவாவது இடம்பெற்றால்தான் மனதுக்குத் திருப்தியாக அமையும்.

இனிவரும் இதழ்களில் இக்கோரிக்கை கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நம்புகிறேன்.

சமகால நிகழ்வுகள் நூற்றுக் கணக்கான குறும்பாக்களை எழுதுவதற்குத் தேவையான "தீனி"யைத் தாராளமாகத் தருகின்றது அல்லவா?

**தொகுப்புரை**

இது ஒரு Random Harvest மட்டுமே. இன்னும் ஏராளமான விடயங்கள் பற்றி எழுதவேண்டும் என மனம் குமுறிக்கொண்டிருக்கிறது. இடவசதி போதாதே. மலர்வேந்தன் எழுதும் விடயங்களும் ஆழியோன் எழுதும் விடயங்களும் என்றுமே மனதை விட்டு அகலாதவை.


ஆசிரியர் குழுவில் இடம்பெறும் மூவர் அவ்வப்போது காத்திரமான கட்டுரைகளை எழுதுகின்றனர். அவர்கள்:

01. மெற்றில்டா இராஜேந்திரம்
02. பெஸ்லியோ வாஸ்
03. வயலற் சந்திரசேகரம்

இவர்கள் எல்லோரையும் (மலர்வேந்தன் உட்பட) கூட்டிணைப்பவர் அருள்தந்தை றொஹான் பேணாட், இதழாசிரியர். ஆக இது ஒரு கூட்டு முயற்சி.

ஒரு நூலை வெளியிடுவது, ஒரு சஞ்சிகையை வெளியிடுவது ஒரு குழந்தையைப் பிரசவிப்பது போன்றது. "தீபம்" ஆசிரியர் நா.பார்த்தசாரதி கூறுவார் "தீபம் ஒவ்வோர் இதழும் மேசைக்கு வந்ததும் அதை ஒரு குழந்தையாகப் பார்த்து மகிழ்வேன்" இதே அனுபவம் "மலர்" சஞ்சிகை மூலம் எனக்கும் ஏற்பட்டது. அதே அனுபவம் "தொண்டன்" குழுவினர்க்கும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

**இது ஒரு Random Harvest மட்டுமே. இன்னும் ஏராளமான விடயங்கள் பற்றி எழுதவேண்டும் என மனம் குமுறிக்கொண்டிருக்கிறது.**



# கிறிஸ்மஸ் மரம்

நத்தார் வந்தாலே 'கிறிஸ்மஸ் மரம்' முக்கியம் பெற்றுவிடும். கிறிஸ்மஸ் மரமின்றி நத்தார் பூரணமாவதில்லை என்றே கூறலாம். ஆனால், இந்தப் பாரம்பரியம் எங்கிருந்து ஆரம்பித்தது எனப் பார்ப்போமானால், புனித பொனிபேசின் வரலாறுக்குச் செல்லவேண்டியிருக்கும்.

இவர் பல ஜேர்மனியர்களைக் கத்தோலிக்க விசுவாசத்திற்குக் கொண்டுவந்ததில் விசேடமாகப் பணி புரிந்தார். ஒரு தடவை "ஓக் மரம்" எனப்படும் சிந்தூர மரத்தை வணங்கும் அஞ்ஞானிகளின் குழு ஒன்றைச் சந்தித்தார். அவர் அதைக் கண்டதும் கோபப்பட்டார். எனவே அம்மரத்தை வெட்டிச் சரித்துவிட்டார். ஆனால், அந்த மரம் இருந்த இடத்திலே ஒருவகை தேவதாரு மரம் முளைக்க ஆரம்பித்தது. புனித பொனிபேஸ் இதைக் கண்டு, இறைவனிடம் இருந்து கிடைத்த ஓர் அடையாளமாக எடுத்துக் கொண்டார். அத்துடன் அது கிறிஸ்தவரின் அடையாளமாகவும் ஆக்கப்பட்டது. விக்டோரியா அரசி, இளவரசர் அல்பேட்டைத் திருமணம் செய்துகொண்டார். இளவரசர் இந்த மரம் ஒன்றை தம் மனைவிக்கு நத்தார் தினம் அன்று அன்பளிப்பாக வழங்கினார். இந்தப் பாரம்பரியம் இன்றுவரை அவரது தாய்நாடான ஜேர்மனியிலிருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்காலத்தையும் விடத் தற்காலம் மிக வேகமாக, துரிதமாக மாறிக்கொண்டிருக்கிறது. அறிவியலில், தொழில்நுட்பத்தில், விஞ்ஞானத்தில் வியக்கத்தக்க வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கிறான் மனிதன். தொடர்ச்சியான வளர்ச்சி தனி மனித வாழ்விலும் சமூகத்திலும் ஏன் உலகிலும் கூட மாற்றத்தை உண்டுபண்ணுவதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னரும் வாக்கு மனிதர் ஆனபோது இவ்வுலகில் பாரியதொரு மாற்றம் நிகழ்ந்தது. காலங்களைக் கடந்தவர் காலத்துக்குள் தன்னை அடக்கிக்கொண்டார். இடங்களைக் கடந்தவர் ஒரு குறிப்பிட்ட இடத்துக்குள் தன்னை முடக்கிக்கொண்டார். வாழுமுன் வரலாறு படைத்தவர் வரலாற்றில் நுழைந்ததும் ஒரு வரலாறாகி விட்டது. அவரது பிறப்பு மனித வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனைத்தான் அகில உலகமும் இன்று வியத்தகு முறையில் கொண்டாடிக்கொண்டிருக்கிறது.

விவிலியப் பேராசிரியர் ஒருவரின் கூற்றுப்படி விவிலியத்திலேயே மிக முக்கியமான வாக்கியம் எதுவெனில் "வாக்கு மனிதனானார், நம்மிடையே குடி கொண்டார்" என்பதுதான். அதாவது இறைவன் மனிதரிடையே குடி கொண்டார். இதுவே அதிசயங்களிலெல்லாம் மிகப்பெரிய அதிசயம். வார்த்தை பல வார்த்தைகளாக மாற்றமெடுப்பது அதிசயமல்ல. ஆனால் வார்த்தை மனிதவுரு எடுத்ததுதான் அதிசயமானது, அற்புதமானது. இறைவன் குழந்தையாக உருவெடுத்தார்.

இந்நிகழ்வு உலக வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கத்தை 'வாக்கு மனிதனானார்' என்ற மறையுண்மையின் தத்துவத்தைத் தியானிப்பதே மேலானது என உணர்ந்து தூய அசிசியார் போன்ற புனிதர்கள்




கிறிஸ்து பிறப்பு உலகுக்கு தரும் புதிய நற்செய்தியை சாதாரண மக்களும் புரிந்துகொள்ளக் கூடியவாறு விளக்கமளித்தனர். ஆனால் இன்று நாம் கிறிஸ்து பிறப்பை மாபெரும் விழாவாக மாற்றிவிட்டு வெறும் குடில் அலங்காரங்கள், பட்டாடைகள், பட்டாசுகள், வண்ண வண்ண மின் விளக்குகள், பல்சுவைப் பலகாரங்கள், வாழ்த்து அட்டைகள், இன்னிசை கீதங்கள் போன்றவற்றோடு கிறிஸ்து பிறப்பு விழாவை நிறுத்திவிடுகிறோம்.

உலக வரலாற்றில் பல மாமனிதர்கள் அவதரித்திருக்கின்றனர். ஆனால் யாருடைய பிறப்பையும் கிறிஸ்துவின் பிறப்போடு ஒப்பிட முடியாது. ஏனெனில் இயேசுவின் பிறப்பு மானிடத்திற்கே ஒரு மாபெரும் அடையாளமாய் இருந்தது.

கடவுளிடமிருந்து நாம்
பிறக்கவேண்டும்
என்பதற்காக
அவர் பெண்ணிடம்
பிறந்தவரானார்
எம்மை உயர்த்திட வேண்டி
அவர் -
தம்மையே தாழ்த்தினார்
நாம் உரிமை
மக்களாகும்படி - அவர்
அடிமையின் கோலம்
பூண்டார்
நாம் அவரது
நண்பராகும்படி - அவர்
சகல புறக்கணிப்பையும்
தாங்கிக்கொண்டார்
நாம் சகலதையும்
இலவசமாகப் பெறும்படியாக
அவர் தம்மையே
வெறுமையாக்கினார்

இதிலேதான் கிறிஸ்தவத்தின் தனித்துவம் மிளிர்கின்றது. அதாவது, இறைவனைத் தேடும் மனுக்குலத்தைப் பற்றி ஏனைய மதங்கள் யாவும் எடுத்துரைக்கையில், மனிதனைத் தேடும் இறைவனைப் பற்றியே கிறிஸ்தவம் பறைசாற்றுகின்றது. மனித தேடலில் சுயநலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிந்திருக்க, இறை தேடலில் அருளும் இரக்கமும் கரை புரண்டோடுகின்றன. இறைவன் மனிதனை எப்போது படைத்தானோ அன்றிருந்தே இறைவன் மனிதனைத் தேடும் படலம் தொடங்கிவிட்டது என்பதையும் அத்தேடலின் உச்சக்கட்டம், தொலைந்து போனதைத் தேடி மீட்க வந்த இறைமகன் கிறிஸ்துவின் பிறப்பில் அடைந்துவிட்டது என்பதையும் விவிலியம் மிகத் தெளிவாக எடுத்தியம்புகின்றது.

இழக்கமுடியாத ஒன்றை இழந்தவர்தான் அதைத் தேடுவதிலும் முனைப்பாக இருப்பார். தம் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் மாண்புக்குரியவன், மதிப்புக்குரியவன். அவன் இன்று மனித நேயத்தை இழந்து, மனித மாண்பினை இழந்து பரிதவிக்கிறான். அவனை மீண்டும் அதே நிலைக்குக் கொண்டுசெல்லவேண்டும் என்பதற்காக இறைவன் மனிதனானார் என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

வரலாற்றிற்கே வாழ்வு கொடுத்த பிறப்பு, இயேசுவின் பிறப்பு. வரலாற்றின் பாதையையும் பார்வையையும் மாற்றியமைத்தது இயேசுவின் பிறப்பு. புதிய பரிமாணங்களைத் தந்து, புத்துலகப் பரிமாணத்திற்கு அழைத்துச் சென்றது அவரது பிறப்பு. அவரது பிறப்பு கொண்டு வந்த மகிழ்ச்சியையும் அதிர்ச்சியையும் இன்றைய சமூகத்தில் உருவாக்கும் கடமை எமக்குண்டு.

எனவே, மாண்பினை இழந்து நின்ற மனிதனை மாண்பெனும் ஆடையால் போர்த்த வந்த மாபரனின் வழி நின்று முதலில் குழந்தைகளாக மாறுவோம். மனிதனை மனிதனிடமிருந்து பிரிக்கும் தடைச் சுவர்களைத் தகர்த்தெறிவோம். சாவின் சக்திகளுக்கு சாவு மணி அடிப்போம். மனித நேயத்தையும் மாண்பினையும் நிலைநாட்டும் இறையாட்சியின் கருவிகளாகச் செயல்பட எம்மையே அர்ப்பணிப்போம். சமாதானத்துக்காக ஏங்கும் உலகில் அமைதியின் தூதுவர்களாய்ச் செயல்படுவோம். குழந்தை இயேசு நம் உள்ளங்களில் குடிகொள்வாராக.

**பேரருள்தந்தை. பொன்னையா யோசப்**
**ஆண்டகை**

# வாழ்த்துகிறது
# கலாபம் கலை மன்றம்

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் சமூகத் தொடர்பு நிலையத்தினால் 1969ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாவது மலரின் முதல் இதழை விரித்த தொண்டனே! நாற்பது ஆண்டுகள் கடும் கஷ்டப்பட்டு, கஷ்டங்கள் நிறைந்த காலத்திலும் நீ பல இதழ்களை விரித்திருக்கின்றாய். இந்த நாற்பது ஆண்டுகளும் உன்னைப் பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் எங்களது வாழ்த்துகள். நீ இன்னும் பல ஆண்டுகள் சிறப்பாக இதழ் விரிக்கவேண்டுமென இறைவனை வேண்டுகிறோம்.

40 ஆண்டுகள் நிறைவு செய்து 41வது ஆண்டில் நுழையும் தொண்டனுக்கு கலாபம் கலை மன்ற அங்கத்தவர்களின் இனிய வாழ்த்துகள்.

**- மா. சு. வின்சன் -**
*இல - 80, 3ம் குறுக்குத் தெரு*
*மட்டக்களப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெறுவோர்

1ம் பரிசு 5000/-  2ம் பரிசு 3000/-  3ம் பரிசு 2000/-

'ஒரு சாதனை சரித்திரமாகிறது'
திருமதி. ஜூடித் ரவிச்சந்திரன்
இல: 349, ஏகாம்பரம் வீதி
திருகோணமலை

'இனிய நத்தார்'
திருமதி. சுதாகினி டெல்மன் நாகல்
இல: 104/2, எல்லை வீதி
செங்கலடி

'கைமாறு'
K. செரின்
இல: 93/2, நீதிமன்ற வீதி
திருகோணமலை

## ஆறுதல் பரிசு ரூபா 1000/-

'பிஞ்சு மனசு'
க. கியூரி
60, சகாய இல்லம், ஆசிரியர் சதுக்கம்
உவர்மலை, திருகோணமலை

'விடியலைத் தேடி'
திருமதி. லீலா சந்திரசிறி
அக்கரைப்பற்று - 08
அக்கரைப்பற்று

'தவறு எங்கே?'
அ. அனஸ்ரி அமலராணி
பாடசாலை வீதி, கோபாலபுரம்
நிலாவெளி, திருகோணமலை

'அந்த இரவில்'
த. துஷானா
புனித அருளானந்தர் வீதி
பெரிய கல்லாறு - 01, கல்லாறு

'மன்றாட்டுகளும் விசுவாசமும்'
திருமதி. கருணா லோகநாதன்
ஆலய வீதி
திருக்கோவில்

**போட்டியில் வென்ற அனைவருக்கும் பாராட்டுகள்**
**பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகள்**
**(ஆ-ர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டனே நீ வாழ்க!

ஈர் இருபது ஆண்டுகளாய்
ஈடில்லா இதழாய்
இன்றும் ஒளி தரும்
தொண்டனே நீ வாழ்க!
உன் தொண்டு வளர்க!

அன்று மலர்ந்த மல்லிகையே
இன்றும் மாறா மலராய்
மணம் திறம் மாறாமல்
மக்கள் கரத்தினில் மணம் வீசுகிறாயே
நீ வாழ்க!

நாட்டின் யுத்தம்
நம்மவரை திசை மாற்றிட்ட போதும்
நீ மட்டும் மறையாமல்
மங்கா ஒளியுடன் நிலைக்கிறாயே
நீ வாழ்க!

இயற்கை அனர்த்தம் இல்லவாசிகளை
இல்லாதொழித்திட்ட போதும்
இன்றும் துருப்பிடியாமல்
இருகரங்களில் தவழ்கிறாயே
நீ வாழ்க!

ஆசான்கள் பல மாறிட்ட போதும்
கூடவே நீயும் மாறாமல்
புதுப் புதுத் தகவல்களால்
வந்து விடுகிறாயே
நீ வாழ்க!

தொண்டுகள் பல புரிந்த உன்
ஆண்டுகள் பல கடந்திட்ட போதும்
வண்டுகள் சூழும் மலராட்டம்
செண்டு மலராய் கொண்டு வருகிறாயே
வாசனையை நீ வாழ்க!

முன்னட்டையில் உன் முகம் காட்டி
பின்னட்டை வரையும்
காற்றில் கலந்துவரும்
உன் அழகு தனியே
நீ வாழ்க!

சிறுவர் இளையோர் முதியோர்
என்ற பாகுபாடின்றி பக்கங்களை
புரட்ட வைக்கும் உன் பண்பே
உனை உயர வைக்கிறது
நீ வாழ்க!

வாடா மலராய் நீ மலர வேண்டும்
உன் வயது ஏற வேண்டும்
முதுமையிலும் நீ முத்தாக வேண்டும்
எம் தலைமுறைக்கு நீ சொத்தாக வேண்டும்
நீ வாழ்க!

- க. கியூரி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிறை சுதந்திரமாகிறது

- யூடித் ரவிச்சந்திரன் -
திருகோணமலை

சிறுகதைப் போட்டி

முதலாம் பரிசு



"தாயம்மா... தாயம்மா நம்மட நிவேதா கொலசிப்பில பாஸ் பண்ணியிருக்காளாம் புள்ள. பள்ளியால வந்த மோசேயிட மகன் சொல்லித்துப் போறான்"

சொல்லிக்கொண்டே பக்கத்து வீட்டு சிவக்கொழுந்து ஓடி வந்தாள். பின்னேரம் கடைக்குக் கொடுப்பதற்கான இடியப்ப மாவோடு மல்லுக்கட்டிக்கொண்டிருந்த தாயம்மா அடுப்பில் இருந்த விறகை நெரித்து உள்ளுக்குள் தள்ளிக்கொண்டு அடுப்பை ஊதியபோது அவள் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அது அடுப்புப் புகைத்ததால் வந்த கண்ணீரா? தனது சிதைந்துபோன வாழ்க்கையை நினைத்து அழுதாளா? மகள் சித்தியடைந்த சந்தோசத்தில் வந்த ஆனந்தக் கண்ணீரா? அவளுக்கே விளங்கவில்லை. எதையோ நினைத்துக்கொண்டவள் சட்டென்று தனது இடுப்பில் இருந்த சீத்தையில் முகத்தைத் துடைத்துக்கொண்டாள். துடைத்ததில் நெற்றியில் இருந்த குங்குமம் கண்ணீரோடு சேர்ந்து கறை படிந்த நிறமாய் சீத்தையில் அப்பிக்கொண்டது. தாயம்மாவைப் பொறுத்தவரையில் அவள் நெற்றியில் வைக்கும் குங்குமம் அவளையும் அவள் மகளையும் காப்பாற்ற பாவிக்கப்படும் ஓர் ஆயுதம் அவ்வளவுதான். ஏனென்றால் மகளுக்கு ஐந்து வயதாயிருக்கும்போதே தாயம்மாவை விட்டு கணவன் வேறு திருமணம் செய்துகொண்டான். அப்போதே தாயம்மாவின் திருமண வாழ்க்கை முடிந்து போயிற்று. உறவு என்று சொல்லிக்கொள்ள ஊரில் பல பெரிய புள்ளிகள் இருந்தபோதும் அவளுடன் உறவு கொண்டாட யாரும் வரவில்லை. எங்கே தாயம்மாவின் குடும்பச் சுமை தங்களில் பொறுத்துவிடுமோ என்ற பயம்தான். இப்போது நிவேதாவுக்கு தாயும் தந்தையுமாக அவளே வாழ்ந்துகொண்டிருக்கிறாள்.

"மனே எங்க நம்மட பேத்தி? சோதின பாசாம் மெய்தானா புள்ள" ஓட்டமும் நடையுமாக சுவக்கீனப்பு வந்துகொண்டிருந்தார்.

"எங்க புள்ள சின்னவள்" கிழவர் நிவேதாவைத் தேடினார்.

"வேப்பம்பழம் பொறுக்கிக்கொண்டு வாறனெண்டு கோயில் பக்கமா போனாளப்புச்சி"

தாயம்மா, வீட்டு வேலைக்கு என்று போன சமயங்களில் நிவேதா கோயிலடியைச் சுற்றியிருக்கும் வேப்பமர நிழலில் விளையாடி, வேப்பம் பழங்களைப் பொறுக்கிச் சாப்பிட்டு, வேப்பமரக் காற்றில் நித்திரை தூங்கி, கோயில் விறாந்தையில் படுத்துறங்கிய நாட்கள் பல. அந்த ஊறணி அந்தோனியார் கோயில் வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாள் நிவேதாவைத் தாலாட்டி வளர்த்திருக்கின்றது. சிந்தித்துக்கொண்டிருந்த தாயம்மாவின் சிந்தனையை நிவேதாவின் வருகை கலைத்தது.

"தாத்தாட்ட ஓடி வாடா... ஓடி வாடா.. எத்தின புள்ளையள் மனே உங்கட பள்ளியில் பாசாகியிருக்கறாங்க"

கேட்டுக்கொண்டே இடுப்பில் செருகியிருந்த பேப்பர் சரையை எடுத்து நிவேதாவின் கையில் கொடுத்தார். சரையைப் பறித்து வாங்கிய நிவேதா அவசரமாகப் பிரித்துப் பார்த்தாள். கலர் கலரான மிட்டாய்கள். நிவேதாவுக்கு ஒரே சந்தோசம்.

"தாத்தா, எங்கட பள்ளியில் பதினாலு பிள்ளையள் பாசாயிருக்கிறாங்க. நான் ரெண்டாவது ஆளாப் பாசாயிருக்கன். தாத்தா எனக்கு 143 மாக்ஸ்" மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள் சின்னவள்.

"மனே படிச்சி டீச்சரம்மாவா வரணும் தாயே. எல்லா உத்தியோகத்தையும்விட புள்ளையளுக்குப் பாடம் சொல்லிக்குடுக்கிற உத்தியோகம்தான் நல்லம் மனே. திருந்தாதி அடிக்கிற நேரமெல்லாம் புள்ளைக்காகத்தான் மண்டாடிறன்"

கலங்கிய கண்களைத் துடைத்தபடியே மரக்குற்றியிலிருந்து எழும்பிய சுவக்கீனப்பு கோயில் பக்கமாக நடந்தார்.

தாயம்மாவின் துக்கம் சந்தோசம் எல்லாவற்றிலும் பங்கெடுக்க பக்கத்து வீட்டு சிவக்கொழுந்தும் சுவக்கீனப்புவும்தான் இருந்தார்கள். தந்தை வழி உறவினர் என்று சொல்வதைவிட ஊறணி அந்தோனியார் கோயில் சக்கிருஸ்தி என்று சொன்னால்தான் சுவக்கீனப்புவை எல்லாருக்கும் தெரியும். அவரைப் பற்றித் தெரிந்துகொள்ளப் பெரிதாக ஒன்றுமில்லை.

பாரதி நினைத்த புதுமைப் பெண்ணாக தாயம்மா வாழ்ந்தாள். தனது வாழ்க்கையில் நடந்து முடிந்த கசப்பான சம்பவங்கள், ஈடு செய்யமுடியாத இழப்புகள், மறக்க முடியாத நிகழ்வுகள், மன்னிக்க முடியாத சந்தர்ப்பங்கள் என்று எத்தனையோ வேதனையை வாழ்வில் சந்தித்து விட்டாள். இருந்தாலும் எல்லாவற்றையும் மனதில் போட்டுப் பூட்டி தன்னை ஓர் இயந்திரமாக மாற்றி வாழ்ந்துகொண்டிருந்தாள் தனது மகளுக்காக. எப்போது விழுவோம் என்று சரிந்துபோயிருந்த வீட்டுச் சுவருக்கு ஒரு பக்கம் முண்டுகொடுத்து வைத்திருந்தாள். இருந்தாலும் கூட்டித் துப்புரவாக்கி அதற்கு ஏதோ களை கொடுத்திருந்தாள். வீட்டு மூலையில் தொங்கிக்கொண்டிருந்த பழுதடைந்த முகம் பார்க்கும் கண்ணாடியைத் தனது சீலைத் தலைப்பால் துடைத்துவிட்டு குங்குமத்தை வைக்க விரலை நீட்டியவள். ஒரு கணம் திகைத்துப் போனாள். அவளது காதோரம் எப்போதோ நரைத்திருந்தது. பழுப்படைந்த கண்ணாடிதான் இந்த நரையை பலநாள் மறைத்துவிட்டது என்பது அவளுக்கு விளங்கிற்று. இருந்தாலும் தன்னைச் சமாளித்துக்கொண்டாள்.

"எனக்கு நரைக்காதா பின்ன. நிவேதாவுக்கு பதினெட்டு வயதாயிற்று "




என்று தனக்குத் தானே பேசிக்கொண்டாள். 'கன்னியர் மடத்திலிருந்து நிவேதா படிக்கட்டும். அவளுக்கும் பாதுகாப்பாயிருக்கும். உனக்கும் கொஞ்சம் ஆறுதலாயிருக்கும்' என்று சுவக்கீனப்பு எத்தனையோ தரம் சொல்லியிருப்பார்.

'இல்லப்புச்சி புள்ள என்னோட இருந்தாத்தான் என்ர பாசமும் நான் படுற கஷ்டமும் விளங்கும்' என்று சொல்லி பிடிவாதமாய் இருந்துவிட்டாள் தாயம்மா. தனது பிள்ளையை நல்ல நிலைக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரவேண்டும் என்ற ஆசையும் வெறியும் தாயம்மாவை சமுதாயத்தில் நிறையவே போராடச் செய்தது. சளைக்காமல் போராடினாள். அந்தப் போராட்டம்தான் இன்று உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்குமளவிற்கு மகளைக் கொண்டுவந்தது.

கிணற்றடியில் உடுப்புக் கழுவிக்கொண்டிருந்த தாயம்மா நெஞ்சைப் பொத்தியபடி வீட்டோரமாக இருந்துவிட்டாள். கண்ணெல்லாம் இருட்ட அவளுக்கு ஏதோ செய்தது.

"புள்ள கொஞ்சம் தண்ணி கொண்டுவா"

என்று முனகிய குரலில் மகளைக் கூப்பிட்டாள். தாயின் நிலையை வந்து பார்த்தவள் பதறியடித்துக்கொண்டு சிவக்கொழுந்து மாமி என்று ஓடினாள். சிவக்கொழுந்து,

"என்ன புள்ள செய்யிது இப்பிடி வேர்க்கிது"

என்றவள் தெருவால் போன ஆட்டோவை நிறுத்திவிட்டு தாயம்மாவுக்கு வேறு சேலை மாற்றி ஆட்டோவில் ஏற்றினாள். வீட்டைப் பூட்டிக்கொண்டு நிவேதாவும் ஆட்டோவில் ஏற ஆட்டோ பெரிய ஆஸ்பத்திரியை அடைந்தது. தாயம்மா அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டாள். சில மணித்தியாலங்களின் பின் தாதியொருவர் வெளியே எட்டிப் பார்த்து சிவக்கொழுந்தை உள்ளே போக அனுமதித்தார். தாயம்மா சிவக்கொழுந்தை அருகில் அழைத்தாள்.

"அக்கா நிவேதாவ நல்ல ஒருத்தன்ர கையில பிடிச்சுக் கொடுக்கவேணும். அவள் தாயாக வேணும். அப்பத்தான் தாய்மையின்ர மகிம அவளுக்கு விளங்கும்"

"தாயம்மா ஏன் இப்ப உனக்கு இந்த யோசின? முதல்ல நீ சுகமாகி வீட்ட வா. பிறகு எல்லாம் யோசிப்பம்"

நிவேதாவைக் கேட்டாள் தாயம்மா. வைத்தியரின் அனுமதியோடு நிவேதா தாயைப் பார்க்க அனுமதிக்கப்பட்டாள். மகளைக் கண்ட சந்தோசத்தில் மெல்ல அவளைத் தடவினாள். ஏதோ நிறையச் சொல்லவேண்டும் என்று நினைத்தவள் தனது வார்த்தைகள் மகளை வேதனைப்படுத்திவிடக் கூடாது என்று மகளைப் பார்த்து புன்னகைத்தவள் நிவேதாவைப் பார்த்தபடியே விடைபெற்றாள்.

"அம்மா.......!"

என்று நெஞ்சு வெடிக்கக் கத்தினாள் நிவேதா. சிவக்கொழுந்து உள்ளே ஓடிப்போனாள். எல்லாம் முடிந்துவிட்டது. தனக்காக ஓடி ஓடி உழைத்த தாயின் கரங்களையும் கால்களையும் தடவித் தடவி அழுதாள் நிவேதா. அந்தக் கொடூரக் காட்சியை வர்ணிக்க முடியவில்லை. சிவக்கொழுந்துக்குப் பார்க்கவும் முடியவில்லை. தாயம்மாவின் உடல் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. சுவக்கீனப்பு தள்ளாடித் தடுமாறி தாயம்மாவைப் பார்க்க வந்தார்.

"என்ன வழியனுப்பி வைக்காம நீ போயிற்றியே தாயே"

என்று ஒப்பாரி வைத்து அழுதார். தாயம்மாவை மறந்துபோன பல உறவுகள் எதற்காகவோ அழுதுகொண்டிருந்தன. அவர்களைக் கண்டதில் சுவக்கீனப்புவுக்குச் சரியான கோபம். சேமக்காலைக்குச் செல்ல தாயம்மா ஆயத்தமானபோது சுவக்கீனப்பு ஒரு போர்வையைக் கொண்டுவந்து சவப் பெட்டியை மூடினார். அதில்

"எனது பிறப்பை விட இறப்பை மிகவும் நேசிக்கின்றேன். ஏனென்றால் சரித்திரம் புகழப்படும் நாள் இன்னாள்"

என்று எழுதப்பட்டிருந்தது. வாழ்க்கையில் எந்த சந்தோசத்தையும் அனுபவிக்காத இவளுடைய சரித்திரம் உண்மையிலேயே பெருமை வாய்ந்தது என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள். நல்லடக்கம் முடிந்தது. தாத்தா நிவேதாவுடன் கன்னியர் மடத்துக்குப் போய் பெரிய தாயாரைச் சந்தித்து அழுதார். அவர் அழுகையில் தாயார் எல்லாவற்றையும் புரிந்துகொண்டு நிவேதாவை அணைத்துக் கொண்டார்.

காலங்கள் யாரையும் கேட்காமல் மூன்றாண்டுகள் முடிந்தன. ஆசிரிய கலாசாலையிலிருந்து விடுமுறைக்காக நிவேதா கன்னியர் மடத்திற்கு வந்திருந்தாள். அன்று சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்துமாக்கள் தினம். நிவேதா தாயின் கல்லறையைத் துப்புரவாக்கி அலங்கரித்துக்கொண்டிருந்தாள். தாயின் நினைவுகள் அவளைப் பாடாய்ப் படுத்தியது. பூசைக்கு நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. கல்லறை தெரியாமல் சுவக்கீன் தாத்தா எங்கேயோ தேடிக்கொண்டிருந்தார். நிவேதா கண்டுவிட்டாள்.

"தாத்தா எனக்கு உங்கள வயோதிப மடத்தில உடனே வந்து பாக்க முடியல்ல"

என்று தேம்பித் தேம்பி அழுதாள். சுவக்கீன் தாத்தா அழவில்லை. தாயம்மாவை இளம் வயதில் பார்த்த சந்தோசம் அவருக்கு. தனது கையிலிருந்த பூக்கொத்தை தாயம்மாவின் கல்லறையில் வைத்தார். தனது இடுப்பில் செருகியிருந்த பேப்பர் சரையை எடுத்து நிவேதாவிடம் நீட்டி

"இது நீ டீச்சரம்மாவா வந்ததுக்கு"என்றார்.

நிவேதா சரையைப் பிரித்துப் பார்த்தாள். என்றோ பார்த்த கலர் கலர் மிட்டாய்கள். நிவேதா சிட்டாய்ச் சிரிக்க தாத்தா நெற்றியில் முத்தமிட்டார்.

# சிந்திக்கலாம்

க. கியூரி
உவர்மலை

- சோம்பேறியாய் இரு, அடுத்தவனைப் பற்றி குறை கூறுவதில்.
- முன் ஆசனங்களை வெறுக்கிறார் இவர் பூச்சியம்.
- வராண்டாக்களும் இப்போது சமையலறை. இது மெகாதொடர் காலம்
- உரிய காலத்தில் நீங்கிவிடும் சுமைகள். பாவம் பூமித்தாய்.
- மருந்து கண்டுபிடிக்கப்படாமல் எல்லோரையும் தொட்டுச்செல்கின்ற நோய் கவலை.
- பொழுது போக்கு அன்று, பொழுதையே போக்குகிறோம் இன்று. இது தொலைக்காட்சி அல்ல தொல்லைக்காட்சி
- அழும்போது ஊட்டப்படுகின்றது பால் பிள்ளைக்கு. அழுதபின் ஊற்றப்படுகின்றது பால் பிணத்துக்கு.
- அரை குறை ஆடைகள் தீர்ந்து விட்டனவென்றால், விற்பனையாகுபவை சேலைகளா? கைலேஞ்சிகளா?
- 'ஒன்றே போதும்' என்றவளின் பொய்க்கு சாட்சி இரண்டாம் பிரசவம்.
- மரணத்தை தடுக்கப் பணமா? அப்போ ஏழைகள்?
- கடவுள் பார்வையில் யாருமில்லை. மனித கணிப்பில் தன்னைத்தவிர ஏனையோர். யார் பாவி?
- பொய்க்குத் தண்டனையா? ஓடிச் சென்று கைதுசெய்யுங்கள் கவிஞர்களை.
- அறுபது ஏக்கர் சீதனமா? ஆறடி மட்டுமே உன் சொத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆண்டவரின் அன்பு விருந்து (இறுதி இராவுணவு)

திருமுழுக்கோடு இணைந்த அருளடையாளமாய் திருமுழுக்கினை நிறைவு செய்யும் அருளடையாளமாகவும் விளங்குவது திருவிருந்தாகும். இத்திருவிருந்திற்குப் பல பெயர்கள் உண்டு. அவையாவன: இயேசுவின் அன்பு விருந்து, பங்கேற்றலின் உணவு, அப்பம் பிட்கும் வழிபாடு எனவும் அழைக்கப்படுகிறது.

நற்செய்திகள் எழுதப்பட முன்பே ஆதி காலத் திருச்சபையிலிருந்து வந்த மரபை, பவுல் தன் கொரிந்திய மடலில் குறிப்பிடுகிறார். இவ்விருந்துக் கொண்டாட்டமானது அப்பம் பிட்டல் என அழைக்கப்படுகிறது (லூக்கா 24: 30-35). இவ்விருந்தில் பங்குகொள்ளுதலானது கிறிஸ்துவோடுள்ள உறவில் கிறிஸ்தவர்களிடையே உள்ள உறவின் வெளிப்பாடாக அமைகிறது.

மேலும், ஆண்டவரின் இவ்விருந்துக் கொண்டாட்டம் பற்றிக் கூறும் பவுல் மூன்று பகுதிகளில் இதனை விளக்குகிறார்.

- இவ்விருந்தில் நிலவிய மோசடிகள் பற்றியும்
- ஆண்டவர் இவ்விருந்தை நிறுவிய நிகழ்வு பற்றியும்
- தகுந்த முறையில் இவ்விருந்தில் பங்கெடுக்காவிடின் வரும் விளைவுகள் பற்றியும் கூறுகிறார்.

மேலும், மோசடிகள் பற்றிக் குறிப்பிடுகையில் ஆதிகாலத் திருச்சபையில் ஆலயங்கள் இல்லாததினால் வீடுகளிலே இவ்விருந்துக்கொண்டாட்டம் இடம்பெற்றதாகவும் இதில் ஏழைகளும் பணக்காரரும் பங்குபற்றியதாகவும் கூறப்படுகிறது. இவ்விருந்தானது சனி மாலையிலேயே இடம்பெற்றது. பின்னர் ஞாயிறு தினத்திற்கு இடம்பெற வழிவகுத்தது. இங்கு அனைவரும் தாம் வீடுகளில் இருந்து கொண்டுவந்த உணவினைப் பாகுபாடின்றி பகிர்ந்து உண்டனர். ஆனால், காலப்போக்கில் வசதி படைத்தோர் வசதி படைத்தவர்களுடனேயே சேர்ந்து உண்ணலானார்கள். இதனால் ஏழைகள், பிந்தி வந்தவர்கள் பட்டினி கிடக்க நேரிட்டது. சிலர் மது அருந்தவும் தொடங்கினர். இதனால் காலப்போக்கில் இங்கு பகிர்தல் மனப்பான்மை அற்றுப்போய்விட்டது. இதனால் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடுகள் கொரிந்தியத் திருச்சபையில் தலைதூக்கலானது. எனவே ஆண்டரின் இவ்வன்பு விருந்தில் பங்கேற்பதில் பல தடைகள் தோன்றியது. எனவே இச்சிக்கலைத் தீர்க்க பவுல் ஆண்டவரின் திருவிருந்து பற்றிச சரியான புரிதலை அவர்கள் மத்தியில் முன்வைக்கிறார்.

மற்றும் ஆண்டவரின் இவ்விருந்தை நிறுவிய முறையானது, அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட இவ்விரவிலேயே ஏற்படுத்தினார். "இதை என் நினைவாகச் செய்யுங்கள் எனும் வேண்டுகோளையும் முன்வைக்கிறார். எனவேதான் இன்று நாம் அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகும்போதெல்லம் அம்மகிமை நிறைந்த திருவுணவில் பங்கெடுத்தலை உணரக் கூடியதாய் உள்ளது.

அடுத்து தவறான முறையில் இதனை உட்கொண்டால் ஏற்படும் விளைவுகள் பற்றிக் கூறும் பவுல் அவர்கள் மத்தியில் நிலவிய ஒற்றுமையின்மை நன்னயமற்ற தன்மை, அன்பற்ற தன்மை என்பன இவ்வுணவை உண்ண முரண்பாடானது எனக் குற்றம் சாட்டுகிறார். இயேசு தன் உடலையும் இரத்தத்தையும் நமக்காய்த் தியாகம் செய்தலே இவ்வன்பு விருந்து. எனவே, இதனை அர்த்தமுள்ள முறையில் கொண்டாடும்படி பணிக்கிறார். எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டு ஆண்டவரின் திருக்கிண்ணத்தில் பருகினால் அவன் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறான். எனவே ஒவ்வொருவரும் தம்மை சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகவேண்டும். ஏனெனில், ஆண்டவரின் உடல் என உணராமல் உண்டு பருகுபவன் மீது தண்டனைத் தீர்ப்பு வந்தே சேரும் (1 கொரி 11:27-29).

எனவே, நாம் அப்பத்தைப் பகிர்ந்து உண்ணுதல் மூலம் நம் ஒற்றுமையினை வெளிக்காட்ட முடியும். அப்பம் ஒன்றே ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் அனைவருமே ஒரே அப்பத்தில்தான் பங்கெடுக்கின்றோம். எனவே இவ்வன்பு விருந்தினை உண்ணும் நாம் எவ்வித பாகுபாடுகளோ, பிரிவினைகளோ, ஏற்றத் தாழ்வுகளோ இல்லாமல் தகுதியான நிலையில், அர்த்தமுள்ள முறையில் சகோதர மனப்பான்மையுடன் ஆண்டவரின் திருவிருந்தில் பங்கெடுப்போம். அவருடைய மறுவருகை வரை இதனை நினைவு கூருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' அருட்தந்தையும் இயேசு சபைத் துறவியுமான கலாநிதி சி.பி.இராஜேந்திரம் அடிகளாரைச் சந்தித்தோம். தொடர்பாடல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற அடிகளார் அவர்கள் 1983ம் ஆண்டிலிருந்து 1988ன் நடுப்பகுதி வரை திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தின் இயக்குனராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. 1983ம் ஆண்டு திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்ட பேரருள்தந்தை. கலாநிதி. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் அதே ஆண்டில் சமூகத் தொடர்பு நிலையத்துக்கு இருவரை நியமனம் செய்தார்கள். அவர்களில் ஒருவர் அருள்தந்தை சி.பி. இராஜேந்திரம் (யே.ச) அடிகளார், மற்றையவர் திரு. எஸ். எஸ். ஜேசுதாஸ் (மலர்வேந்தன்) அவர்கள். கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அருள்பணி. பேராசிரியர் கை. இரஜேந்திரம் (யே.ச) அடிகளார் மற்றும் அருள் பணி. கலாநிதி. சி.பி. இராஜேந்திரம் (யே.ச) அடிகளார் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றும் அருள்பணி. சி.பி. இராஜேந்திரம் (யே.ச) அடிகளார் அவர்கள் தனது இந்திய விஜயம் ஒன்றின் பின்னர் சில மணி நேரங்கள் மட்டுமே மட்டக்களப்பு மிக்கேல் கல்லூரி வளாகத்தில் தங்கியிருந்த வேளையில் எமக்காக நேரம் ஒதுக்கித் தந்து பேருதவி புரிந்தார்.

**வணக்கம்! அருள்தந்தை அவர்களே! உங்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லுங்களேன்.**

வணக்கம்! என்னைப் பற்றிச் சொல்லுவதற்குப் பெரிதாக ஒன்றுமில்லை. எனது குருப்பட்டத்தின் பின் இந்தியாவின் கல்கத்தா நகரில் உள்ள 'சித்திரபாணி' என்னும் தொடர்பூடக நிலையமொன்றில் Communication பற்றிக் கற்கும் வாய்ப்புக் கிட்டியது. அங்கு சினிமாத் துறை பற்றி அருள்பணி கஸ்ரோன் ரூபாரிஸ் (கனடா) அடிகளார் அவர்களிடம் கற்றுக்கொண்டேன். அவர் பூனே திரைப்படக் கல்லூரியிலும் விரிவுரையாளராக இருந்தார். (குறிப்பு: மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபல இயக்குனர் பாலு மகேந்திரா பூனே திரைப்படக்கல்லூரியின் முன்னாள் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது)

**அப்படியானால் அக்கால கட்டத்தில் திரைப்படங்கள் எதையும் தயாரித்தீர்களா?**

இரண்டு குறுந்திரைப்படங்களை செய்முறைக்காகத் தயாரித்துள்ளேன். படம் தனிப் பிலிம் சுருளிலும் ஒலி வேறு சுருளிலும் ஆக்கப்பட்டு அவை ஆய்வு கூடத்தில் ஒன்றிணைக்கப்பட்டுத் தரப்படும். இன்றுள்ள வசதிகள் அக்காலத்தில் இல்லை. அந்நிறுவனத்தில் பெற்ற கல்வியானது எனக்கு இத்துறையில் மிகவும் ஆர்வத்தையும் உந்து சக்தியையும் தந்தது.

**உங்கள் முதுமாணிப் பட்டக் கற்கைகள் பற்றிச் சொல்ல**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமா?

1978ம் ஆண்டு அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் என்னும் நகரிலுள்ள "லோயலா மெரி மாண்ட்" பல்கலைக்கழகத்தில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தயாரிப்பு என்னும் துறையில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டேன் (Masters in Film and T.V Product).

**அப்படியானால் உங்கள் கலாநிதிப் பட்டத்தை எங்கு, எத்துறையில் பெற்றுக் கொண்டீர்கள்?**

அமெரிக்காவில் கொலம்பஸ் என்னும் இடத்தில் உள்ள "றொகாயோ அரசினர் பல்கலைக் கழகத்தில்" Inter Cultural Communication என்னும் துறையில் 1989ம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டேன்.

**உங்கள் குருத்துவப் பணி தவிர கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்திலும் சிறப்புப் பணியாற்றியுள்ளீர்கள். அவை பற்றி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

ஆம்! ஆரம்பத்தில் திருமலை வளாகத்தில் வருகைதரு விரிவுரையாளராக இணைந்துகொண்டேன். பின்னர் விரிவுரையாளராக, சிரேஷ்ட விரிவுரையாளராக பதவிகளைப் பெற்றுக்கொண்டேன். சில காலங்களின் பின்னர் திணைக்களத் தலைவராக நியமிக்கப்பட்டேன். தொடர்ந்து பீடாதிபதியாகவும் கடமையாற்றிய பின்னர் வளாகத் தலைவராகவும் கடமையாற்றினேன்.

**தற்போது என்ன செய்கின்றீர்கள்?**

தற்போது கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்துடன் இணைக்கப்பட்டுள்ளேன். அத்துடன் "வன்முறை சாரா தொடர்பாடலுக்கான அமைப்பு" (Foundation for Nonviolence Communication) என்ற ஒன்றினை அமைத்து பணிபுரிந்து வருகின்றேன்.

**திருமலை வளாகத்தில் தொடர்பாடல் துறை தொடர்பான பட்டப்படிப்புகள் பற்றிக் கூறமுடியுமா?**

மூன்றாண்டு, நான்காண்டு பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. படிப்புக் காலத்தில் சிறு வீடியோ தயாரிப்புகளை தயாரிக்கவேண்டும். மிகவும் ஈடுபாடான கற்கைநெறி.

**இத்துறையில் படித்த மாணவர்களின் தொழில்வாய்ப்புகள் பற்றி....?**

திருமலை வளாகத்தில் இத்துறைப் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்துகொண்ட எல்லா மாணவர்களும் சிறப்பான தொழில் வாய்ப்புகளை, நல்ல சம்பளத்தில் பெற்றுள்ளார்கள். சிலர் பிற உயர் கல்வி நிறுவனங்களில் முதுமாணிப் பட்டப்படிப்பினை மேற்கொண்டுள்ளார்கள்.

**தொடர்பாடல் பற்றி சில விளக்கம் தருவீர்களா....?**

தொடர்பாடலில் இரண்டு மாதிரிகள் (Models) உள்ளன. ஒரு மாதிரி – 'டிரான்ஸ்மிஷன் மொடல்' எனப்படும். மற்றைய மாதிரி 'றீச்சுவல் மொடல்' எனப்படும். 'டிரான்ஸ்மிஷன் மொடலில்' செய்தி சொல்பவர் என்பவரும் செய்தியைப் பெறுபவரும் இருப்பார்கள்; 'றீச்சுவல் மொடலில்' இவ்வேறுபாடு இல்லை. எல்லோரும் செய்தியைக் கொடுப்பவர்களாகவும் எல்லோரும் செய்தியைப் பெறுபவர்களாகவும் இருப்பார்கள். பின்னைய 'மாதிரி'தான் இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. இங்கு பின்னூட்டல் (Feedback) காணப்படும். வாழ்க்கை நீடித்த கல்வி என்ற அம்சம் இம்மாதிரியில் உள்ளடங்கும். அதாவது சொல்பவரும் பெறுபவரும் வேறுபாடு இல்லையாதலால் அனைவரும் எல்லா வேளைகளிலும் கற்றுக்கொண்டேயிருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'வன்முறை சாரா தொடர் பாடல்' என்றால் என்ன?**

ஆட்களை தொடர்புபடுத்தும் ஒரு வகையான முறைமை, உறவுகளைக் கட்டியெழுப்புதல், சமூக மாற்றங்களை ஏற்படுத்துதல், உளவியல் ஆற்றுப் படுத்தல் என்பன இவ்வகையான தொடர்பாடலில் உள்ள முக்கிய அம்சங்களாகும். இலங்கையைப் போன்ற சமூகப் பிணக்குகள் உள்ள நாடுகளில் இவ்வகையான தொடர்பாடல் அவசியம்.

"மார்ஷல் றோசன் பேக்" என்பவரிடம் "வன் முறை சாரா தொடர்பாடல்" தொடர்பான பயிற்சி களைப் பெற்றுக்கொண்டேன். இப்போது அதற்கான வளவாளராக உள்ளேன். பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன வற்றில் இது தொடர்பான பயிற்சி நெறிகளை நடத்தி யுள்ளோம். அண்மையில்கூட இந்தியாவின் சில கல்லூரிகளில் இதை நடத்திவிட்டுத்தான் வந்துள் ளேன். www.cnbc.org என்னும் இணைய விலா சத்தில் 'வன்முறை சாரா தொடர்பாடல்' பற்றி அறிந்து கொள்ளலாம்.

**திருகோணமலை – மட்டக் களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தில் இயக் குனராகப் பணியாற்றியுள் ளீர்கள். இது தொடர்பாக உங்களது அனுபவங்கள்....?**

நான் 1983ம் ஆண்டில் இருந்து இயக்கு னராகப் பணியாற்றியுள்ளேன். எனது காலத்தில் "தொண்டனின்" அபிவிருத்திக்காகவும் வானொலி நிகழ்ச்சிகளின் தரத்திற்காகவும் முயற்சிகள் பல செய்துள்ளேன் என நம்புகின்றேன். இதற்கு ஆயர் அவர்களும், மலர்வேந்தன் அவர்களும் பெருமளவு ஒத்துழைப்பு வழங்கினார்கள். அக்காலகட்டத்தில் "தரம் வாய்ந்த ஒலிப்பதிவுக்கூடம்" ஒன்றை அமைத் தோம். அத்துடன் வீடியோ தொடர்பான கலையகம் ஒன்றையும் அமைப்பதற்கான முயற்சிகளையும் எடுத்திருந்தேன்.

**தற்போதைய நிலையில் "தொண்டன்", "சமூகத் தொடர்பு நிலையம்" பற்றி உங்கள் அபிப் பிராயம், ஆலோசனைகள் என்ன?**

தொண்டனின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாக உள்ளது. ஆனால் இன்னும் வேலை செய்யவேண்டும். பத்திரிகை வெளியிடுவது மாத்திரமல்ல; அது தொடர்பான பயிற்சிநெறிகளையும் நடத்தவேண்டும். இது ஒரு பொறுப்பு மிக்க பாரிய நிறுவனம். 'கிறிஸ்தவ விழுமிய அடிப்படையில்' செயற்படும் இது சமூக நீதிக் காகவும் பணிபுரிய வேண்டும். நம் நாட்டில் அது சற்றுக் கடினமான காரியம் தான்.

இங்கு பணியாற்றுபவர்கள் தங்கள் தராத ரங்களை மேலும் மேலும் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு செல்லவேண்டும்.

ஊடகத்துறை தொடர்பாக சிறு பயிற்சி நெறி களை ஆரம்பத்தில் நடத்தலாம். இதனால் பயிற்சி பெற்ற ஒரு குழுவினர் உண்டாகுவர். இவர்கள் தமது இடங்களில் இருந்தவாறு "தொண்டனுக்கு" பணி யாற்றவும் சந்தர்ப்பம் உண்டாகும். காலப்போக்கில் "டிப்ளோமா" பல்கலைக்கழகங்களுடன் இணைக் கப்பட்டு பட்டச் சான்றிதழ்களையும் வழங்கவும் வாய்ப்புகள் ஏற்படுத்தலாம்.

இதுமட்டுமல்ல ஒலிபரப்புத் துறையுடன் இணைத்து தொலைக்காட்சி தொடர்பான, ஒளிப் பதிவு தொடர்பான விடயங்களையும் சமூகத் தொடர்பு நிலையம் மேற்கொள்ளவேண்டும். இதற்கு பணச் செலவு உண்டாகலாம்; என்றாலும் தயங்கக் கூடாது; நாமும் முன்னோக்கிச் செல்லவேண்டும்.

**எமது வாசகர்கட்கு நீங் கள் சொல்ல விரும்பும் விடய மென்ன?**

"தொண்டனை" ஊக்குவியுங்கள்; நிறைய எழுதுங்கள். பங்குதளங்களில் பங்குத்தந்தையர்களின் உதவியுடன் விற்பனையைப் பெருக்குங்கள்.

*ஈற்றில் 'தொண்டனின்' சார்பில் அருள்தந்தைக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டோம்*



- ஆழியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தின் மகிமை

நேரத்தின் மகிமை, சிறப்பு, அதன் பெறுமதி இவற்றையெல்லாம் இலங்கையில் தொண்ணூறு சதவீதமானவர்கள் சீர்தூக்கிப் பார்ப்பதே இல்லை. ஆனாலும், தற்போது காரியாலயக் கருத்தரங்குகளில் நேர முகாமைத்துவம் பற்றி சிறிது பிரஸ்தாபிக்கப்படுவதென்னவோ உண்மைதான். ஆனால் அமுல்படுத்தப் படுகிறதா? என்று கேட்டால் விடை தருவது சிறிது சிரமந்தான். நேர முகாமைத்துவம் பற்றி பேசுபவரிடமே நேர முகாமைத்துவம் முடங்கி விடுகிறது. அதற்கு அர்த்த பூர்வமான காரணங்கள் இருக்கலாம். வேலைப் பழு, போக்குவரத்துச் சீர்கேடுகள், நாட்டின் பதற்ற நிலை, சீரற்ற காலநிலை, சீரற்ற மனநிலை இப்படி வரிசைப் படுத்திக்கொண்டே போகலாம்.

வீணான கதையிலேயே நேரத்தை கரியாக்கும் சமர்த்தர்கள் உலகில், இந்தியத் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும்தான் உள்ளார்கள் என்று பலரும் கூறுவர். ஜப்பானியர்கள் நேர முகாமைத்துவத்தால் நிறைய வெற்றி களைப் பெற்றவர்கள். ஜப்பானிய தேசியகீதம்தான் உலகிலேயே மிகச் சிறியதாம். காரணம் நேரத்தை வீணாக்க அவர்களுக்கு விருப்பமேயில்லையாம். ஜப்பானியருக்கு யாராவது கைக்கடிகாரத்தைப் பரிசாகக் கொடுத்தால் அதை அவர்கள் விரும்பமாட்டார்களாம். தம்மை ஏளனப் படுத்த வேண்டாம் எனக் கூறிவிட்டு மணிக்கூட்டை



வீசிவிடுவார்களாம்.

மாவீரன் நெப்போலியன் பொர்ணபாட் ரஷ்ய நாட்டைக் கைபற்றியபோது ஊடகவியலாளர்கள் அவரைப் பேட்டி கண்டார்களாம். "இந்த மாபெரும் வெற்றியின் இரகசியந்தான் என்ன?" அதற்கு நெப்போலியன் கூறிய பதில் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதாம். "ரஷ்யர்கள் ஐந்து நிமிடத்தின் பெருமையை உணராததுதான் எமது வெற்றியின் இரகசியம்" என்று கூறினானாம். ஒரு நேர்முகப் பரீட்சைக்கு ஐந்து நிமிடம் பிந்திப் போனால் மூடியிருக்கும் கதவைப் பார்த்துவிட்டு திரும்பவேண்டியதுதான்.

ஒலிம்பிக்கில் சுசந்திக்கா பத்து செக்கன் முந்தி ஓடியிருந்தால் வெண்கலப் பதக்கத்தை விட தங்கப் பதக்கத்தையே பெற்றிருப்பார். வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்ததிற்கே ஐம்பது இலட்சம் ரூபாவை முன்னைய நாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க சுசந்திக்காவுக்குக் கொடுப்பாராக இருந்தால் தங்கப்பதக்கத்திற்கு ஒரு கோடி ஐம்பது இலட்சம் கொடுத்திருப்பார். அப்படி நோக்கினால் பத்து செக்கனின் உண்மைப் பெறுமதி ஒரு கோடி ஐம்பது இலட்சம். எனவே நாம் நேரத்தின் பெறுமதியை இன்னும் இனங்காணவே இல்லை.

இலங்கையில் ஒரு மனிதன் ஒரு நாளைக்கு சராசரி மூன்று மணித்தியாலத்தை பிறரது ஆவலாதி, அவதூறு கதைத்து கரியாக்குகிறான் என்று பார்த்தால் இலங்கையின் சனத்தொகை ஒரு கோடி எண்பது இலட்சம். ஆகவே, ஒரு நாளைக்கு ஆவலாதியில் அநியாயமான மணித்தியாலங்கள் 1.80X3=5.40. ஐந்து கோடியே 40 இலட்சம் மணித்தியாலங்கள். இதே அளவை வருடத்திற்குள் நோக்கினால் 1971 கோடி மணித்தியாலங்கள் நாசமாகிறது.

இந்த நேர மகத்துவம் பற்றி இலக்கியக் கண்ணோட்டத்தைப் பார்ப்போம், இந்தியாவில் "போஜராஜா" என்ற மன்னன் ஒரு நாட்டை ஆட்சி செய்து வந்தாராம். அவரது அவையின் ஆஸ்தான கவிஞராக காளிதாசன் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் போஜராஜா கவிஞர் காளி தாசரைப் பார்த்து "கவிஞரே! நான் இறந்தபின்பு இரங்கற்பாவை எவ்வாறு பாடுவீர்கள்? அதை இப்போதே பாடிக் காட்டுங்கள்" என்றாராம். "அரசே! இது என்ன விபரீதமான ஆசை. இரங்கற்பாவை உயிருடன் இருப்பவருக்குப் பாடினால் அன்னார் உண்மையாகவே இறந்துவிடுவாரே" என்றாராம். மன்னர் உடனே கோபங்கொண்டு "எனது கட்டளையை நீ உதாசீனம் செய்துவிட்டாய், இந்த நிமிடமே நாட்டை விட்டுப் போய்விடு" என்றாராம். கவிஞர் காளிதாசனும் நாட்டை விட்டுப் போய விட்டாராம். கவிஞர் போனபின்புதான் போஜ ராஜாவிற்கு அவரது அருமை, பெருமை, திறமை புரிந்ததாம். கவலைப்பட்டாராம். எப்படியும் கவிஞர் காளிதாசரைக் கண்டு பிடிப்பதற்காகப் புறப் பட்டார் போஜராஜா. குடுகுடுப்பைக்காரன் வேடம் பூண்டு ஒவ் வொரு நகராகச் சுற்றி வந்தார்.

ஒரு நகரில் இறைச்சிக்கடை அருகில் காவி உடை தரித்த சன்னியாசி ஒருவரை போஜராஜா காண்கிறார். ராஜா இனங்கண்டுகொண்டார். இந்த சன்னியாசி கவிஞர் காளிதாசர்தான். ஆனால் காளிதாசருக்கு அரசனை இனங் காண முடியவில்லை. அரசனுக்கோ குடுகுடுப் பைக்கார னது வேடம் மிகமிகப் பொருத்த மாகவே இருந்தது. கவிஞரை நோக்கி அரசன் "சுவாமி! நீங்கள் காவி உடை தரித்த சுவாமி மாமிசம் உண்ணலாமா?" அதற்குக் கவிஞர் கூறினார் "எனக்கு மாமிசம் உண்ணும் பழக்கம் இல்லைதான், எப்போதாவது மது அருந்தினால் மாமிசம் உண் பேன். ஏன் உங்கள் நாட்டில் இவை கிடை யாதோ? நீங்கள் எந்த நாட்டவர்?" "நான் தாரா நகரத்தவன்"

"ஆ! தாரா நகர

## பாலன் வரவால் ஞாலம் மகிழும்

*உருகிவரும் எரிமலையின் பெரிதான தீப்பிளம்பும்*
*உன் வருகை உறுதியெனத் தணியும்.*
*பரிதியொளி முன்படர்ந்த பனியெனவே எமை மூடிப்*
*படர்ந்த துயர் விரைந்தோடி மறையும்*

*தேசமுற்றும் நாசமுற தெருத்தோறும் ஏரோதாம்*
*தீயவனின் வாரிசுகள் போடுகின்ற ஆட்டங்கள் மறையும்*

*நேசமுள்ள நெஞ்சுகளில் கூசாமல் வேல் பாய்ச்சும்*
*நீசர் குழு நெடுந்தூரம் போயொதுங்கி விலகும்.*

*தொண்டு பல புரிவதெனக் குண்டுகளை மக்களின்மேல்*
*கொண்டுவந்து கொட்டுவோர் தம் கொடிய கரம் உன்முன்னே கூம்பும்.*

*செண்டு மலர் பாதத்தை சேவிக்கும் பாவியர்கள்*
*சிந்தை தனில் புதிய வொளி சேருவதைக் கண்டுலகு மகிழும்.*

*புனித மனங் கொண்டோர் மேல் அநியாய பழி சுமத்தும்*
*பொல்லாத சதிகாரர் பொய் வேட முக மூடி கிழியும்.*
*மனிதாபி மானத்தை மறந்தோர்கள் போய் மறைந்து*
*வைய மெங்கும் மனித மனம் மகிழ்வென்னும் புனலாடிக்குளிரும்.*


*காரிருளை நீக்கியிந்தப் பாருலகை மீட்கவெனக்*
*காந்த விழிச் சாந்த சுதன் கன்னிமரி மடி தவழுங் கோலம்*
*வேரில் விழு நீரெனவே வேதனைகள் தனை மாற்றி*
*விடிவு தரக் கண்டு துள்ளுஞ் ஞாலம்.*



கவிஞர் நிலாதமிழின்தாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னன் எனக்கு மிக வேண்டியவர். அவர் சுகமாக இருக்கிறாரா?"

"ஐயோ! அவர் நேற்றுத்தான் இறந்து போனார்.

"அப்படியா..!" என்று கண்கலங்கினார் கவிஞர். துயரம் மேலோங்கவே இரங்கற்பா பாட ஆரம்பித்தார். பாடலைப் பாடி முடியவே குடுகுடுப்பைக் காரன் வேடத்திலிருந்த ராஜா கீழே விழுந்து மரணமானார். கவிஞர் புரிந்துகொண்டார் இவர் போஜராஜாதான் என்று.

உடனே சரஸ்வதியிடம் வரங்கேட்டு அழுதார். சரஸ்வதி தோன்றி, "என்ன வேண்டும்?" என்றார். கவிஞரும் போஜராஜாவை உயிர்ப்பித்துத் தரவேண்டுமென்றார். அதற்கு சரஸ்வதி கூறினார்,

"ஆக மூன்று மணிநேரம் போஜராஜாவுக்கு உயிர்ப்பிச்சை தருகிறேன்" என்று கூறிவிட்டு மறைந்து போனாராம். ராஜா உயிர் பெற்றெழ, கவிஞர் விடயத்தைக் கூற, ராஜா கவிஞருக்கு நன்றி கூறிவிட்டு "கவிஞரே! நாம் இருவரும் இந்த மூன்று மணித்தியாலங்களுக்குள் காவியம் ஒன்று படைக்கவேண்டும். இருவரும் பாடுவோம்" என்று கூறி அக்கணமே இருவரும் பாடி எழுதி முடித்தார்களாம். அந்தக் காவியந்தான் "போஜசம்பு" என்றழைக்கப்படும் காவியம். மூன்று மணித்தியாலங்கள் முடிந்தன. போஜராஜாவும் இறந்தார். ஆனால், மூன்று மணித்தியாலங்களுக்குள் படைத்த "போஜசம்பு" சாகவில்லை. இன்றும் சரித்திரப் புகழ் படைக்கிறது.

இப்போது உங்களுக்கு இந்நிலை ஏற்பட்டால் அந்த மூன்று மணித்தியாலங்களுக்குள் என்ன செய்வீர்கள்? அனேகரிடம் நான் கேட்டேன். விதம் விதமான பதில் வந்தது. ஒரு வக்கீல் சொன்னார் "உடனே உயில் எழுதுவேன்"

நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் நீங்களும் மேதைகள்தான்.

**வயலற் சந்திரசேகரம்**

# சொர்க்கத்தின் கோயில்



சீனாவில் பீஜிங் நகரில் மறுக்கப்பட்ட நகரமொன்று இருக்கிறது. அதாவது அரசாட்சிகள் நடந்த காலகட்டத்தில் அரச பரம்பரையினர் மட்டுமே இந்த நகருக்குள் வலம் வருவார்களாம். சாமானிய மக்கள் அந்த நகரை எட்டிக்கூடப் பார்க்கமுடியாத அளவுக்குக் கெடுபிடிகள் இருக்குமாம். இளவரசர்கள் முடி சூடும் காலம்வரை இந்த நகருக்குள்ளேயேதான் இருப்பார்கள். அந்த நகருக்குள் 980 கட்டிடங்களும் அவற்றில் 8707அறைகளும் இருக்கின்றன. அரசர்கள் சொர்கத்திலிருந்து பிறந்தவர்கள் என்கிற நம்பிக்கை சீன மக்களிடம் இருந்திருக்கிறது. அதனால் யோங்கில் என்ற அரசன் சொர்கத்தின் கோயிலைக் கட்டினான். கட்டிடக்கலையின் உச்சமாக சொர்கத்தின் கோயிலைச் சொல்கிறது யுனெஸ்கோ அமைப்பு. இந்தக் கோயிலை மூன்றடுக்குக் கோயிலாக மாற்றி மேலும் அழகூட்டி இருக்கின்றான் ஜியாவில் என்னும் அரசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## கருடாசனம்



1. விரிப்பின்மீது கால்களை நேராக வைத்து நிற்கவும்.
2. இடது காலைப் பூமியில் நன்றாக ஊன்றிக்கொள்ளவேண்டும்.
3. வலது காலை மடக்கி மற்றக் காலின் முழங்காலுடன் பின்னி நிற்கவும்.
4. வலது மேல் பாதம், இடது கெண்டைக்கால் சதையுடன் பொருந்தவேண்டும்.
5. கைகளை தோள்பட்டை உயரத்தில் வலது கையால் இடது கையைப் பின்னி நேராகப் பார்க்கவும்.
6. ஆசன நிலையில் இயல்பான சுவாசத்தில் இருக்கவேண்டும்.
7. 10 முதல் 20 வினாடிகள் வரை நின்று பழகலாம்.
8. இயல்பு நிலைக்கு வந்து அடுத்த காலுக்கு மாற்றிச் செய்யவேண்டும்.
9. மூன்று முறை செய்யலாம்.
10. பின் கால்களை மாற்றிச் செய்து ஓய்வு எடுக்கவும்.

### இதனால் ஏற்படும் பலன்கள்

1. மனதை ஒருநிலைப்படுத்தி படிக்க இவ்வாசனம் உதவுகின்றது.
2. நரம்புகள் முறுக்கேறி தொடைத் தசைகள் உரம் பெற்று அழகு பெறுகின்றன.
3. கண்பார்வை தெளிவடையும்.
4. முதுகெலும்பை ஒட்டிய எல்லா நரம்புகளும் தூண்டப்படுகின்றன. அதனால் உடல் சுறுசுறுப்புப் பெறுகின்றது.
5. கால்களும் கைகளும் நீளமாக வளர உதவுகின்றது.

### தீரும் நோய்கள்

1. கால்களில் ஏற்படும் வலிகள் மறைகின்றன.
2. ஆண்களுக்கு உண்டாகும் விரை வீக்கம் இதனால் நீங்கும்.
3. மலச்சிக்கலைப் போக்குகின்றது.
4. தோள்பட்டை, முழங்கை, இடுப்புப் பகுதிகளில் உள்ள எல்லா மூட்டுகளும் எளிதாக இயங்கிக் குணமடைகின்றது
5. தூக்கமின்மை, வயிற்றுவலி ஆகியவற்றைப் போக்குகின்றது.

### மாற்றாசனங்கள்

1. கால்களையும் கைகளையும் மாற்றி செய்தல் வேண்டும்.

### குறிப்புகள்

1. கை வீக்கம் அல்லது கால் வீக்கம் உள்ளவர்கள் இவ்வாசனத்தைத் தவிர்க்கவும்.
2. கண்களை மூடாது நேராகப் பார்க்கவும்
3. வயிற்றுப் பக்கவாட்டு சதைகள் குறையக் குறைய எளிதில் பழகலாம் அவசரம் வேண்டாம்.

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய நத்தார்

சிறுகதைப் போட்டி

இரண்டாம் பரிசு

திருமதி. சுதாகினி டெஸ்மன் றாகல்
செங்கலடி

அது ஒரு மழைக்காலம். மரம் செடிகளுக்கு மகிழ்ச்சி என்றாலும் மனிதர்கள் மட்டும் ஏனோ வீடுகளுக்குள் முடங்கி விடுகிறார்கள். இடியும் மின்னலும் இருளும் சூழ்ந்த பொழுது. ஆனால் ஜோசப்பின் இல்லம் மட்டும் வழமைபோல பிரகாசமான குதூகலத்ததுடன் விளங்கியது. நத்தார் பெருவிழாவிற்கு இன்னும் ஒரு வாரம் மட்டுமே இருக்கும் நிலையில் அவர்களின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

அவசரங்கள் நிறைந்த நகர வாழ்க்கையில் அதிகம் ஆடம்பரம் இல்லாத உயர் நடுத்தரக் குடும்பம் ஜோசப்பினுடையது. வங்கியில் உயர் பதவி வகிக்கும் ஜோசப்பின் மனைவி மேரி அலுவலகம் ஒன்றில் எழுதுனராகப் பணி புரிகிறார். இவர்களுக்கு பத்து வயது நிரம்பிய ஒரேயொரு செல்ல மகள் செரோமி. இவ்வாறு ஜோசேப்பின் குடும்பம் சிறியது, எனினும் மகிழ்ச்சிகரமானது. இத்தனைக்கும் மகுடம் வைத்தாற்போல் அந்த வீட்டில் சகல வேலைகளையும் முக மலர்வுடன் செய்யும் வேலைக்காரனாக அந்தோனி விளங்கினான். ஜோசேப்பின் குடும்ப உறுப்பினன் போலவே அவன் தன்னை நினைத்துக்கொள்வான். இளம் வயதிலேயே மனைவியை இழந்த அந்தோனிக்கு அவனது மகள் ருக்ஷிதான் ஆதரவு. ஓலைக் குடிசைதான் அவர்களின் மாளிகை. ஏழ்மைதான் அவர்கள் சேர்த்து வைத்த சொத்து. ஆனால் அன்புக்கு அவர்களிடத்தே பஞ்சம் ஏற்படுவதில்லை. முதலாளியின் வீட்டில் கிடைக்கும் மாதாந்த சம்பளம், உணவு என்பன அவர்களை வாழ வைத்தன. சிரோமியின் ஒத்த வயதாக ருக்ஷி இருப்பதால் சிரோமியின் பழைய ஆடைகள் ருக்ஷிக்குப் பரிசாயின. இல்லை என்ற மனக் குறையின்றி அவர்களின் வாழ்வும் நகர்ந்தது.


"அந்தோனி..! அந்தோனி..!"

அழைத்தபடி மேரி அவனைத் தேடினாள். செய்துகொண்டிருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு பணிவுடன் ஓடிவந்து நின்றான் அந்தோனி.

"அந்தோனி! இந்தா, இந்த லிஸ்டில உள்ள சாமான்களை உடன் வாங்கி வா! கிறிஸ்மஸ் வரப்போகுது தானே. கேக், ஸ்வீட் எல்லாம் செய்யனும். கடைக்குப் போயிற்று வந்து நம்மட வீட்ட கழுவித் துப்பரவு செய் சரியா?"

உத்தரவிட்டபடி பெரிய பட்டியலையும் பணத்தையும் நீட்டினாள். தலையை அசைத்தபடி அந்தோனியும் புறப்பட்டுச் சென்றான். அந்தோனி கடையிலிருந்து திரும்பும்போது ஒரு முச்சக்கரவண்டியில் ஏற்றவேண்டிய அளவு பொருட்களை சைக்கிளில் சுமந்தபடி மூச்சுத் தட்ட இளைத்தபடி வந்து சேர்ந்தான். இந்தக் காட்சியைக் கண்ட ஜோசேப்பின் மகள் சிரோமிக்கு அந்தோனி மேல் பரிதாபம் ஏற்பட்டது. ஏற்கனவே அந்தோனி மாமா என்று பாசம் பாராட்டும் அவளுக்கு அந்தோனி அந்த வீட்டுக்காக அளவு கடந்து உழைப்பதாகவே பட்டது.

தன் மனதில் பட்டதை தன் பெற்றோரிடம் எடுத்துச் சொன்னது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பிஞ்சு உள்ளம். ஆனால், பயனேதும் கிட்டவில்லை. மாறாக

"இவளீ வரவர அந்தோனிக்கு வக்காளத்து வாங்குகிறாள். எனக்கெண்டா இது நல்லதாப் படல்ல. எந்த நேரமும் அந்தோனி மாமா அந்தோனி மாமா எண்டு இந்த வேலைக்காரனுக்குப் பின்னாலேயே திரியிறாள். இது நம்மட தகுதிக்கு ஒத்துவராத பழக்கங்களைத்தான் கொண்டு வரப்போகுது. பேசாமல் அந்தோனியை வேலையை விட்டு நிப்பாட்டத்தான் வேணும்"


என்று அங்கலாய்த்தாள் மேரி. மாதம் 2500 ரூபாய் சம்பளத்துக்கு நாள் முழுக்க மாடு போல உழைக்கும் அந்தோனி போன்ற ஓர் அப்பாவியை தவமிருந்தாலும் பெறமுடியாது என்பதை உணர்ந்த ஜோசப் அதனை மறுத்தான். மேரிக்கு எடுத்துக்கூறி புரியவும் வைத்தான். ஒருவாறு அந்தோனியின் வேலை நீக்க உத்தரவு தடைப்பட்டுப் போனது.

நாட்கள் விரைவாகக் கடந்தன. நத்தாருக்கு இன்னும் ஒரு நாள்தான் என்ற நிலையில் அந்தோனி தன் சம்பளத்தை எதிர் பார்த்தான்.

"அடுத்த மாசம் சேத்துத் தாரன் அந்தோனி. இந்த மாசம் வீட்டுச் செலவைப் பற்றி நீயே பார்த்தாய்தானே? நீயும் மகளும் கிறிஸ்மசுக்கு நம்மட வீட்ட வாங்க. வேற என்ன நீ பெரிசா கிறிஸ்மசுக்கு செய்யப் போறா? ஆ..?"

என்று மென்று முழுங்கினான் ஜோசப். ஒன்றுமே செய்ய முடியாத ஊமை யாய் வீட்டு வேலையைக் கவனித்தான். ஏமாற்றத்துடன் மாலை தன் ஓலைக் குடிசைக்குத் திரும்பினான் அந்தோனி. ஏழைக்கு என்ன நத்தார் வேண்டிக் கிடக்குது என்று நினைக்கிறார்கள் போலும். உண்மைதான் நாளாந்த வாழ்விற்கே மற்றவர்களிடம் கையேந்தும் நிலையில் இருக்கும் எனக்கு என்ன நத்தார்? என்று எண்ணிக்கொண்டான். ஆனால் அவனது சின்ன மகளை நினைத்துக் கலங்கினான். நத்தாருக்காக அப்பா என்ன வாங்கி வருவார் என காத்துக் கிடக்கும் அந்தப் பிஞ்சு மனசு எப்படித் தாங்கிக்கொள்ளும்? கண்ணீருடன் சைக்கிளை விட்டு இறங்கி தன் குடிசைக்குள் நுழைந்தான். அவனுக்கு கண்கள் இருட்டி வந்தன மூச்சுத் திணறுவதுபோல இருந்தது. மகளை அழைத்தபடி நிலத்தில் சாய்ந்தான்; மயக்கமுற்றான்.

அயல் வீட்டாரின் உதவியுடன் அந்தோனியை வைத்தியசாலையில் அனுமதித்தாள் ருக்ஷி. அங்குதான் அவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. மிதமிஞ்சிப்போன வேலைப் பழுவினால் அவனது இதயம் பலவீனமடைந்திருந்தது. அரைமணிநேரத்தினுள்




அந்தோனி கண்விழிக்காவிட்டால் உடனடியாக இதய சத்திரச் சிகிச்சை ஒன்று மேற்கொள்ள வேண்டும். சத்திர சிகிச்சைககான மருந்துகள், இதர தேவைகள் வெளியில் இருந்து பெறப்படவேண்டும் என்பதால் உடனயொக ஒரு இலட்சம் ரூபாவை தயார் செய்து வைக்கும்படி வைத்தியர் ஆலோசனை கூறினார். ருக்ஷி கலங்கினாள் ஆண்டவரை மன்றாடினாள். நாளைய கிறிஸ்துவின் பிறப்பு நாளில் தன் தகப்பன் உயிருடன் இருக்கவேண்டும் என வேண்டினாள். முடிவில் தன் தந்தையின் முதலாளி வீட்டுக்கு ஓடினாள்.

தகவல் அறிந்த அவர்கள் கவலைப்பட்டார்களே தவிர கடனாகக் கூட பணஉதவி செய்வதற்கு முன்வரவில்லை. கண்ணீரையே கடவுளுக்கு காணிக்கையாகச் செலுத்தியபடி ருக்ஷி வைத்தியசாலை நோக்கி மீண்டும் ஓடினாள். அதேவேளை அங்கு நின்றிருந்த சிரோமி வீட்டின் பின்புறம் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததை அவளது பெற்றோர்கள் அவதானிக்கவே இல்லை. அந்தோனியின் நோய் குறித்த விவாதத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். அவனைப் போன்றதொரு சிறந்த வேலைக்காரன் இனிக் கிடைக்கமாட்டான் என்ற முடிவுக்கு வந்தனர். அவ்வளவுதான் அவர்களால் செய்ய முடிந்தது. சிரோமி கர்த்தரை மன்றாடியபடி அமைதியாக இருந்தாள்.

விடிந்தால் நத்தார் என்ற நிலையில் ஜோசேப்பின் வீட்டில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தொடங்கினார்கள். சகல வேலைகளையும் அந்தோனி செய்துவிட்டுப் போயிருந்தமையால் அவர்களுக்கு இலகுவாக இருந்தது. அந்தோனி பற்றிய கவலை அவர்களிடம் இருந்தாலும் சுயநலம் அவர்களின் மனங்களைக் கட்டிப் போட்டிருந்தது. இரவு படுக்கைக்குப் போகும் சமயம் ஜோசேப்பின் வீட்டுக் கதவு பயங்கரமாகத் தட்டப்பட்டது. அந்தோனியின் மகள் மீண்டும் வந்துவிட்டாளோ என்று எண்ணியபடி மேரி கதவைத் திறந்தாள். அங்கு ஐந்து திருடர்கள் உள்ளே பாய்ந்தார்கள். மின்சாரம் துண்டிக்கபட்டது. ஜோசப் தம்பதிகள் அதிர்ந்து போனார்கள். வீட்டிலிருந்த மூவரையும் வெளியில் அமர்த்திவிட்டு உள்ளே சென்ற திருடர்கள் நகை, பணம் என்பனவற்றை வைத்திருந்த பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தார்கள். வெற்றிச் சிரிப்புடன் ஜோசேப்பின் கன்னத்தில் தட்டிவிட்டும் சென்றனர். இரவுவேளை, இருள், கறுத்த ஆடை, தலை மறைத்த தொப்பி என்பனவற்றால் திருடர்கள் தம்மை மறைத்துக் கொண்டார்கள்.

ஜோசப் தம்பதியினர் தலையில் அடித்துக் கதறினார்கள். வங்கியிலிருந்து அன்றுதான் எடுத்துவந்த பணம் இதுவரை காலமும் சேர்த்து வைத்த நகைகள் எல்லாம் பறிபோனதை எண்ணி மனமுடைந்து போனார்கள். அந்தோனிக்கு உதவி செய்யாமைக்குத் தமக்குக் கிடைத்த தண்டனை என்று எண்ணிக் கலங்கினர். சிரோமி அவர்களை ஆறுதல் படுத்தினாள். பெற்றோர் அதிசயித்தனர்.

“அம்மா! அப்பா! என்னை நீங்க முதல்ல மன்னிக்கனும். அந்தக் கள்ளன்கள்தான் ஏமாந்திருப்பாங்கள். அந்தப் பெட்டி நிறைய கல்லும் கடதாசியும்தான் இருக்கு. ருக்ஷி இஞ்ச வந்து அழுதிட்டுப் போனபோதே நான் நம்மட நகை, காசு எல்லாத்தையும் எடுத்து நீங்கதான் தந்தனீங்க எண்டு அவளிட்ட குடுத்திட்டன். எங்கட காசு கள்ளங்களிட்ட போய் வீணாகாமல் ஒரு நல்ல மாமாவைக் காப்பாத்தப் போகுது எண்டு சந்தோசப்படுங்க!”

மகள் சொன்னதைக் கேட்ட பெற்றோர் பெருமிதமடைந்தார்கள். தம் சிறுமைக் குணத்தை எண்ணி வருந்தினார்கள். தாம் செய்த பிழைக்காக ஆண்டவரிடம் மன்னிப்புக் கோரினார்கள்.

ஜோசப் உடனடியாகத் தொலைபேசி மூலம் வைத்திசாலைக்குத் தொடர்பு கொண்டான். அங்கு சத்திரசிகிச்சை எதுவும் இன்றியே அந்தோனி உயிர் பிழைத்துவிட்ட நற்செய்தியை வைத்தியர் மூலம் தெரிந்துகொண்டான். அனைவரும் மகிழ்ந்தார்கள். கடவுளுக்கு நன்றி சொன்னார்கள்.

இனி அவர்களின் குடும்பம் சிறிய குடும்பம் இல்லை. அந்தோனி, ருக்ஷி ஆகிய புதிய உறவுகளை இணைத்துக்கொண்ட குதூகலக் குடும்பம். இனி வழமை போல் அவர்களின் ஆண்டவன் வசிக்கும் ஆனந்த இல்லமாய்த் திகழும். நாளைய விடியலில் பிறக்கும் நத்தார் ஜோசப்பின் குடும்பத்திற்கு புதிய அர்த்தத்தோடு மலரும்.



## குறும்(புப்)பா - 11

வரலாறு கற்கின்றாள் நேசம்

வகுப்பினில் அவளுக்குச் சோகம்

வரும்சந்தே கம்கேட்டால் வாவீட்டில் வகுப்புக்கு

அழைக்கின்றார் அவர்பாடு யோகம்

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆண்டுகளில் 'தொண்டன்' ஆசிரிய பீடத்தை அலங்கரித்தவர்கள்



எஸ். அந்தோனிப்பிள்ளை
1969



அதிவந். ஆயர். வ.
தியோகுப்பிள்ளை
1970



அருள்தந்தை
R.S. லோப்பு
1975



அருள்தந்தை. அன்ரனிஜோன்
அழகரசன்
1979



அருள்சகோதரர்
S. A. I. மத்தியூ F.C
1981



அருள்தந்தை
A. தேவதாசன்
1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆண்டுகளில் 'தொண்டன்' ஆசிரிய பீடத்தை அலங்கரித்தவர்கள்



அருள்தந்தை
**C. P.** இராஜேந்திரம்
1983



அருள்தந்தை
**P.** யோசப்
1988



அருள்தந்தை
கிங்ஸ்லி றொபட்
1989



அருள்தந்தை
**A.** தேவதாசன்
1994



அருள்தந்தை
**A. G. A.** இரட்ணகுமார்
2000



அருள்தந்தை
றொஹான் பெனாட்
2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருது பெறும் பெருமக்கள்



## கவிஞர் வாகரை வாணன்

வாகரையைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் வாகரை வாணன் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் வித்துவான் பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்தவர்.

இளமையிலிருந்தே நாடகத் துறையில் ஆர்வம் கொண்டிருந்த இவர் 1968ல் வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம் எனும் அமைப்பை உருவாக்கி பல நாடகங்களை எழுதி மேடையேற்றியவர்.

கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், ஆய்வு, மொழிபெயர்ப்பு என பன்முக ஆளுமை கொண்ட வாகரைவாணன் இதுவரை 34 நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் கிறிஸ்து காவியம், இன்னாசியார் காவியம் உட்பட ஐந்து கத்தோலிக்க நூல்களும் அடங்கும்

தமிழ் ஆர்வமும் பிரதேசப் பற்றும் மிகுந்த அவரது, பழந்தமிழ் இலக்கியத்தில் 'மட்டக்களப்புத் தமிழ்' எனும் நூல் மட்டக்களப்பில் வழங்கும் பேச்சுத் தமிழின் இலக்கியச் சிறப்பையும் தொன்மையையும் நிலைநாட்டுவதாகும்.

இவர் எழுதிய நூல்களில் சின்னச் சின்னப் பூக்கள், மட்டக்களப்புக் காவியம், அருளாளர் அந்தோனியார், பாலர் தமிழ் பாட்டு, கிறிஸ்து காவியம் என்பன விருது பெற்ற நூல்களாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் சுதந்திரன், உதயசூரியன் போன்ற பத்திரிகைகளின் ஆசிரிய பீடத்தில் பணியாற்றிய அனுபவமுள்ள அவர் 'போது' என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்கினார்.

இவரது எழுத்துப் பணிக்காக 2002ம் ஆண்டில் மட் / பிரதேச சபை இவரைப் பாராட்டி கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.



## அருள்சகோதரர் S. A. I. மத்தியூ F.C

கிழக்கிலங்கையில் குறிப்பாக கல்வித் துறையில் மிகவும் பிரபலமான ஒரு பெயர் அருள்சகோதரருடையது. அவரது நிர்வாகத் திறன், பாடசாலை அபிவிருத்தியில், மாணவர்களது வளர்ச்சியில் அவருக்குள்ள அக்கறையும் ஈடுபாடும் பலராலும் விதந்து பாராட்டப்பட்டுள்ளன.

மலை நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் கிழக்கு மண்ணுக்கே தம்மை முழுமையாகத் தந்தவர். கிறிஸ்தவத் துறவியானாலும் தமிழ்ப் பற்றும், பணி ஆர்வமும் அவரால் துறக்க முடியாதவை.

பல்கலைகழகப் பட்டதாரியான அருள்சகோதரர் 1960ம் ஆண்டு துறவறத்தில் இணைந்துகொண்டார். திருமலையிலும், கல்முனையிலும் ஆசிரியராகப் பணி புரிந்தார். 1978 முதல் 1999 வரை கல்முனை கார்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திமா கல்லூரி அதிபராகப் பணி புரிந்து சாதனை படைத்ததோடு 1994ம் ஆண்டில் கல்வி இராஜாங்க அமைச்சினால் அதிபர் திலகம் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இன்னும் தேசமான்ய (கி.மா. ஆளுனர் வருது), கல்வி கலாசார விருது (கி.மா), கல்முனைப் பிரதேச சபையால் கலாசார விருது மற்றும் சர்வதேச விருது போன்றவற்றையும் பெற்றுள்ளார்.

கல்வித்துறையில் பல்வேறு பட்டங்களைத் தமதாக்கிக்கொண்ட அருள்சகோதரர் வித்திய சிரோமணி, அதிபர் திலகம் எனப் பாராட்டுகளைப் பெற்றுள்ளதோடு அகில இலங்கை சமாதான நீதவானாகவும் நியமிக்கப்பட்டார். மேலும், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியவர். இன்னும் புனித வளனார் துறவற சபைத் துறவியாக இருந்த இவர், தமது சபையின் மூத்த தலைவராகப் பணியாற்றியவர். தற்போது புனித வளானார் சபை அன்புச் சகோதரர்கள் சபையுடன் இணைந்துள்ளது.

கல்வித்துறையோடு கலை இலக்கியத் துறைகளிலும் ஆர்வம் மிக்க இவர் நாடகத் தயாரிப்பாளராக விளங்கியவர். கட்டுரைகள் பலவும் எழுதியுள்ள அருள்சகோதரர் அண்மையில் 'கர்மயோகி பவுல்' என்னும் ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார்.

கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து ஆய்வுகளிலும் நூலுருவாக்கத்திலும் ஈடுபட்டு வருகிறார்.



## புலவர் A. W. அரியநாயகம்

வடபகுதியில் உள்ள நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இளமையிலேயே தமிழார்வம் மிக்கவர். அதன் காரணமாக தமிழ்நாடு அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழில் பட்டப்படிப்பை மேற்கொண்டு புலவர் பட்டம் பெற்றார்.

தமிழ்நாட்டில் வெளியாகும் 'ஞானதூதன்', 'பூச்செண்டு' ஆகிய சஞ்சிகைகள் நடாத்திய போட்டிகளில் பங்குகொண்டு முதல் பரிசும் பாராட்டும் பெற்றவர்.

'பல்கலைக்கழக புலவர் மன்றத்தில்' இவரால் சமர்ப்பிக்கப்பட்ட 'பைபிளும் திருக்குறளும்', 'கிறீஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள்' எனும் கட்டுரைகள் பலராலும் பாராட்டப்பட்டவை.

'பைபிளும் திருக்குறளும்' எனும் கட்டுரை பின் மதுரையிலிருந்து வெளிவரும் 'தமிழ்நாடு' தினசரியில் பிரசுரிக்கப்பட்டது.

பாடசாலைப் பருவத்திலிருந்தே நாடகத் துறையில் ஆர்வம் கொண்டிருந்த இவர் பல நாடகங்களில் நடித்துள்ளார். பல்கலைக்கழகத்தில் பயின்ற போது நாடகத்தில் பாராட்டும் பரிசும் பெற்றவர்.

1964ம் ஆண்டிலிருந்து திருமலையில் ஆசிரியராகப் பணி புரிந்ததோடு 4 ஆண்டுகள் திருமலை மேற்றிராசன ஐக்கிய சங்கத்தில் செயலாளராகப் பணியாற்றியவர். பாதுகாவலன், தொண்டன் போன்ற சஞ்சிகைகளுக்கு பல கட்டுரைகள் எழுதியுள்ளதோடு, திருமலை கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தால் வெளிவந்த 'சுடரொளி' பத்திரிகையின் ஆசிரியராகவும் சில காலம் பணியாற்றியுள்ளார்.

மாணவர்களுக்காக பண்டிதர் ஆசிநாதருடன் இணைந்து 'வளரும் தமிழ்' எனும் நூலை எழுதி (மூன்று பாகங்கள்) வெளியிட்டதோடு தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் இறந்தபோது அருள்சகோ. மத்தியூ அவர்களுடன் இணைந்து 'அணையா விளக்கு' எனும் நூலையும் வெளியிட்டார்.

ஆசிரியராக மட்டுமல்ல, பாட இணைப்பாளராக, ஆசிரிய ஆலோசகராக, பிரதி அதிபராக, அதிபராக எனப் பல நிலைகளிலும் பணியாற்றியவர்.

தமிழ் அறிஞரும் சிறந்த மேடைப் பேச்சாளருமான புலவர் அரியநாயகம் அவர்கள் பற்றி அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு இவ்வாறு வர்ணிக்கிறது:

"தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் உறவினரான இவர் பக்தியுள்ளம் பெற்றவர். நல்ல நாடக நடிகர். பிறர் மனதை எளிதில் கவர்ந்துவிடும் மேடைப் பேச்சாளர், மொழிபரப்புப் பணியில், ஆராய்ச்சித் துறையில் தனி ஈடுபாடு கொண்டவர். பொதுப் பணிகளில் பங்கெடுத்துக் கொண்டவர். பல தமிழ்நாட்டுத் தண்டமிழ் ஏடுகளில் இவரது எழுத்தோவியங்கள் வெளிவந்துள்ளன. அரியநாயகம் போன்ற அறநெறி பிறழாத நண்பர்களை இன்றைய நடைமுறை உலகில் காண்பது மிக அரிதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை மாளிகையில் கறுப்பின ஜனாதிபதி

## இலங்கைக்குத் தேவைப்படுவது ஓர் ஒபாமா அல்ல

அமெரிக்காவின் 56வது ஜனாதிபதியாக ஒபாமாவின் பிரவேசம் அமெரிக்க அரசியலில் மாத்திரமல்ல வெளி உலகுடனான அமெரிக்க உறவுகளில் ஒபாமா யுகமொன்றை ஆரம்பிக்கப் போகின்றது, என்பதில் சந்தேகமில்லை. 2008 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முதற் தடவையாக கறுப்பின ஜனாதிபதி பராக் ஒபாமா ஜனநாயகக் கட்சி சார்பாக வெற்றி பெற்றுள்ளார். வெள்ளை இனத்தவர்கள் அடிமைகளாகக் கருதிய இனத்தின் வாரிசு ஒன்று ஜனாதிபதியாக்கப்பட்டுள்ளார். இவர் ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் மனைவியான கிலாரி கிளின்டனை (வெள்ளை இனத்துப் பெண்) தோற்கடித்தவர். தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி (வெள்ளை இனத்து) வேட்பாளர் மெக்கெயினைத் தோற்கடித்துள்ளார்.

ஓர் இனத்தின் படுகொலை மீதும் அடிமையாக்கப்பட்டிருந்த இன்னோர் இனத்தின் உழைப்பின் மீதும் நிறுவப்பட்ட அரசியல் சமூதாயத்திலேயே ஆபிரிக்க அமெரிக்கர் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதே நேரம், இலங்கையர்கள் ஒபாமா விவகாரத்திலிருந்து எதையாவது கற்றுக்கொள்ளக்கூடிய மனோபாவத்துடன் இருக்கிறார்களா? பேராசிரியர் மவற்பூபானி கூறுவதைப் போன்று "இன ரீதியான தப்பெண்ணங்களையும் பிளவையும் குறைத்துக்கொள்ளக்கூடிய அணுகுமுறைகளையும் கடைப்பிடிக்க இலங்கை அரசியல் சமுதாயம் தயாராயிருக்கின்றதா? நவீன அரசியல் போக்கிற்கு ஒத்திசைவான அரசியல் சிந்தனையைக் கொண்டவர்களாக, தங்களைக் குறைந்தபட்சம் காட்டிக்கொள்வதற்கேனும் சிங்களத் தலைவர்கள் தயாரில்லாத துரதிர்ஷ்ட வசமான நிலைமையே இலங்கையில் காணக்கூடியதாக இருககின்றது" என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்க சனத்தொகையில் 14 வீதமாகவுள்ள கறுப்பினத்தவரை வெள்ளையின மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளமை முற்போக்கான ஒரு சிந்தனையாகக் கருதப்பட, இலங்கையில் 26 வீதமாகவுள்ள சிறுபான்மைத் தமிழ் பேசும் மக்கள் ஆற்றல் உள்ளவர்களாக இருந்தாலும் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ, நிதியமைச்சராகவோ இதுவரை தெரிவு செய்யப்படவில்லை. சிங்களப் பௌத்தர்களுக்கே இந்த வாய்ப்புக் கிடைக்கின்றது. எழுதப்படாத பிற்போக்கு விதிகளால் இலங்கையின் அரசியல், சமூக விடயங்கள் ஆளப்படுகின்றன என்பதையே இது காட்டுகின்றது. நாடொன்று அபிவிருத்தி அடையவேண்டுமெனில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்போக்கு வாதங்கள் களையப்படல் வேண்டும். திறமை, ஆற்றல்களுக்கு இடம் ஒதுக்கபடல் வேண்டும். ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகள் பிற்போக்கு வாதங்களுக்கல்லாமல் திறமை, ஆற்றல்களுக்கு இடம் வழங்கியமை யால்தான் முன்னேறியுள்ளன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இவ்வாறான சந்தர்ப்பங்களை அளிக்க வில்லை.

இலங்கையில் 1977 தேர்தலில் பாராளு மன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி (T.U.L.F.) இரண்டாவது பெரும்பான்மையைப் பெற்றிருந்ததனால் அதன் தலைவர் A. அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார். இதை அப்போது பெரும்பான்மையினத் தலைவர்கள் விரும்பவில்லை. நடைபெற்றிருக்கக் கூடாத ஒரு நிகழ்வாகவே பெரும் பாலான சிங்கள மக்களும் இதைக் கருதினர். இதனாலேயே சிறுபான் மைக் கட்சிகளை நசுக்குவதற்காக விகிதாசார பிரதிநிதித்துவ முறையி லான தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வாறே இந்திய அரசியல் களத்தில் உத்திர பிரதேச மாநிலத்தில் தீண்டத் தகாத சாதியைப் பிரதிநிதித்து வப்படுத்தும் பெண் அரசியல் வாதியான மாயாவதி, அம்மாநி லத்தில் மூன்று முறை முதல்வ ராகப் பதவி வகித்தவர். சென்ற ஆண்டு தனிக் கட்சியாக நின்று போட்டியிட்டு வெற்றியீட்டினார். அந்த வெற்றியில் தலித் வாக்கு கள் மட்டுமின்றி தலித் விரோதிக ளான பிராமண வாக்குகளும் சேர்ந் திருந்தமை இவருக்கு இரட்டிப்பு வெற்றியைக் குவித்தது. இந்நி கழ்வு இந்தியாவின் பாரம்பரியக் கட்சிகளுக்கு மகிழ்ச்சியைத் தருமா? மாயாவதி பிரதமராக முடியுமா? இந்தியாவின் பிற் போக்கு வாதம் தோற்கடிக்கப் படுமா? என்ற வினாக்களுக்கு மத்தியில், கலாநிதி அப்துல் கலாம் இந்தியக் குடியரசின் ஜனாதிபதியாக வர முடியுமாயி ருந்த நிலைமை அமெரிக்கா வுக்கு முன்னராகவும், முன் உதாரணமாகவும் இந்தியாவின் முற்போக்கு வாத அரசியல் பிரவேசத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறன்றி இனவாதக் கட்சிகள், மத வாதக் கட்சிகள், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், ஆட்சி பீடம் அனுப்பப்பட்டால் குறுகிய இலாபங்கள் நிறைவேறினாலும் நீண்டகாலப் பார்வையில் துரதிர்ஷ் டமாகவே அமையும் என்பது இலங்கையில் நாம் கண்டும், அனுபவித்தும் வரும் கசப்பான உண்மை யாகும். சுதந்திரத்துக்கு முன்னர் D. S. சேன நாயக்காவின் தலைமைத்துவத்தின் கீழிருந்த இலங் கையர் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தனர். இவ்வொப்பந் தம் யாதெனில் "பல்லின ரீதியாகவும் பல்சமய ரீதியாகவும் காணப்படும் சமூகங்களுக்கு மத்தியில், இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற ரீதியில் ஒன்றாக வாழுதல், சமாதானமாக வாழுதல்" என்பதாகும்.

இத்தகைய இணக்கப்பாட்டின் அடிப்படை விடயங் கள் 1947 சோல்பரி

## அண்டம் புகழும் இத்தொண்டன் வாழி!

தொண்டனே! நாற்பதாண்டாய்த்
தொடர்ந்திடும் அரிய சேவை
கண்டங்க ளனைத்துந் தாண்டுங்
காவிய வடிவ மாகிப்
பண்புறுந் தமிழின் சுந்தரல்
பாரெல்லாம் புகழ்ந்து பாடத்
தொண்டனே! தொடர்ந்து நீயித்
தொண்டையே புரிவாய் வாழி

மத,மொழி பிரதே சங்கள்
மாறுபா டேதுவு மின்றி
இதமுடன் பணிசெய் கின்ற
இலக்கியப் படைப்பே வாழி

நாற்பது ஆண்டா யிந்த
நாட்டிலே நிலைத்த வன்போல்
அந்நிலிற் சிறந்த ஏடு
அறிந்திட வேறொன் றில்லை
போற்றியே புனித வேதப்
பொன்மொழி புகல்வாய், வையம்
ஏற்றிடும் கவி, கதைகள்
இயம்பிடும் ஞாயிறாய் வாழி!

உதயனின் உன்னால் மக்கள்
ஒளிபெற் றுயர்ந்து நெஞ்சில்
புதையலாய் அன்பைத் தேக்கிப்
பொலிவுறச் செய்தே வாழி

- கவிஞர் நிலாதமிழின்தாசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் யாப்பில் பின்வருமாறு காணப்பட்டது.

*01. பாராளுமன்றத்தில் சகல இனங்களுக்கும் இன ரீதியான, சமநிலையான பிரதிநிதித்துவம் காணப்படல்.*

*02. சகல சமூகங்களினதும் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கும் விதத்தில் முப்பது அங்கத்தவர்களைக் கொண்ட செனற் சபை அமைக்கப்படல்.*

*03. அரசியல் அமைப்புப் பிரிவு 29ன் படி சகல சமூகங்களும் சமத்துவமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்தல்.*

*04. யாதேனும் ஒரு சமூகத்திற்கு அநீதி இழைக்கப்பட்டால் உயர் நீதிமன்றம் மற்றும் பிரித்தானிய பிரிவுக் கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை.*

*05. சுதந்திரமான பொது நிர்வாக சேவை ஆணைக்குழு நிறுவுதல்.*

சுதந்திரம்கிடைத்த பின்னர் சிறுபான்மை யினருக்கு பாதுகாப்பும் கௌரவமும் வழங் கக் கூடிய மேற்படி அரசியலமைப்பு சட்ட ஏற்பாடுகளுக்கு பெரும் பான்மைச் சிங்கள சமூகம் மதிப்பளிக்கவில்லை. மற்றும் காலத்திற்குக் காலம் கொண்டுவரப்பட்ட அரசியல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளினால் இவை யாவும் திட்டமிடப்பட்டு களையப்பட்டும், செயலிழக்கவும் செய்யப்பட்டன. இத்தகைய குறுகிய இனவாத அரசியல் தந்தி ரோபாயத்தின் வெளிப்பாடாகத்தான் 1948, 1949 ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டம் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையானோரது வாக்குரிமையைப் பறித்தெடுத்தது. தொடர்ந்து 1956ல் தனிச் சிங்கள அரச கரும மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டமை 1972 அரசியலமைப்பில் தனிச் சிங்களச் சட்டத்திற்கு மேலும் வலுவூட்டப்பட்டமை, அதேநேரம் தமிழுக்கு உரிய இடம் வழங்கப்படாமை, பௌத்த மதத்திற்கு முதன்மையான இட மும் அரச மதம் என்ற

# ஒளியின் வேகம் மாறாதது

ஒளியின் வேகம் என்ன தெரியுமா? கிலோமீட்டரில் சொன்னால் ஒரு செக்கனுக்கு சுமார் முன்னூறாயிரம். 1905ல் ஐன்ஸ்டீன் ஒரு பிரமாண்டமான சிந்தனையை நுழைத்து விஞ்ஞானிகளைக் கலக்கிவிட்டார். ஸ்பெஷல் தியரி ஆஃப் ரிலேட்டிவிட்டி என்று ஒளியின் வேகம் மாறாமல் இருப்பது பரிசோதிக்கப்பட்ட உண்மை. இதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றார் அந்த விநோதம் என்ன?

நீங்கள் பஸ்சில் சென்று கொண்டிருக்கிறீர்கள் நீங்கள் நகர்வதால் உங்களில் சில மாறுதல்கள் நிகழ்ந்தாக வேண்டும் என்றார் ஐன்ஸ்டீன். என்ன மாறுதல்கள்? பஸ் போகும் திசையில் நீங்கள் கொஞ்சம் சுருங்குகிறீர்கள், அதேசமயம் உங்கள் எடை கொஞ்சம் கூடுதலாகிறது. உங்கள் கைக்கடிகாரம் சிறிது மெதுவாக ஓடுகிறது என்றார். அப்போதுதான் ஒளியின் வேகம் மாறாமல் இருப்பதை விளக்க முடியும். பூமியில் கிடைக்கக்கூடிய வேகங்களில் இந்த எடை கூடுவது, முகம் சப்பட்டையாவது, கடிகாரம் மெதுவாக ஓடுவது எல்லாம் மிக மிகக் குறைவாக அளவிடக்கூட முடியாத படி அவ்வளவு நுட்பமாக இருக்கும். எப்போது அளவிட முடியும்?

கொஞ்சம் அதிக வேகத்தில் பஸ் போனால் உதாரணத்துக்கு ஒரு செக்கனுக்கு இருநூற்று அறுபதாயிரம் கிலோமீற்றர் வேகத்தில் போனால் அப்போது என்ன நடக்கும்?

ஆறடி மனிதன் மூன்றடியாகச் சுருங்கி விடுவான். அவன் நூறுகிலோ எடை இருநூறு கிலோவாகிவிடும். இரண்டு ஆண்டு ஓராண்டாகிவிடும் இதுதான் ரிலேட்டிவிட்டி.

இதை நம்புவது கஷ்டம்தான். நமது அன்றாட நடவடிக்கைகள் ஒளியின் வேகத்தை நெருங்க முடியாது. துணைக்குகளுக்குள் இருக்கும் துகள்களில் பைமெஷன் என்ற ஒரு துகளை அதிவேகத்துக்கள்ளாக்கி பரிசோதனை செய்தபோது ஐன்ஸ்டீன் சொன்னது போல் அதன் எடை கூடியது. அதன் வாழ்நாள் அதிகரித்தது. அறிவியல் உலகம் அதிர்ச்சியில் உறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்தும் வழங்கப்பட்டமை, செனற் சபை ஒழிக்கப்பட்டமை, உயர் நீதிமன்றம் பிரிவுக் கவுன்சில் என்பவற்றிற்கு மேன்முறையீடு செய்யும் உரிமை நீக்கப்பட்டமை, பொதுச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்களை அமைச்சரவை பெற்றுக்கொண்டமை, பல்கலைக்கழக அனுமதித் தரப்படுத்தப்பட்டமை போன்ற சட்டங்கள் சிறுபான்மையினரின் இயல்பு வாழ்வுக்கும், முன்னேற்றங்களுக்கும் பெரும் தடைக்கற்களாக அமைந்தன. இப்பின்னணியில் தான் தமிழர் விடுதலைக் கூட்டணி, தனிநாட்டுக் கோரிக்கையை முன்னறிவித்தமையும் தமிழ் இளைஞர்களில் சிறு குழுவினர் ஆயுதம் ஏந்தியமையும் நிகழ்ந்தது.

## மிகத்தொன்மையான கிறிஸ்தவக் கோயில்

உலகின் மிகத்தொன்மையான கிறிஸ்தவக் கோயிலை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஜோர்தான் நாட்டில் கண்டுபிடித்துள்ளார்கள். வடஜோர்தான் சிரியா நாட்டு எல்லையில் அமைந்துள்ள நகரம்தான் ரிகாப். இங்கு தொன்மையான புனித கிறகோரியூஸ் கோயில் உள்ளது. இன்றைய கிறோகோரியூஸ் கோயிலின் அடியில் தான் 2000ம் ஆண்டு தொன்மையான கோயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கி.பி. 230ம் ஆண்டு கட்டப்பட்ட கோயிலின் அடிப்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட குகைக் கோவில் கி.பி. 33ம் ஆண்டு தொடக்கம் 70ம் ஆண்டுக்குள் கட்டப்பட்டதாகக் கருதப்படுகின்றது.



மேற்படி பாதகமான சட்டதிட்டங்களினூடாக முளை விட்டு, தளிர் விட்டு தழைத்த சிறுபான்மை இனங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை அவமதிக்கும் சிந்தனையுடனான செயற்பாடுகளின் போக்கு இன்றைய பெரும்பான்மைத் தலைமைத்துவத்தில் தீவிரமடைந்திருக்கின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒபாமா அமெரிக்கர்களினால் குறிப்பாக வெள்ளையின அமெரிக்கர்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவராக இருந்ததற்குப் பிரதான காரணம் அமெரிக்காவின் ஆங்கிலக் கிறிஸ்தவக் கலாசாரத்தின் முக்கியத்துவத்தினை அவர் ஏற்றுக்கொண்டவர் என வாதிடுவோரும் உள்ர். இத்தகையோர் இலங்கையிலும் இலங்கைச் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர் ஒருவர் சிங்கள பௌத்த கலாசாரத்தின் மேலாதிக்கத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டால் அவரைப் பிரதமராகவோ ஏன் ஜனாதிபதியாகவோ ஏற்றுக்கொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லையென வாதிடுகின்றனர். சிங்கள பௌத்த கலாசாரத்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்வது பிரதானமானதென்றால் அத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்த முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக்குவதற்கு ஜனதா விமுக்தி பெரமுன (JVP) 2004 ஏப்ரலில் மேற்கொண்ட முயற்சி பலனளிக்காமல் போனது ஏன்? என்ற கேள்வி எழுகின்றது.

அமெரிக்காவின் அரசியல் வரலாற்றில் காலத்துக்கேற்ப புதிய சரித்திரம் படைக்கப்பட்டு விட்டது. கடந்த காலத்தை கணக்கெடுக்காமல் எதிர்காலத்திலாவது இலங்கையர்கள் இத்தகைய ஒரு சரித்திரத்தை அரசியலில் நிகழ்த்திவிட முடியுமா? என்று கேட்பது அர்த்தமற்றது. ஏனெனில் இலங்கையில் அரசியல் என்னும் உடலில் கலந்துள்ள ஆராக்கியமற்ற சிங்களப் பௌத்த இரத்தம் ஆரோக்கியமானதும் ஒழுக்கமும் நியாயமுமான மாறுதல்களை உண்டுபண்ணும் அறிகுறிகள் தென்படவில்லை. உண்மையில் இலங்கைக்குத் தேவைப்படுவது ஓர் ஒபாமா அல்ல, சிங்கள் மக்களின் தவறான சிந்தனைகளுக்குப் பின்னால் இழுபட்டுச் செல்லாமல் அவர்களை சரியான மார்க்கத்தில் வழிநடத்தி சிறுபான்மையின மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை அங்கீகரித்து, அரசியல் நெருக்கடிக்கு அர்த்த புஸ்டியான அரசியல் இணக்கத் தீர்வைக் காணக்கூடிய துணிச்சல் கொண்ட சிங்கள தலைவர் ஒருவரே தேவை.

**சகாயன்**
**அதிரதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பெண்

பெண்ணென்பாள்
வெறும் போகப் பொருளல்லள்...
போதையூட்டும்
காமக் கிழத்தியுமல்லள்...
கனிவாயிதழ் விரிக்கும்
புன்னகைக் களஞ்சியமா?
இல்லை...
வாழும் கலையின்
சூக்குமமறிந்த சூத்திரதாரி



### வாலிபன்

இளரத்தக் கொதிப்பின்
அவசரக் குடுக்கை...
எதற்கும் அஞ்சா
நெஞ்சுரம் படைத்த
எடுபிடி...
முரண்பாடுகளின்
மொத்த அறுவடை!



- கவி. மகேஸ்வரன் -

### தாய்

கைத்தலம் பற்றிய கணவனுக்கே
தன்னை அர்ப்பணித்து
உறுதுணையாயிருந்த மாது...
கைக்குழந்தை ஒன்றைப் பெற்றதும்
சுதியாய் மாறி
பெற்ற மகவையே பேணிக்காக்கும்
பெருவிருட்சம்!



### சேய்

அமுது உண்பதற்கே ஆரவாரித்து
அழுது ஆர்ப்பரித்து
அடம்பிடிக்கும் கிறுக்கு...!
பிஞ்சு மழலையால்
நெஞ்சு கரைய வைக்கும்
உன்னத சொத்து!



### கன்னி

நாணிக் கோணும் நளினம் கொண்ட
சாகசக்காரி...
கபடமின்றிச் சிரிக்கின்ற
அமுதநிலா - ஆயின்,
ஒருவன் கைப்பிடித்தபின்
முற்று முழுதாய் தன்னை மாற்றும்
மாயாஜால மோகினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு கிராமியப் பாடல்களில் காணப்படும் ஈழ கலைப் பண்பாட்டம்சங்கள்



எஸ். சந்திரமனசிங்கம்

மட்டக்களப்பு மாநிலம் பாரம்பரியக் கலைகளின் உறைவிடமாக இருப்பது போன்று கிராமியப் பாடல்களுக்கும் பெயர்பெற்ற இடமாக உள்ளது. கிராமியப் பாடல்கள் தோன்றுவதற்கு கிராமச் சூழலே வழிவகுக்கின்றது. மட்டக்களப்பு மரநிலம் விவசாயத்திலும் மீன் பிடித் தொழிலும் மக்கள் பெருமளவில் ஈடுபடும் மாநிலமாகும். இத்தொழில்களில் ஈடுபடும் மக்கள் தம் களைப்பைப் போக்கிக்கொள்வதற்கு ஆடிப்பாடி மகிழ்ச்சியுடன் தம் தொழிலில் ஈடுபடுவர். 'ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது' என்றும் பொதுவாகக் கருதப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களும் கிராமியப் பாடல்கள் அதிகளவில் தோன்றியுள்ள மாவட்டங்களாகும். தொழில் முயற்சிகளில் ஈடுபடும் மக்கள் தம்முள் மனமகிழ்ந்து பாடிய பாடல்களாகவே பெருமளவான கிராமியப் பாடல்கள் உள்ளன. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுடைய கிராமியக் கலைகள் ஏராளமாகவுள்ளன. புலவர்மணி ஆ.மு.ஷரீப்தீன் அவர்கள் அதிகளவான பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். கவிஞர் முத்து மீரான், ஜனாப் எஸ்.எஸ்.எப்.ஜெமீல் போன்ற பலரும் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பு மாநிலக் கிராமியப் பாடல்களை ஈழத்து நாடோடிப் பாடல்கள் என்ற தலைப்பில் மகாவித்துவான் F.X.E. நடராசா அவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ளார். கிராமியப் பாடல்கள் அனேகமாக வயலை உழவு செய்யும்போது, விதைக்கும்போது, களை பிடுங்கும்போது, வயல் வெட்டும்போது, உப்பட்டி கட்டும்போது, சூடு அடிக்கும்போது, வண்டில் ஓட்டும்போது, தோணி ஓட்டும்போது கரவலை இழுக்கும்போது, ஊஞ்சல் ஆடும்போது, தாலாட்டும்போது என பல சந்தர்ப்பங்களில் பாடப்படுபவையாக உள்ளன.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பல செய்யுள்களை நாட்டுப்பாடல் தன்மையில் பாடிச் செல்கின்றார். இதேபோன்று மாணிக்கவாசக சுவாமிகள் இயற்றிய திருவாசகத்திலும் சில பாடல்கள் கிராமியப் பாடல்போன்று காணப்படுகின்றன. மகாகவி பாரதியும்கூட ஏராளமான கவிதைகளை கிராமியப் பாடல் தன்மையில் பாடியுள்ளார். உதாரணத்திற்கு வண்டில்காரன் பாட்டைப் பார்க்கலாம்.

*காட்டு வழிதனிலே – அண்ணே!*
*கள்ளன் பயமிருந்தால் – எங்கள்*
*வீட்டுக்குல தெய்வம் – தம்பி*
*வீரம்மை காக்குமடா*

இது போன்ற பல கவிதைகள் உண்டு. மக்களுடைய பண்பாட்டுப் பாரம்பரியங்கள் இக்கிராமியப் பாடல்களில் நிறையவே இடம்பெற்றுள்ளன.

*ஆதங்காக்கா ஆதங்காக்கா – அவரைக்*
*கண்டால் சொல்லிடுங்கோ*
*பூவரசங் கன்னியொன்று பூமலர்ந்து*
*போச்சுதெண்டு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincon)

### 1809 – 1865



● அமெரிக்காவின் கென்டக்கி மாநிலத்தில் 1809 பெப்ரவரி 12ல் பிறந்தார்.

● 1842ல் மேரிடாட் (Mary Todd) என்ற பெண்ணை மணந்தார்.

● 1835ல் வழக்கறிஞரானார்.

● 1862ல் நீக்ரோ மக்களை அடிமைகளாகச் சந்தையில் விற்றார்களாம். அந்தக் கொடுமையை இல்லாதொழித்த பெருமை ஆபிரகாம் லிங்கனைத்தான் சாரும். இவர் 16வது குடியரசுத் தலைவராவார்.

● 1865 ஏப்ரல் 14ம் திகதி ஆபிரகாம் லிங்கன் நாடகம் பார்த்துக்கொண்டிருந்தபோது ஜோன் வில்க்ஸ் வூத் (John Wilkes Booth) என்பவனால் (இவன் ஒரு நாடக நடிகன்) சுட்டுக்கொல்லப்பட்டார்.

- வயலற் -

இங்கே மகள் பெரியவளாகிவிட்டாள் (பூப்படைந்து விட்டாள்) என்பதை மிக அழகாகக் கிராமியப் பாடல் மூலம் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

மக்களின் பிரதான தொழிலான விவசாயத்தில் ஈடுபடும்போது இக்கிராமியப் பாடல்களைப் பாடுவர். எடுத்துக்காட்டாக:

*மாடும் வயதாளி*
*மாட்டுக்காரன் குமராளி*
*நாலுமொரு நோயாளி – மாடு*
*நடக்குதில்லை முதலாளி*

எனக் கூறுவதன் மூலம் பல விடயங்கள் இங்கே உணர்த்தப்பட்டுள்ளது. மாட்டுச் சொந்தக்காரனுக்கு அதிக பொறுப்புகள் உள்ளதை 'மாட்டுக்காரன் குமராளி' என்ற அடி காட்டுகிறது. இதே போன்று மக்களது பழக்கவழக்கங்கள், திருமணச் சடங்குகள், பூப்பு நீராட்டு விழா, மரணச் சடங்குகள் ஆகிய நிகழ்வுகளின்போது பல பாடல்கள் பாடப்பட்டுள்ளன. தாலாட்டுப் பாடல்கள் தமிழ் மக்களது கலாசார விழுமியங்களை உணர்த்துகின்றன.

*'சாஞ்சங் கண்டே சாஞ்சம்*
*சாய மயிலாரே சாஞ்சம்'*

பின்னர்,

*'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு*
*தாமரைப் பூவே சாய்ந்தாடு*
*குத்துவிளக்கே சாய்ந்தாடு*
*கோவில் புறாவே சாய்ந்தாடு'*

எனப் பாடப்பட்டுள்ளன. 'ஆனை ஆடுவான் தம்பி ஆனை ஆடுவான், சப்பாணமாம் தம்பி சப்பாணமாம், ஆலாப் பற பற' எனப் பல வகையான வாழ்க்கையோடு இணைந்த கிராமியப் பாடல்கள் மக்களால் பாடப்பட்டுள்ளன. இப்பாடல்கள் ஊருக்கு ஊர், கிராமத்துக்குக் கிராமம் மாற்றம் பெற்றுள்ளன. ஆனால் எல்லாப் பாடல்களிலும் மக்களுடைய பழக்க வழக்கங்கள் பிரதிபலிக்கின்றன. ஏட்டில் எழுதப்படாத இப்பாடல்களில் இலக்கணத்தைப் பார்க்க முடியாது. ஆனால் தானாகவே உவமைகளும் எதுகை மோனைகளும் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

*'ஈர்க்குப்போல் மூக்கல்லோ*
*இளம்பிறைபோல் நெற்றியல்லோ'*

இப்பாடலில் சிறப்பான உவமைகள் கூறப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பிரதிபலிப்பவை அந்நாட்டிலுள்ள கிராமப்புற மக்களால் கைக்கொள்ளப்படும் பழக்கவழக்கங்கள், உணவு முறைகள், தொழில்கள், கலைகள், விளையாட்டுகள் என்பவையேயாகும். இவை நாகரிக வளர்ச்சியில் சில மாற்றங்களைப் பெற்றாலும் நாகரிகத்தின் கருவூலங்களாக இக்கலாசார விழுமியங்களே விளங்குகின்றன. ஏராளமான கிராமியப் பாடல்கள் ஆங்காங்கே மக்கள் மத்தியில் உள்ளன. வயது முதிர்ந்தவர்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடும்போது அவற்றை அறிந்துகொள்ள முடிகிறது. வடக்கு கிழக்கிலுள்ள பல கிராமியப் பாடல்கள் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் நான்கு தொகுதிகளாகப் பின்னணி இசையுடன் ஓடியோ நாடாக்களில் பதியப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகைப்பாடல்களுக்கும் பொருத்தமாக இசை சேர்க்கப்பட்டு அப்பாடல்கள் மிக இனிமையாக ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான முயற்சிகள் மேலும் செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் எமது மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் அதன் மூலம் வெளிக்கொணரப்பட்டு இத்துறையில் ஆய்வுகளை மேற்கொள்வோருக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரித்தாஸ் எகெட் ஊழியர்கள் சேவை நலன் கௌரவிப்பு




இலங்கை கரித்தாஸ் செடக் நிறுவகத்தின் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் கரித்தாஸ் இலங்கை நிறுவன வலைப்பின்னலின் கீழ் இயங்கும் நிறுவகங்களினால் பலன் பெற்ற பயனாளிகளின் கைவண்ண உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும் மார்கழி 2ம், 3ம் திகதிகளில் நடைபெற்றன. இதன் மற்றுமொரு சிறப்பு நிகழ்வாக 4ம் திகதி மாலை Colombo International School Auditoriumத்தில் "நீதியான சமூகத்தை நோக்கி ஒன்றிணைந்த பயணம்" என்னும் தலைப்பின் கீழ் நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதி அதிமேதகு பேராயர் மாரியோ செனாரி அவர்களும் திருமதி லெஸ்லி ஆன் நைற் (பொதுக் காரியதரிசி - சர்வதேச கரித்தாஸ் நிறுவனம்) மற்றும் அனைத்து ஆர்வலர்கள், மத குருக்கள், பிரமுகர்கள், பாராளுமன்ற உறுப்பினர் என அழைக்கப்பட்ட அதிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வுகளில் ஒன்றாக இருபது வருடங்களுக்கு மேலாக கரித்தாஸ் செடக் வலைப்பின்னலின் கீழ் இயங்கும் நிறுவகங்களில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவர்களில் மட்டக்களப்பு எகெட் நிறுவகத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கும் நால்வர் கௌரவிக்கப்பட்டது எமக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அவர்கள்:

| | |
|---|---|
| • திரு. மரியான் இராயப்பு | 1983-2008 (25 வருடங்கள்) |
| • திருமதி. செல்வராணி முத்துக்குமார் | 1985-2008 (23 வருடங்கள்) |
| • திரு. தம்பிஜயா அருட்சகாயம் | 1988-2008 (20 வருடங்கள்) |
| • திருமதி. அந்தோனியம்மா மோகனசுந்தரம் | 1988-2008 (20 வருடங்கள்) |

இவர்கள் அனைவரும் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாநில ஆயர் அதிவந்தனைக்குரிய யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களாலும் கண்டி மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய வியன்னி பெனாண்டோ ஆண்டகை அவர்களாலும் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இவர்களுடன் இலங்கை செடக் தேசிய நிறுவக இயக்குனர் அருள்தந்தை டேமியன் பெனாண்டோ அடிகளாரும் மட்டக்களப்பு கல்முனை கரித்தாஸ் - எகெட் நிறுவக இயக்குனர் அருள்தந்தை சிறிதரன் சில்வஸ்டர் அவர்களும் தங்களது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

தகவல்: எஸ். மைக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதுமைப் பித்தன்

பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட 'புதுமைப் பித்தன் மொழிபெயர்ப்புகள்' என்னும் அற்புதமான தொகுப்பு வாசிக்கக் கிடைத்தது. அருமையோ அருமை! காலச்சுவடு பதிப்பகம் (நாகர் கோவில்) இதனை வெளியிட்டுள்ளது.

அன்னை இட்டதீ (1998), புதுமைப் பித்தன் கதைகள் (2000), புதுமைப் பித்தன் கட்டுரைகள் (2002) என புதுமைப் பித்தனின் படைப்புகளை செம்பதிப்பாக வெளியிட்ட காலச்சுவடு பதிப்பகம், நான்காவது வெளியீடாக 'புதுமைப் பித்தன் மொழி பெயர்ப்புகளை' வெளியிட்டுள்ளது.

ஐம்பத்தெட்டுக் கதைகள், எட்டுத் தழுவல் கதைகள், பலிபீடம், பிரேத மனிதன் நாவல் மொழி பெயர்ப்புகள் என்பனவற்றோடு இதுவரை நூல் வடிவம் பெறாத 'பூலோக வாணி' என்ற விஞ்ஞானப் புனைகதையின் முதல் மூன்று இயல்களையும் இந் நூல் கொண்டுள்ளது.

சொ.விருத்தாச்சலம் என்ற இயற்பெயர் கொண்ட புதுமைப் பித்தன் அவர்கள் சொ.விருத்தாச்சலம், சொ.வி, கூத்தன் என்றவாறு பல்வேறு பெயர்களில் தம் கதைகளை எழுதியவர். மொழி பெயர்ப்புகளில் புதுமைப் பித்தன் என்ற பெயரையே அதிகம் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மணிக்கொடியில் வெளிவந்த 'தேசிய கீதம்' என்ற கதை மட்டும் (மொழி பெயர்ப்பு) சொ. விருத்தாச்சலம் பி.ஏ என்ற பெயரில் வெளிவந்துள்ளது. 1938ல் தினமணி ஆண்டு மலரில் வெளியான 'கலப்பு மணம்' என்பது எவ்வித பெயரும் இல்லாமல் வெளி வந்துள்ளது.

பி.ஏ பட்டம் பெற்ற புதுமைப் பித்தன் அவர்கள், தமது சமகால நவீன எழுத்தாளர்களைப் போல் ஆங்கிலத்தைச் சரளமாகப் படிக்கவும் எழுதவுமான ஆற்றலைப் பெற்றிருக்கின்றார். அவர் எழுதிய சில ஆங்கிலக் கடிதங்கள் அவருக்கு இருந்த ஆங்கில மொழிப் பயிற்சியையும் ஆற்றலையும் காட்டுகின்றன என அறிஞர்கள் காட்டியுள்ளனர்.



பேச்சுத் தமிழை புனைகதையில் படைப்பூக்கத்தோடு பயன்படுத்துவதில் முன்னோடியான புதுமைப்பித்தன், மொழி பெயர்ப்புக் கதைகளில் எப்படி உரையாடலைக் கையாள்வது எனத் தத்தளித் திருப்பதை உணர முடிகின்றது. பேச்சு மொழியா, எழுத்து மொழியா என்ற ஈரடி நிலையோடு பேச்சுத் தமிழிலும் எந்த வட்டார மொழியைக் கையாள்வது என்று திணறியிருக்கின்றார். கடைசியில் பெரிதும் நெல்லைத் தமிழையும் சென்னைத் தமிழையும் சார்ந்து அவர் தேர்வு அமைந்திருக்கின்றது என்று ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்கள் ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

25 ஏப்ரல் 1906ம் ஆண்டில் பிறந்த புதுமைப் பித்தன் அவர்களின் முதலாவது படைப்பு 'குலோப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜான் காதல்' என்பது 'காந்தி' என்னும் இதழில் 1933ம் ஆண்டு ஒக்டோபர் 18ல் வெளிவந்தது. 1934 ஏப்ரலிலிருந்து மணிக்கொடியில் பல கதைகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டார். பின்னர் சிறிது காலம் 'ஊழியனில்' உதவியாசிரியராகப் பணியாற்றினார். 1935 ஜூலை முதல் 1943 செப்டம்பர் வரை 'தினமணி'யில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

1946ல் ஜெமினியின் 'அவ்வையார்' மற்றும் 'காம வல்லி' ஆகிய திரைப்படங்களில் பணியாற்றினார். அத்துடன் 'வசந்தவல்லி' என்ற படத்தை எடுக்கமுயன்றார். 1947ல் எ.கே.டி பாகவதரின் 'ராஜ முத்தி' படத்திற்காக 'புனே'யில் இருந்தபோது காச நோய்க்கு ஆளாகிய பின்னர் 1948ம் ஆண்டு ஜூன் 30ல் மறைந்தார்.

ஜோன் போனான் என்பவர் எழுதிய விஞ்ஞான புனை கதையைத்தான் 'பூலோகவாணி' என்ற பெயரில் புதுமைப்பித்தன் மொழி பெயர்த்துள்ளார். 1936 ஜூன் மாத 'தினமணி'யில் வெளிவந்த (தொடராக) இக்கதை, 1981ல் நடப்பதாகக் கற்பனை செய்யப்பட்டிருக்கின்றது. 'பூலோகவாணி' என்பது விண்கலமொன்றின் பெயர். செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்லுகின்றது. ஒரு சில அத்தியாயங்களே மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இதனை வாசிக்கும்போது 'சுஜாதா' அவர்களும் 'ஆதர்.சி.களார்க்' அவர்களும் எம் மனதில் வந்து போகிறார்கள். சுமார் ஏழு தசாப்தங்களுக்கு முன்னரே கவனமான மொழி பெயர்ப்பு செய்யப்பட்டிருப்பது மிகவும் அபாரம். புதுமைப்பித்தனின் அக்கால எழுத்து நடை 70 வருடங்கள் கடந்த பின்னும் வாசிக்கும்போது இலகு நடையாகத்தான் தெரிகிறது.

இவ்விடத்தில், எமது எழுத்தாக்கங்களை சுமார் நூறு வருடங்களின் பின் யாராவது வாசிக்க நேரிட்டால் எவ்வாறு இருக்கும் என்ற விபரீத கற்பனையும் எம் மனதில் எழுந்து மறைந்தது. இம் மொழி பெயர்ப்பு நூலில் 'உலகத்துச் சிறுகதைகள்' என்ற தலைப்பில் இருபத்தொன்பது சிறுகதைகளும் 'உயிர் ஆசை' என்னும் தலைப்பில் எட்டு அமெரிக்கக் கதைகளும் 'மணியோசை' என்னும் தலைப்பில் ஆறு ஜப்பானியக் கதைகளும் 'பளிங்குச் சிலை' என்னும் மகுடத்தின் கீழ் பத்து ரஷ்யக் கதைகளும் உலக அரங்கில் ஐந்து நாடகங்களும் பிரேத மனிதன், பலி பீடம், பூலோக வாணி போன்ற மூன்று குறுநாவல்களும் மேலும், எட்டு தழுவல் கதைகளும் காணப்படுகின்றன.

இந்நூலின் இலங்கை விலை ரூபா 1687.50 ஆகவுள்ளது. இலங்கையின் பிரபல்யமான புத்தகக் கடைகளில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இலக்கிய ஆர்வலர்கள் ஆறுதலாக வாசிக்கவேண்டிய படைப்பு இது.

## நிரந்தரம் எது?

உறவுகள் கூட
ஊனமுற்று உதிர்வதுண்டு
செல்வங்கள் கூடச்
செலவாகிக் கரைவதுண்டு
புகழ்கூடப்
புழுதியாகப் பறப்பதுண்டு
வீரம் கூட
விறைத்துப் போவதுண்டு
கவிதைக் கருவூலங்கள் கூட
கரைந்து கருகுவதுண்டு
உற்ற காதல் கூட
உதறிவிட்டுச் செல்வதுண்டு
நட்புக் கூட
பாதியில் நரைப்பதுண்டு
பாசங்கூட பாதியிற்
பறிபோவதுண்டு
ஆனால்
"நீ" மட்டும்
என்னை ஒட்டிக்கொண்டு
என் பின்னும் வருகிறாய்
என் முன்னும் செல்கிறாய்
சில வேளை என் காலிற் சிக்குண்டு
சிதைகிறாய்;;
எங்கு சென்றாலும்
பிரியாது பின்தொடர்கிறாய்;;
உன்னை என்னிடமிருந்து
பிரிக்கவே முடியாது.
எல்லாவற்றையும்
பிரித்துப் படைத்த ஈசன்
உன்னை மட்டுமே
ஒட்டி நிற்க
கட்டளையிட்டான்
இன்பத்திலும்,துன்பத்திலும்
சிரித்தும், அழுதும்
இணையும் "நீ"
ஓடமாட்டாய்
ஒழிய மாட்டாய்
ஓய மாட்டாய்;.
நீ கூறுவது கேட்கிறது
"நண்பா"
உன்னை எப்படிப்பிரிவேன்
உன் உயிர் போகும்
வரை உன்னுடன்இருப்பேன்;;
என்னிடமே உறவைக்
கற்க வேண்டும்.
என்னை "நிழல்" என்று
நிந்தித்தாலும்
நிரந்தரமாக நிலைத்து
நிற்பவன்நான் மட்டுமே.

இனியபாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பவுல் மூலாதாரங்கள்

புனித பவுல் அப்போஸ்தலர் சிலிசியா நாட்டின் தார்சஸ் என்ற நகரில் பிறந்தார். இது தற்காலத் துருக்கியின் தெற்கில் அமைந்திருந்தது. இயேசு பிறந்து 10 அல்லது 15 ஆண்டுகளுக்குப் பின்னர் பவுல் பிறந்திருக்கலாம்.

அவரைப் பற்றி அறிய மூலாதாரங்கள் அப்போஸ்தலர் பணி என்ற லூக்கா அல்லது லூக் எழுதிய பனுவலோடு அக்கால இலக்கிய புதைபொருள் ஆய்வுகளுமாகும்.



புனித பவுலின் வாழ்க்கையை அறிந்துகொள்ள நமக்குக் கிடைக்கும் ஏனைய மூலாதாரங்கள்; புனித பீட்டர் எழுதிய 2ம் திருமுகம் (2Pet. 3:15-16); புனித பவுல் தாமே எழுதிய திருமுகங்கள் முக்கியமானவை.

ஆனால் புனித லூக்கா இந்த நூலை புனித பவுலின் மரணத்தின் பின்பு 25 அல்லது 35 வருடங்களுக்குப் பின்பே எழுதுகிறார். லூக்கா எழுதியதின் முக்கிய நோக்கு தமது விசுவாசத்தையும், இறையியல் மனப்பதிவுகளையும் வெளிப்படுத்தவே என விவிலிய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதனால் புனித பவுல் பற்றிய லூக்காவின் செய்திகளைக் கவனமாகப் பரிசீலிக்கவேண்டும் என்கின்றனர் ஆய்வாளர்கள். எனினும், அப்போஸ்தலர் பணி நூலிலிருந்துதான் நாம் பவுலைப் பற்றிய அனேக செய்திகளை அறிகின்றோம்.

லூக்காவின் படி அவர் மனந் திருந்திய பின் நேராக ஜெருசலேம் சென்று அப்போஸ்தலர்களைச் சந்தித்து அவர்களின் ஆசீரையும், அங்கீகாரத்தையும் பெறுகிறார்; (அ.ப. 9:19-30) என்பதாகும்.

ஆனால் பவுல் தாமே எழுதிய கலாத்தியர் திருமுகத்தில் (கலா: 1:16-24) தாம் அப்போஸ்தலர்களிடம் செல்லவேண்டிய அவசியம் இருக்கவில்லை என்றும் தமக்கு உயிர்த்த இயேசு நேரடியாகக் காட்சி கொடுத்ததாகவும் அப்போஸ்தலிக்க அதிகாரத்தை இயேசுவிடம் பெற்றுக்கொண்டதாகவும்; அது டமாஸ்காஸ் செல்லும் வழியில் அடைந்ததாகவும் குறிப்பிட்டு, மேலும் கூறுகிறார்; தாம் இயேசுவைக் காட்சியில் கண்ட பின் மூன்று வருடங்களுக்கு ஜெருசலேம் செல்லவில்லை என்கிறார்.

இங்கு நாம் பவுலின் கூற்றையே ஏற்கவேண்டும். மேலும் நற்செய்தி ஏடுகளும், பிற அப்போஸ்தலர் பணி முதலான புதிய ஏற்பாட்டு நூல்கள் வெளிவரும் முன் புனித பவுலின் திருமுகங்களே எழுத்துருவம் பெற்றன.

கலாத்தியர் 1:11ல் பவுல் கூறுகிறார், சகோதர சகோதரிகளே உங்களுக்கு ஒன்று கூற விரும்புகின்றேன். நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தி மனிதரிடமிருந்து வந்ததல்ல. எந்த மனிதரிடமிருந்தும் நான் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. மாறாக இயேசுக் கிறிஸ்து அருளிய வெளிப்பாட்டின் வாயிலாகவே அது எனக்குக் கிடைத்தது.

கலா 1: 17ம் வசனம்: எனக்கு முன் திருத்தூதர்களாய் இருந்தவர்களைக் காண எருசலேமுக்குப் போகவுமில்லை. ஆனால் உடனே அரேபியாவுக்குச் சென்றேன். அங்கிருந்து நேரே டமாஸ்கஸ் திரும்பினேன். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுதான் கேபாவைப் பார்த்துப் பேச நான் ஜெருசலேம் சென்றேன் என்கிறார் பவுல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதுரு கூறுகின்றார் - 2பேது 3:15-16

நம் அன்பார்ந்த சகோதரர் பவுல் தமக்கு அருளப்பட்ட ஞானத்தின்படி உங்களுக்குத் தம் திருமுகங்களில் இவை பற்றிப் பேசும்போதெல்லாம் இவ்வாறே அவர் சொல்லுகிறார். அவருடைய திருமுகங்களில் புரிந்துகொள்ள கஷ்டமானவைகள் சில உண்டு. கல்வி அறிவில்லாதவர்கள். இவற்றை விளங்கிக்கொள்ள மாட்டார்கள்.

இது பேதுரு பவுலைப் பற்றிக் கூறும் சாட்சியம்

புனித பவுல் பணியாற்றிய - கடின உழைப்பை மேற்கொண்ட - சபைகளைப் பற்றி விவரிக்கு முன் புனித பவுலின் வாழ்வையும் அவரது வேதம் பரப்புதல் (Missionary Journeys) யாத்திரைப் பிரயாணங்களையும் நோக்கலாம். புனித லூக் பவுலின் இப்பிரயாணங்களை மூன்றாக வகுக்கிறார். இப்பிரயாணங்கள் மூன்று தடவைகள் நடந்தனவா? பவுல் தாம் போதித்த இடங்களுக்கு மூன்றுக்கு மேற்பட்ட முறை சென்றாரா? அல்லது பவுலின் அந்தந்தத் தலத் திருச்சபைகளின் பாரம்பரியங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் லூக்கா எழுதுகிறார் என்பன இன்று விவாதிக்கப்படும் விடயங்கள். எனினும் வரலாற்று விசுவாசக் கண்ணோட்டத்திற்கேற்ப புனித லூக்கா வரைந்த அப்போஸ்தலர் பணி நமது முக்கிய மூலாதாரமாகும்.

லூக்கா குறிப்பிடும் காலவரையறைகள் அண்ணளவானவை என்று லூக்காவை நுணுகி ஆய்ந்தவர்கள் குறிப்பிடுகிறார்கள். (காண்க In the days of Paul - பக்கம் 5)

பவுல் யூத குலத்தில் பிறந்தவர். அக்கால யூதர்கள் பிற மக்களை தம்மிலும் குறைந்தவர்களாகக் கணித்தனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். கிறஸ்துவின் போதனைகள் அக்காலத்தில் பரவுவதற்கு இம்மனப் பான்மைகள் பெரும் எதிரிடைகளாக இருந்தன. பின்னர் இவற்றை நோக்குவோம்.

பவுலின் - யூத - இயற்பெயர் சவுலாகும் (சவுல் - saul). அவர் பிற இன மக்களோடு (Gentiles) வாழ்ந்தமையினால் பவுல் (Paul) என்ற பெயரையும் தாங்கினார். அதுவே வரலாற்றில் நிலைகொண்டு பிரசித்தி பெற்றது. பவுல் தாம் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் (திருமுகம்) தம்மைப் பற்றிப் பெருமையாகக் குறிப்பிடுகின்றார் (பிலிப் 3:5).

தாம் பிறந்து 8ம் நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டதாகவும் இஸ்ராயேல் குலத்தவர் என்றும் மூதாதையர் யாக்கோபுவின் (இறைவன் இவருக்கு இட்ட பெயர் இஸ்ரவேல்) என்றும்; ஹிபுறு (Hebrew) இனத்தவர் என்றும், சட்டத்தின் முன் தாம் ஒரு சட்ட வல்லுனர் குலத்தில் உதித்த பரிசி (Pharisee) என்றும் கூறுகிறார். பெஞ்சமின் குலத்தோன்றல் எனவும் கூறுகிறார்.

அப்போஸ்தலர் பணியும் இத்தகவலை வலியுறுத்தி பரிசேயரின் இறையியல் சாஸ்திரத்தில் பிரசித்தி பெற்ற ஜெருசலேம் நகரில் அக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த பேராசான் (Rabi) கமாலியேலிடம் (Gamaliel) கல்வி பயின்றதாகவும் குறிப்பிடுகின்றது. (அப்.பணி 22:3) இதனால் பவுலின் வாழ்க்கையில் அவரது இரு முகங்களைக் காணக்கூடியதாக உள்ளது. அதில்

### இன்டர்போல்




இன்டர்போல் என்று அழைக்கப்படும் அனைத்துலக பாதுகாப்புப் படையின், 187வது அங்கத்துவ நாடாக வத்திக்கான் இணைந்து கொண்டது. வத்திக்கானுக்கு வெளியேயான திருத்தந்தையின் பயணங்களின் போது பாதுகாப்புக்கு இந்நடவடிக்கை பெரிதும் உதவும் என வத்திக்கான் காவல் துறைஅதிகாரி தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று டமாஸ்கஸ் வழியில் அவர் மனம் மாறுவதற்கு முன்புள்ள அவர் வாழ்க்கை. யூதப் பாரம்பரியங்கள் பவுலின் உயிர்நாடி. அது அவரது கலாசாரக் குடும்ப முதிசம் (Heritage). ஆரம்ப காலக் கிறீஸ்தவர்கள் என அழைக்கப்பட்டவர்கள், இயேசுவின் உயிர்த் தெழுதலைப் பற்றிப் பேசிய பொழுது அதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. எனவே, இளைஞர்க்கே உரிய துடிப்புடனும் அவர் பெற்றிருந்த மிக உயர் கல்வி காரணமாக சமுதாயம் அவருக்கு அளித்திருந்த உயர் கௌரவம் அதனால் பெற்றுக்கொண்ட செல்வாக்குக் காரணமாகவும் யூத குரு உயர் பீடத்திலிருந்து அங்கீகாரம் பெற்று கிறீஸ்தவர்களைத் துன்புறுத்தியேனும் தம் யூத மதத்தை நிறுவ வீரா வேசத்துடன் செயற்படும் ஒருவராக நாம் அவரைப் பார்க்கின்றோம்.

கலாத்தியருக்கு அவர் எழுதிய கடிதத்தில் (கலா 1:13:14) அவர் பெருமையோடு கூறுகிறார், "என்னுடைய வயதினரில் அனேகரை விட நான் யூத மதத்தில் (Judaism) அதிக முன்னேற்றம் கண்டவன்" என்றார். அறிவினால் உயர்ந்து, ஆற்றலினால் வளர்ந்து, முதிர்ச்சியை இளமையிலேயே கண்ட மூதறிஞர்கள் பற்றி நாம் அறிகிறோம். அப்படிப்பட்ட பேரறிஞர் பவுல் என்னும் அடிகளார் பிற்காலப் புனிதர். துணிச்சல் மிகு பரிசேயர் கோத்திர வழித்தோன்றல் - தம் கொள்கைகளுக்கு எதிரானவர்களை - கிறிஸ்து வானவர்களைத் தண்டிக்க எண்ணம் கொண்டது இளமையின் துடிப்பு - வாலிபத்தின் வேகம் - வீரத்தின் - தலைமைத்துவத்தின் உயர்நிலை - சாதாரணமான மொழியில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த எண்ணங் கொண்டது.

வெற்றி கிடைத்ததா? ஆண்டவன் - இயேசு - அவரை இடைநிறுத்தினார் - விளைவு - டமாஸ்கஸ் வழியில் வீரவேங்கை பவுல் - இயேசுவின் பக்தனானார். அந்த வாழ்க்கையே நாம் காணும் பவுலின் வாழ்க்கை. இது அவரது இரண்டாவது முகம்.

**- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஐ. மத்தியு F.C -**

# யூட் சர்வானந்தன் அடிகளாரின் முதல் திருப்பலி



"பாலையூற்று" எனும் ஆன்மீக விளைநிலத்தில் இருந்து திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்திற்கு புதிய குருவாக 12.11.2008 அன்று மேதகு ஆயர் கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்ட அருள்பணி இக்னேசியஸ் யூட் சர்வானந்தன் அடிகளார் 13.11.2008 அன்று காலை 7.30 மணியளவில் பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தில் பங்கு மக்களினால் அளிக்கப்பட்ட வரவேற்பினைத் தொடர்ந்து துணை ஆயர் பொன்னையா யோசப் ஆண்டகையின் பிரசன்னத்தில் குருக்கள், அருட் சகோதரர்கள், அருட்கன்னியர்கள், இறைமக்களெனப் பலர் சூழ்ந்திருக்க பாலையூற்று மண்ணின் மைந்தர்கள் சகிதம் தமது முதல் திருப்பலியினை ஒப்புக்கொடுத்தார்.

பாலையூற்றின் முன்னாள் பங்குத்தந்தை அருள்பணி A. F. மார்சலியர் OMI அடிகளாரினால் அழைத்தல் ஊக்கம் பெற்று, திருமறை அறிவிப்புப் பணி வாழ்வில் 1994ம் ஆண்டில் கால் பதித்து மெய்யியல், இறையியல் கற்று இடைக்காலப் பயிற்சிகளையும் பெற்ற இவர் மடுத்தீன் இக்னேசியஸ் - நீற்றா தம்பதியரின் கடைசிப் புதல்வனாவார்.

அருள்பணி சூசைமுத்து டக்ளஸ் அடிகளாரின் உடன் பிறவா சகோதரனாகிய இவர் சில காலம் தொழில்வாய்ப்பை நாடி சீனக்குடா பிறீமா சிலோன் லிமிட்டட்டில் சிற்றூழியராகப் பணியாற்றிய போதிலும் இறைசித்தம் இவரை மீண்டும் அழைப்பின் பாதைக்கு நாடி வரச் செய்தது.

இன்று நம்ம ஊர்ப் பையன் நம் மத்தியில் ஒரு குருவாகத் தோன்றிப் பிரகாசிக்கிறார் என்கிற பூரிப்போடு அன்றைய அவரது நிலை கண்டு பாலையூற்றுப் பங்குச் சமூகம் பெருமிதம் அடைகிறது.

திருப்பலியின் நிறைவில் பாலையூற்று மண்ணின் ஆறாவது குரு மைந்தனாகிய யூட் சர்வானந்தன் அடிகளாருக்கு வாழ்த்துப்பா பாடி அன்புப் பரிசில்களையும் வழங்கி கௌரவித்துக் கொண்டனர் பங்கின் பக்திச் சபையினர்.

இறைவழியில் அவரது பணிவாழ்வு சிறக்கவும் நீடிய காலம் நலம் பெறவேண்டியும் செபிப்போம் வாழ்த்துவோம்.

**தகவல்: G. அல்பேட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வசை' பாடல் (இலக்கியச் சுவை)

அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் புலவர்கள் அரசர்களை வாழ்த்தியும் புகழ்ந்தும் பாடுவார்களாம். அதற்கு அரசர்களும் அவர்களைப் பாராட்டி பொற்கிளி (பண முடிப்பு) பரிசில்கள் போன்றவற்றைக் கொடுத்து கௌரவிப்பார்களாம். இவ்வாறு பணக்காரர்களையும் புலவர்கள் வாழ்த்திப் புகழ்ச்சிப்பா இசைப்பார்களாம். அவர்களும் பொன், பொருள் என்று கொடுத்து கௌரவிப்பார்களாம். இந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்தில் நல்லூரில் பிறந்த புலவர் ஒருவர் அவர் பெயர் அவிநாசிப் புலவர். அவர் அவிநாசி என்ற ஊரில் வாழ்ந்ததால் இப்புனை பெயர் உண்டாயிற்றாம். இவர் எழுதிய நூல் "கருணைபுரி மாலை"

இவருக்கோ இசை பாடுவதைவிட வசை பாடுவதில் பெருவிருப்பம் உண்டு. அந்தக் காலத்தில் ஒரு பணக்காரரின் வீட்டிற்குச் சென்று இவர் பாடியிருக்கிறார். அந்தப் பணக்காரனோ, சரியான உலோபி. புலவரைப் பார்த்து "போயிற்று வாங்க" என்று புலவரை வெறுங் கையுடன் அனுப்பினாராம். புலவருக்கோ, கோபம் பொங்கியெழுந்தது. உடனே அவிநாசிப் புலவர் வசைப் பாடல் பாடினாராம். பாடலைப் பாருங்கள்:

*சீவனுள் ளளவுமே நட்டுவாக் காலியும்*
*தேளும் சினந்து கொட்டத்*
*திருதிரென முண்டவிழி யில்குளவி கொட்டஅதில்*
*செங்குருதி ஆறு கொட்டப்*
*பாவிமக னேஉனது வாசலில் சாம்பிணக்*
*கொட்டுகள் வந்து கொட்டப்*
*பந்தரடி மாரடித் துறவினர்கள் வாய்கரிசி*
*படிநெல் கொணர்ந்து கொட்ட*
*ஆவலொடு கால்மாட்டில் உனதுபெண் டாட்டிகள்*
*ணருவியொரு கோட்டை கொட்ட*
*ஐயையோ என்செய்வேன் என்றுமகன் நீர்மாலை*
*அதனை கொணர்ந்து கொட்ட*
*சாவடியில் அறுதலிகள் கூடியழ ராமனே*
*சப்பாணி கொட்டி யருளே!*

என்று கடுமையான வசைமாரி பாடியுள்ளார் இப்புலவர். இப்பாடலின் கருத்தாழத்தை சீர்தூக்கிப் பார்ப்போம்.

பரிசு வழங்காத பணக்காரனுடைய சீவன் இருக்கும் வரை, "நட்டுவாக்காலியும் தேளும் சினந்து கொட்டவேண்டுமாம். திருதிருவென்றிருக்கும் முட்டைக் கண்ணில் குளவி குத்தவேண்டுமாம். அதிலிருந்து சிவப்பு இரத்தம் ஆறு போன்று ஓடவேண்டுமாம். மனைவிமார் ஒப்பாரி வைக்க அறுதலிகளும் ஒப்பாரி வைக்க" என்று கேவலமாகக் கற்பனை செய்து திட்டுகிறார் அந்த வசைபாடிப் புலவர்.

ஒருவர் வாரி வாரி தனக்கும் இல்லாமல் வழங்கினால் ஒரு பேச்சு, கொடுக்காவிட்டால் இன்னொரு பேச்சு. கொடுத்துக்கொண்டே இருந்தால் அவர்கள் நல்லவர்கள். இல்லாவிட்டால் அவர்கள் கொடியவர்கள் என்று வசைபாடுவது புலவர்கள் மட்டுமல்ல, புலமைத்துவம் இல்லாதவர்களும் வாங்கிக்கொண்டே "நீ என்ன தந்து கிழித்து விட்டாய்" என்று வசை பாடத்தான் செய்கிறார்கள். வசை பாடுவதோடு விட்டாலும் பரவாயில்லை தேள், குளவியை விட துரத்தித் துரத்திக் கொட்டுகிறார்கள்.

ஆனால், வேதாகமம் என்ன சொல்கிறது? "உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள், அவர்களுக்கு நன்மை செய்யுங்கள்" என்று இயேசு தாமே கூறியுள்ளதாகக் கூறுகிறது.

பரிசு கிடைக்காவிட்டாலும் பண்பாக, சகிப்புத் தன்மையோடு பாடும் புலவர்களும் இல்லாமலில்லை. இந்தியாவின் இராமநாதபுரத்து பொன்னம்பலக் கவிராயர் இப்படிப் பாடினாராம்.

*ஏட்டைக் கட்டி எழுத்தோடு எழுத்தை வைத்து*
*இணைத்துக்கட்டி இசைக்கட்டி லோபர்மேல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முற்கால மிருகங்களின் எச்சங்கள்

டோர்கே என்ற பகுதியில் ஐந்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யானைகளின் மூதாதை வம்சமான மேமோத் யானை, கரபு, நாலுஅங்குல நீளத்துக்குப்பல் உள்ள புலிகள் ஆகியவற்றின் பற்கள் கிடைத்துள்ளன.

*பாட்டைக் கட்டி என் தொண்டையும்கட்டி*
*பாவந்தான் இனி என்றைக்குத் தீருமோ?*

என்று மனக்கிலேசத்தில் பாடினாராம். பாட்டைக் கட்டிப் பாடுவது கஷ்டந்தான். சிலர் பாடினால் நன்றாக இருக்கும். சிலர் பாடாவிட்டால்தான் நன்றாக இருக்கும். பொதுவாக மனிதனுக்குக் கொடுத்துக்கொண்டே இருந்தால் நல்லவர். கொடுக்காதவர் தீயவர். சிலர் சிலரிடம் பெறும் நன்மைகளை வெளியில் சொல்லவே விரும்புவதில்லை. இவர்கள் எப்படி நன்றிக்கடன் தீர்ப்பார்கள்? எது எப்படி இருந்தாலும் திருவள்ளுவர் கூறுகிறார்:

"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

எனவே ஆபத்தின்போது ஒருவர் சிறு உதவி செய்தாலும் அது பெரிய உதவிதான். இலக்கியங்களிலிருந்தும் நாம் அனேக நல்நெறிகளை அறிந்துகொள்ள முடியும். வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி இலக்கியமே.

**வயலற் சந்திரசேகரம்**



## வைரவிழாக் காணும் அருள்சகோதரி லில்லி ஓசா

யாழ் நகரைப் பிறப்பிடமாக் கொண்டு அந்நகரின் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் முதல் துறவியானதன் 60 ஆண்டு வைர விழாவை அருள்சகோதரி லில்லி ஓசா கொண்டாடுகிறார். 1947ம் ஆண்டு இந்தியாவில் உள்ள பெங்களூர் என்னும் பட்டணத்தில் தனது துறவற வாழ்வை மேற்கொண்டார். அவரை இச்சபைக்கு முதற் கனியாக அனுப்பி வைத்த பெருமை வண. லூயிஸ் ஜோசப் அ.ம.தி. அவர்களையே சாரும்.

08.01.1949 முதல் வாக்குத்தத்தத்தைப் பெற்ற அவர் தனது பணிக் காலத்தில் 40 வருடங்கள் கல்விச் சேவையிலும் 20 வருடங்கள் பங்குச் சேவைகளிலும் செலவழித்தார். இவருக்கு இறைவன் அளித்த ஆன்ம சரீர நன்மைகளுக்காக நன்றி சொல்வோம்.

இன்றைய சூழலில் மக்கள் படும் வேதனைகளை மனதில் கொண்டு வைர விழாவை கொழும்பு 10ல் அமைந்துள்ள கார்மேல் மாகாண தலைமை மடத்தில் தம் துறவற சகோதரிகளுடன் அமைதியாகக் கழிக்கின்றார்.

இறைவன் இவரை மென்மேலும் ஆசீர்வதிக்க செபத்தில் நினைவுகூரும்படி கேட்கின்றோம்.



## குறும்(புப்)பா - 12

அச்சமின்றித் திரிந்ததொரு காலம்
ஆடியவிளை யாட்டமுகுக் கோலம்
எச்சமாய் நிற்பதெல்லாம் ஆடுபுலி ஆட்டமென்றால்
இனியேது அதுகனாக் காலம்

*~ மலர் ~*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரு மாற்றம்

யாழ் ராதுவல்லி.

இறைவா!
நீ படைத்த ஒவ்வொரு மனிதரும்
வாழ்தகவு கொண்ட வித்துகள்
இந்த வாழ்தகவு கொண்ட வித்துகள்
பதர் வித்துகள் ஆக்கப்பட்டுள்ளன.

இறைவா!
பதர்வித்துகள் காற்றுக்குப்
பறந்து போகாது இருக்கட்டும்
நீ அதனைப் பராமரித்துக்கொள்
நல்ல நிலத்தில் பயிரிட்டுக்கொள்

அதற்கு
ஒளியூட்டு;.. நீர் ஊற்று;.. பசளையிடு;..
மீளவும் வாழ்தகவு கொண்ட
வித்துகளாக உருமாற்று.

# கடுகுக் கதை 11 கறுப்பு வேன்

தவணை இறுதி நாள் 9ம் வகுப்பு தேர்ச்சியறிக்கையை வாங்கிய கிஷான் பாடசாலையிலிருந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு வந்து அப்படியே 'பூட் சிற்றியில்' ஐஸ்கிறீம் ஒன்றைச் சாப்பிட்டவாறே மணிக்கூட்டுக் கோபுரப்பக்கமாகச் சென்றான். காந்திசிலைச் சதுக்கப் பக்கம் மக்கள் கூட்டம். பெரிய மேடையொன்றில் 'பராக்கிரம சவுண்ட' ஒலிவாங்கியைப் பிடித்தபடி இயேசுநாதர் உரையாற்றிக்கொண்டிருந்தார். பக்கத்தில் 'ராஜன் அண்ணா' காதில் எதையோ மாட்டிக்கொண்டு 'சவுண்ட மிக்ஸ்சரை' இயக்கிக்கொண்டிருந்தார்.

"வாருங்கள்.... மனந்திரும்புங்கள்....." என்று இயேசு பேசிக்கொண்டிருந்தார். கிஷான் மெய்மறந்து செவிமடுக்கத்தொடங்கினான்.

திடீரென்று கறுப்பு வேனொன்று வந்து நின்றது. நான்கைந்து பேர் மளமளவென்று பாய்ந்தோடிப்போய் இயேசுவைப் பிடித்து வேனிற்குள் திணித்துக்கொள்ள வேன் விரைந்தோடி மறைந்தது.

கனவு கண்டுகொண்டிருந்த கிஷான் நித்திரையில் வாய்விட்டு அலறினான். "ஐயையோ....! ஐயையோ.....! ஏசப்பாவை கறுத்த வேனில கடத்திப் போட்டாங்களே...." என்றவாறே கட்டிலிலிருந்து கீழே விழுந்தான்.

திடுக்குற்று எழுந்த கிஷானின் தாய் "ஐயோ!



என்ட புள்ளக்கி என்னவோ புடிச்சித்து... விடிய தேத்தாத்தீவுக்கு கொண்டு போகனும்..." என்று வருந்தினாள்.

அவளை அதட்டிய அவளின் கணவன் "உனக்கு என்ன பைத்தியமா? வழமையா வெள்ள வேனெல்லா வாறது இவன் கறுப்பு வேனெண்டல்லா கத்துறான். விடிய அவன மனோவைத்தியர் கனேசன் ஐயாவிட்டத்தான் கொண்டுபோகனும்"

விழித்தெழுந்த கிஷான் விக்கித்து நின்றான்.

- பர்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைப் போட்டி

மூன்றாம் பரிசு

# ஏக்கம்

நேரம் விடியற்காலை 5.00 மணி வழக்கம் போல மணிக்கூட்டின் அலாரச்சத்தத்துடன் விழித்தாள் அன்னம்மா. எழுந்து அடுப்பில் நீரைக் கொதிக்கவைத்து விட்டு முகத்தைக் கழுவ கொல்லைப்புரம் போனாள். முகம் கழுவிவிட்டு வந்து தேநீர் ஊற்றத் தயாரானபோது திருந்தாதி ஒலித்தது. கோவிலுக்குப் போகவேண்டும் என அவளது உள்மனம் சொல்லியது. அன்னம்மா தினமும் காலையில் கோவிலுக்குச் சென்று விட்டே வேலைக்குச் செல்வாள்.

ஒரு பணக்காரரின் வீட்டில் சமையல் வேலை அவளுக்கு. அவர் பெயர் ஸ்ரீபன். நான்கு பிள்ளைகள். அவரின் மனைவி மேரி. அவர்களுக்கு அன்னம்மாவை ரொம்பப் பிடிக்கும். 45 வயதைக்கடந்து விட்டாலும் அவளின் சுறுசுறுப்பு மற்றும் பணிவு என்பன அவர்களை அவள்பால் ஈர்த்ததில் வியப்பொன்றுமில்லை.

அன்னம்மாவின் கணவர் இறந்து பத்து வருடங்கள் கடந்து விட்டன. ஒரு குடிசையில் அவள் தனியே வசிக்கிறாள். அவளுக்கும் ஒரு மகன் இருந்தான், பெயர் மோசஸ். 22வயது வரை இன்பமாக அவளுடன் வாழ்ந்த அவன் தறபோது இல்லை. இலங்கையில் தற்போது சர்வசாதாரணமான வெள்ளைவான் ஆட்கடத்தல் அன்னம்மாவின் குடும்பத்தையும் விடவில்லை. கலண்டரைப் பார்க்கிறாள். இன்று நவம்பர் 20ம் திகதி. அவள் மகன் கடத்தப்பட்டு இன்றுடன் 6 மாதங்கள் ஆகின்றது. உயிரோடு இருக்கின்றானா? எங்கிருக்கின்றான்? எந்தத் தகவலும் இல்லை. கண்களில் நீர் திரையிடுகிறது.

"கடவுளே என் மகனைக் காப்பாற்று" என்று அவள் உள்மனம் கூக்குரலிடுகிறது. மிகுந்த இறைபக்தியுள்ள அன்னம்மா இன்னும் நம்புகிறாள் கடவுள் தம் மகனை பத்திரமாக தன்னிடம் சேர்ப்பார் என்று.

மணி 5.45 ஆகிவிட்டது. அன்னம்மா கோவிலுக்குச் செல்லத் தயாரானாள். அன்றும் காலை 6.00 மணித்திருப்பலியை பாதிரியார் செபஸ்தியான் மிகவும் பக்தியுடன் நடத்திமுடித்தார். திருப்பலி முடிந்தும் நெடு நேரமாக அன்னம்மா உருக்கமாகச் செபித்துக்கொண்டிருந்தாள். இதைக் கவனித்த பாதிரியார் அவள் வரும்வரை வெளியே காத்திருந்தார். அன்னம்மா வெளியே வந்து "தோத்திரம் பாதர்" அவர் அன்னம்மாவைப் பற்றிய சிந்தனையிலிருந்து விடுபட்டு மகனைப்பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா என வினவினார். அவளும் கண்ணீருடன் இல்லையென பதிலளித்தாள்.

"கவலைப்படாதீர்கள் எல்லாம் வல்ல இறைவன் உங்களை கைவிட மாட்டார்" என்று கூறி அவளை ஆசீர்வதித்து அனுப்பினார்.

பாதருக்கும் கவலையாகத்தான் இருந்தது.

"மோசஸ் நல்ல பொடியன் அவன் கோவில் வேலைகளில் முதல் ஆளாக வந்து உதவி செய்வான் அவனுக்கும் இந்த நிலமையா" என தனக்குள் சிந்தித்துக்கொண்டார். நாளை அவன் பெயரில் ஒரு பூசை வைக்க வேண்டும்.... தனக்குள்ளே கூறிக்கொண்டு கவலையோடு தூரத்தில்



K. செரின்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் அன்னம்மாவைப் பார்த்தபடி உள்ளே சென்றார்.

வீடு சென்ற அன்னம்மா உடைகளை மாற்றிவிட்டு வேலைக்குச் செல்கிறாள். ஸ்ரீபனின் வீட்டுக்குச் செல்லும் அன்னம்மா தனது வேலையை ஆரம்பித்தாள். 10.00 மணியளவில் அங்கு வரும் ஸ்ரீபன் ஊரில் மீண்டும் இனக்கலவரம் ஆரம்பித்து விட்டதாகக் கூறி கவலைப்படுகிறார். மூவினங்கள் வாழும் அவ்வூரில் அடிக்கடி இனக்கலவரம் ஏற்படுவது சகஜம். நாட்டிலுள்ள யுத்த சூழ் நிலையை அவ்வூரிலுள்ள அரசியல்வாதிகள் இனக்கலவரமாகத் தூண்டி விடுவது வழமையான விடயம். இதனால் பல அப்பாவி உயிர்கள் இறப்பது வேதனைதான்.

“ஐயோ இன்றும் எத்தனை அப்பாவிகள் பலியாகப்போகிறார்களோ!” வேதனை தோய்ந்த குரலில் கூறினாள் அன்னம்மா.

“யாருக்கும் இறை பயமே இல்லாமல் போய் விட்டது அன்னம்மா” ஸ்ரீபன் கூறினார்.

ஒரு வழியாக அன்றைய வேலைகளை முடித்து நேரத்தைப் பார்க்கிறாள்; கடிகாரம் 5.30 ஐக் காட்டியது. வீட்டிற்குப்போகத் தயாராகிறாள் அன்னம்மா.

“ஊரே வெறிச்சோடிப்போய் கிடக்கிறது தெருவிலே யாரும் இல்லை. பக்கத்து தெருவுக்கு சற்று முன் சென்ற டிரைவர் அன்ரனியின் முகத்தை கறுப்புத்துணியால் கட்டிய கும்பலொன்று தாக்குதல் நடத்தியுள்ளது. தெய்வாதீனமாக அவன் தப்பி வந்து விட்டான். இன்று இங்கு தங்கிவிட்டு பிரச்சனை தீர்ந்த பின் நாளையோ நாளை மறுதினமோ போகலாம்” என ஸ்ரீபனும் மேரியும் கூற.

“நான் வயதானவள் என்னை ஒன்றும் செய்யமாட்டார்கள்” எனக் கூறிக்கொண்டு இரண்டு தெரு தள்ளியுள்ள தனது வீட்டிற்கு போகத் தயாரானாள். அவள் தெருவில் நடக்கத்தொடங்கிய போது தெருவே வெறிச்சோடிக்கிடந்தது. அடுத்துவந்த குறுக்குச் சந்தில் செல்ல ஆரம்பித்தபோது அருகிலிருந்த வெற்றுக்காணியில் யாரோ முனங்கும் ஓசை கேட்டது. நின்று திரும்பிப் பார்த்தாள் யாரோ ஓர் இளைஞன். இரத்த வெள்ளத் தில் வீழுந்து கிடந்தான். கர்த் தரே! என்றபடி வேகமாக அவன் அருகில் சென்று பார்த்தபோது யாரோ அவனைத் தடிகள், பொல்லுகளால், நன்றாக தாக்கியிருப்பது புரிந்தது. அவளின் மகனையொத்த வயதுதான் இருக்கும் அந்த இளைஞனுக்கு. அவனின் மண்டை உடைந்து உதிரம் கொட்டிக்கொண்டிருந்தது. அவனருகில் உட்கார்ந்து அவனின் தலையைத்தூக்கி மடியில் வைத்து, தனது புடவைத்தலைப்பால் அவனது முகத்திலுள்ள உதிரத்தைத் துடைத்தாள்.

“தம்பி நீ யாரப்பா” என வினாவினாள்.

அவன் “அம்மே மாவ பேர கண்ட”

எனக் கூறிய போது அவன் வேறு இன இளைஞன் என்பதைப் புரிந்து கொண்டாள். ஆனால் அவன் என்ன கூறினான் என அவளுக்கு விளங்கவில்லை. சுற்றும் முற்றும் பார்க்கிறாள், உதவி செய்ய யாராவது இருக்கிறார்களா என.

“யாராவது வாங்க உதவி செய்ய...”

எனக் கூச்சலிடு கிறாள். அச்சத் தம் கேட்டு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அயல் வீட்டுக் காரர்கள் எட்டிப் பார்க்கிறார்கள்.

"ஏய் அன்னம்மா! இங்கால வா அவன் கொடூரமானவன். கொல்லப்பட வேண்டியவன்" என ஒருவனும் மற்றவன் "அவன் வேற இனம் அவனை அப்படியே விட்டுட்டு. நீ முதலில் வீட்ட போ" என அதட்டினான்.

அன்னம்மாவுக்குப் கோபம் கோபமாக வந்தது.

"வேற இனம் என்றாலும் அவனும் மனுஷன் தானே! ஆபத்தில் உதவாத நீங்கள் எல்லாம் கிறிஸ்தவர்களா? யாரையும் கொலைசெய்யும் உரிமை எங்களுக்கு இல்லை"

"என்னவோ செய் நாட்டு நடப்பு தெரியாத நீ உன் பிள்ளை போன இடத்துக்கே போகப்போகிறாய்"

எனக் கூறி விட்டு தங்கள் வீடுகளுக்குள் சென்று விட்டார்கள்.

"கடவுளே ஏன் இப்படி மனிதர்கள் மிருகங்களைப்போல ஒருத்தரை ஒருத்தர் அடித்துக் கொல்கிறார்களோ? மனித நேயம் எல்லாம் எங்கே போய்விட்டது?"

எனப் புலம்பிய படி அந்த இளைஞனைப் பார்க்கிறாள். அவன் மயக்க நிலைக்கு சென்றிருந்தான். மூக்கில் கை வைத்துப் பார்க்கிறாள். உயிர் இருக்கிறது. இவனை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

"கடவுளே இந்த வேளையில் யார் உதவி செய்வர்?"

டக்கென்று அவளுக்கு கருணைவடிவான பாதிரியார் செபஸ்தியாரின் ஞாபகம் வருகிறது. எழுந்து வேகமாக கோவிலுக்கு ஓட்டமும் நடையுமாக செல்கிறாள். கோவில் வளவில் நிற்கும் பாதரைக் கண்டவுடன்

"பாதர் சீக்கிரம் வாங்க, ஒரு உயிரை காப்பாற்ற வேணும்"

அன்னம்மா நடந்ததைக் கூறியதும் பாதர் உடனே தனது காரை எடுத்துக்கொண்டு அன்னம்மாவையும் ஏற்றிக்கொண்டு மூன்று தெரு தள்ளியுள்ள சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்தார். பாதிரியாரை எதிர்த்து அவ்வூரில் யாரும் கதைக்கவும் இல்லை; வன்முறையிலும் ஈடுபடவுமில்லை. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் காப்பாற்றப்பட்டான். அன்னம்மாவை பாதர் வீட்டில் இறக்கிவிட்டுச் சென்றார். அன்னம்மா வீட்டுக்கு வந்து குளித்து உடை மாற்றிவிட்டு. தனது மனதை இலேசாக ஆறுதல் படுத்தினாள்.

"கர்த்தரே இன்று உமக்கு பிடித்தமான ஒரு காரியத்தைச் செய்துள்ளேன்" என மகிழ்வோடு இருந்தாள்.

ஒரு வாரம் சென்றிருக்கும் அன்னம்மா தனது வழக்கமான பணிகளில் மூழ்கியிருந்தாள். ஸ்ரீபன் வீட்டுக்கு ஓடோடி வரும் பக்கத்து வீட்டு ஜான்சி

"அன்னமாக்கா உங்கட மகன் வந்திட்டான் ஓடி வாங்க"

அன்னம்மாவுக்கு இது கனவா நனவா என விளங்கவில்லை.

"கர்த்தரே உமக்குத் தோத்திரம்"

எனக் கூறியபடி வீட்டை நோக்கி ஓடுகிறாள். வாசலில் ஆறுமாத தாடியுடன் மெலிந்த தேகத்துடனும் அவளின் மகன் மோசஸ். தாயைக் கண்டவுடன் ஓடி வந்து அம்மா என அவளை அணைத்துக் கொள்கிறான். இருவரின் மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை. அன்று இரவு படுக்கும் போது மகன் சொன்ன விடயம் அவளை யோசிக்க வைத்தது.
அம்மா, காலையில் என்னைக் கொண்டுவந்து விடும் போது வானில் வந்த ஒருவன் சொன்னான்

"உன் அம்மா என் தம்பி உயிரைக் காப்பாற்றினாள். அதற்கு கைமாறாகத்தான் உனை விடுதலை செய்கின்றேன்"

கடவுளே உன் கைமாறு தான் எவ்வளவு பெரியது எனக் கூறியபடி தூங்கப் போகிறாள் அன்னம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டனை வாழ்த்துவோமே

புடமிட்ட தங்கமெனப் பரிமளித்து
புத்தொளியைத் தருகின்ற சுடரிதுவாம்
மேலோங்கும் பெரும்புகழின் பெருமைதன்னை
வானோங்கப் புகழ்பூத்த மாண்புகளும்
வற்றாத வளங்களையே காட்டியெங்கும்
அற்புதமாம் நிலைகளையே அமைத்துக்காட்டி
பொற்பணிகள் ஆற்றிவரும் "தொண்டன்"இதழை
வெற்றியின் பாதைகளில் வீறுநடையோடு
நற்பணிகள் தொடர்ந்திடவே வாழ்த்துவோமே

காலத்தின் தேவைகளை உணர்ந்துஅதன்
கருத்துள்ள நிலைகளை உணர்த்திநின்று
பொருத்தமாய்ச் செய்திகளைப் பலவழியில்
துணிவோடு தந்துவரும் "தொண்டன்"வாழ்க!
அதர்மங்கள் அநீதிகள் அக்கிரமங்களை
இனங்கண்டு சொல்லுகின்ற செய்திகளால்
உண்மைகள் மறையாமல் துணைபுரியும்
"தொண்டனின்" துணைநினைந்து
பெருமைகொள்வோம்

எண்ணங்கள் எழுத்துருவம் பெறவேநன்கு
எண்ணியவர் எண்ணங்களை எடுத்துச்சொல்ல
எல்லோரும் அறிந்துகொள் வாரேஇஃது
புண்ணியமாம் பணிஇதனைப் பொலிவுடனே
இன்றல்ல நேற்றல்ல எண்ணிப்பார்க்க
நாற்பது ஆண்டுகளாய் விளைவுதருகின்ற
போற்றுதற்குரிய மாதஇதழாம் "தொண்டன்"
மகிமைஇன்னும் மேலோங்க வாழ்த்துவோமே

போரின் கொடுமைகளோ வானோங்கவே
புண்ணாகிப் புதைந்துவிட்ட வாழ்வுகளும்
இன்னல்கள் இடர்கள் அனைத்தையுமே
துல்லியமாய்ச் சொல்லிநிற்கும் தொண்டன்இங்கே
இனங்கள் மதங்கள் இவையிடையே
உறவுகள் வளரவே துணைபுரிந்தும்
வாழ்விலே வளங்களைக் காட்டிநிற்கும்
"தொண்டனின்" பெருமைகளைப்
புகழ்வோம்நாமே!

அருள்பணி N.C. அருள்வரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• இன்றைய தொலைக்காட்சியின் நிலை

இன்று ஒளிபரப்புச் செய்யப்படுகின்ற தொலைக்காட்சியின் தமிழ், ஹிந்தி நிகழ்வுகள் அனைத்தையும் எடுத்து நோக்குவோமானால், ஐந்து அல்லது ஆறு சதவீத நிகழ்வுகள் தவிர்ந்த அனைத்துமே சினிமாவை மையப்படுத்தியே தயாரிக்கப்படுவதும் ஒளிபரப்புச் செய்யப்படுவதுமாகும். விசேடமாக ஒரு தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்படுகின்ற நிகழ்வை இன்னுமொரு தொலைக்காட்சி தமது நிகழ்ச்சி போல் பிரதிபண்ணுவது மலிந்துபோயுள்ளது.

அண்மைக் காலங்களில் ஞாயிறு தினங்களில் காலையில் ஒலிபரப்பான உதய தரிசனம் 'ஐ' அலைவரிசையில் இடம்பெறுவதில்லை. காலை 9.30 மணிக்கு 'குட்மோர்னிங் 9.30' (M 9.30) என்று ஓர் ஆபாச நிகழ்ச்சி இடம்பெறுகிறது. ஞாயிறு தினம் என்பது அதிகமான குடும்ப உறுப்பினர்களுக்கு ஓய்வு நாளாகும். இளைஞர்களும் பெற்றோரும் ஒன்றாய் அமர்ந்து தொலைக்காட்சி பார்க்கக்கூடிய நாளாகும். இவ்வாறான பார்வையாளர்களை மனதில் நிறுத்தி செறிவான, தரமான, குடும்ப ரசனைக்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளை தரவேண்டியது ஒரு நல்ல இலத்திரனியல் ஊடகத்தின் பண்பாக இருக்க முடியும்.


'ஐ' அலைவரிசை முதல்நாள் செய்தியை காலை 7.30 மணிக்கு ஒளிபரப்புச் செய்கிறது. 8.00 மணிக்கு நாளேடுகளில் இன்று, 8.30க்கு சிறுவர்களுக்கான 'கார்ட்டூன்', 9.00 மணிக்கு 'நகைச்சுவை' (சினிமா நறுக்குத் துண்டங்கள்), 9.30 மணிக்கு மேலே குறிப்பிட்ட, ஆபாச ஆட்டங்கள் நிறைந்த M 9.30 எனும் நிகழ்ச்சி ஆரம்பமாகிறது. அந்த நிகழ்ச்சி பதினொரு மணிவரை தொடரும்.

தமிழைச் சரியாக உச்சரிக்கத் தெரியாத மன்னிக்கவும், உச்சரிக்க முடியாத என்று கூறுவதே பொருத்தம். அந்த இருவர் எழுவாய் பயனிலைகளுடன் ஒரு வாக்கியத்தைக்கூடப் பேச முடியாதவர்களாகக் களமிறங்கி அசத்துகிறார்கள். இந்த நிகழ்ச்சியின் தலைப்பு ஆங்கிலத்தில் இருப்பதால் அவர்களைக் குற்றம் கூற முடியாதுள்ளது.

ஒவ்வொரு ஞாயிறு காலையும் ஒளிபரப்பாகும் அந்த நிகழ்ச்சி பெரிதும் அருவருப்பை ஊட்டுவதாகவே இருக்கிறது. ஏதோ இந்த நிகழ்ச்சிதான் உலகில் முதல் தரமான தொலைக்காட்சி நிகழ்ச்சி என்றும் இரண்டு வாரங்கள் கிறிக்கட் போட்டி நடைபெற்று வரமுடியாமல் போனதால் தமது வரவிற்காகத் தொலைக்காட்சி ரசிகர்கள் தவம் இருப்பதாகவும் தாமே அவர்களுக்கு சந்தோசக் கடவுளர் என்றும் எண்ணியே நிகழ்வுகளைத் தொகுப்பர். கவர்ச்சி நடனங்களுடன் கூடிய சினிமாப் பாடல்களை அருமையான பாடல்கள் என்றும் இன்னும் சினிமா பற்றிய பல துணுக்குகளை உன்னதங்களாக விக்கி விக்கி வாந்தி எடுத்தவண்ணம் தவிப்பர். தமிழ் அலைவரிசை என்று ஆரம்பிக்கப்பட்ட 'ஐ' அலைவரிசையில் குறிப்பிட்ட சில நேரங்களில் மாத்திரமே தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன. 'கிறிக்கட்' போட்டிகள் ஆரம்பமாகிவிட்டால், அதற்காக 'ஐ' அலைவரிசைதான் ஒதுக்கப்படுகிறது.

அதேவேளை ரூபவாஹினி அலைவரிசையைப்

# தொலைக்காட்சியில் பெற்றோரும் இளைஞரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் அங்கே, 'இரிதா ஆயுபோவன்' ஞாயிறு தரிசனம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் மருத்துவம், இலக்கியம், சமூகவியல், சமூக உதவி போன்ற சமூக விழிப்பிற்குத் தேவையான அம்சங்கள் இடம்பெற்றவண்ணம் உள்ளன. இது முழுக்க முழுக்க சிங்கள மொழியிலேயே ஒளிபரப்புச் செய்யப்படுகின்றது. இத்துடன் 'ஐ.ரி.என்', 'சிரச', 'ரி.என்.எல்' 'தெரண' போன்ற அலைவரிசைகளும் இன்று சமூகத்திற்குத் தேவையான, காத்திரமான நிகழ்ச்சிகளையே சிங்கள மொழியில் தந்தவண்ணம் இருக்கின்றன.

அதைவிட மறுபக்கத்தில் கிழக்கில் ஒரு மாத காலமாக நடைபெற்ற யுத்த அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் உண்ண உணவின்றி, அருந்த நீரின்றி, உறவுகளை இழந்து, இறந்த உறவினர்களின் உடல்களைப் புதைக்கக்கூட வழியில்லாமல் காயம் பட்டவர்கள் உரிய மருத்துவ சிகிச்சையின்றி, நோய்க்கு உரிய மருந்து இன்றி, இருக்க ஓர் இடமுமின்றி அகதிகளாக அநாதரவாக அலைகின்ற நிலைமை.

இன்னுமொரு புறமான வடக்கில் முழு ஊரடங்கு, எங்கும் எறிகணை முழக்கம், எந்தவித தகவல் பரிதமாற்றமும் இல்லை. காயப்பட்டவர்களுக்கோ சிகிச்சை பெற வழியில்லை.

இவ்வாறாக மனித வாழ்வு படு கேவலமாக அவல நிலையில் இருக்கையில் இவர்கள்(அதாவது மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சி நடத்துபவர்கள்). சந்தோசம் ஊட்டும் நிகழ்ச்சி நடத்துகின்றார்களாம். இதில் பல பேரின் உழைப்பு உள்ளதாகவும், உழைப்பவர்கள் உவகையடைந்து பூரித்துப்போவதாகவும். கூறிக்கொள்கின்றார்கள். இதனை பொறுப்பற்ற, ஆக்க பூர்வ பொழுதுபோக்கற்ற இளைஞர்கள் ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கிறிக்கற் சுற்றுப் போட்டி என்றால் பறிக்கப்படுவது 'ஐ' அலைவரிசையும், இலங்கை வானொலி தேசிய சேவையுமே. இந்த இழப்பையும். அபகரிப்பையும் கூட கௌரவமாகக் கருதி ஏற்கும் ஊடகவியலாளர்களான இளைஞர்களும் தமிழர்களாக இருக்கின்றனர்.

இது ஒரு வகையான, ஒரு இதமான கலாசார பண்பாட்டுச்சீரழிவு. இது தமிழ் பார்வை யாளர்களிடம் வலிந்து திணிக்கப்படுகிறது. தொலைக்காட்சியையும் சினிமாவையும் பொழுதுபோக்காகக் கொண்ட இளைஞர்களே

## ஐ.நா சபை

- ஐ.நா சபையின் தலைமை அமெரிக்காவின் நியூயோக்கில் 1945ல் ஆரம்பமானது.
- ஐக்கிய நாடுகள் சபை உருவாகக் காரண மாக இருந்தவர்கள்

01. ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி ரூஸ் வேல்ட்
02. பிரித்தானியப் பிரதமர் வின்சன்ட் சேர்சில்
03. ரஷ்யத் தலைவர் ஸ்டாலின்

- ஐ.நா சபை 1945.10.24ல் 50 நாடுகளுடன் ஆரம்பமானது.

- ஐ.நா சபையின் முதல் செயலாளர்கள்

01. டிரிக் விலி
02. டாக்டர் ஹமசீல்டு
03. ஊதாணட்
04. குருட்வோல்ட்ஹைம்
05. சேவியர் பெரிஸ்டி குயிலர்
06. வூத்திரஸ் வூத்திரஸ்கால்
07. கோபி அனான்
08. பாங் கீ மூன்

தொகுப்பு - வயஹற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் இதில் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். தென்னிந்திய ஹிந்தி சினிமாவின் அழுக்குகள் மலிவு விலையில் எடுக்கப்பட்டு 'ஐ' அலைவரிசையில் உன்னதமானவையாக உருப்பெருக்கிக், காட்டப்படுகின்றன. 'ஐ' அலைவரிசையின் M 9.30 நிகழ்ச்சியின் பாடல்களையும் நிகழ்ச்சிகளின் இடையே ஒளிபரப்பப்படும் Filler இடை இசைகளையும் குடும்பத்துடன் இருந்து பார்க்கமுடியுமா என்பது கேள்விக் குறியே.

ஊடகம் என்று கூறுகின்ற போது, நெகிழ்வான நிகழ்வுகள் தேவைதான் அவ்வாறான நிகழ்வுகளுக்கென்று வேறு நேரங்கள் ஒதுக்கப்பட்டவேண்டும். அத்துடன் அவ்வாறான நிகழ்வுகள் மாத்திரம் ஆதிக்கம் செலுத்திவிடக் கூடாது.

'ஐ' அலைவரிசையில் ஒளிபரப்பாகும் இதே நிகழ்வு போன்று 'சக்தி' தொலைக்காட்சியிலும் சின்னச் சின்ன ஆசைகள் எனும் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து தொகுத்தளித்த நபரே, ஏதோ காரணங்களினால் அங்கிருந்து வெளயேறி 'ஐ' அலைவரிசையில் இவ்வாறான நிகழ்வொன்றை ஆரம்பித்தார். இன்று யார் யாரோவெல்லாம் இந்த நிகழ்வுகளை, இஷ்டப்படி தொகுத்து நம்மை முகம் சுழிக்க வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகளை இன்றைய பெற்றோர், தம் பிள்ளைகளான இளைஞர்களுடன் எவ்வாறு இருந்து இரசிக்க முடியும்? எனவே, தொலைக்காட்சிகள் அனைத்துமே எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான நிகழ்வுகளைத் தயாரித்து ஒளிபரப்பு செய்வதன் மூலம் இக்கால ரசிகர்களையும், இளைஞர் களையும் கவர முடியும் என்பது உண்மை.

• தொலைக்காட்சி எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கவேண்டும்?

இலங்கையில் 'ரூபவாஹினி' அலைவரிசை, 'ஐ.ரி.என்.', 'சிரச', 'தெரண', 'ரி.என்.எல்' போன்ற அலைவரிசைகளில் ஓரளவுக்கேனும் மருத்துவம், இலக்கியம், சமூகவியல், சமூக உதவி போன்ற மனித சமூக விழிப்பிற்குத் தேவையான அம்சங்களை சிங்கள மொழியில் ஒளிபரப்புச் செய்கின்றன. இது தமிழ் பேசுவோர்க்கு பயனளிக்காவிட்டாலும் மொழி புரிபவர்களுக்குப் பயனளிக்கிறது. இதுபோன்ற நிகழ்வுகள் தமிழ் அலைவரிசையில் வரவேற்கப்படுகிறது.

— தேவ. அனோசியஸ்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசாயா -7:11 - 14 யோவான் -2:1-11 இந்த இரண்டு வாசகங்களிலும் வரும் "அடையாளம்" என்ற சொல் நம் கருத்தைக் கவர்கின்றது.

பழைய ஆகமத்தில்: "ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார்"(எசாயா 7:14) என்று கூறப்படுகின்றது.

புதிய ஆகமத்தில்: "இதுவே இயேசு செய்த முதல் அருள் அடையாளம்" என்று நாம் பொதுவில் விளங்கிக்கொண்டாலும் அடையாளம் என்பது அற்புதம் என்பதிலும் ஆழமான கருத்தைத் தருகின்றது.

எனவேதான், யோவான் நூலாசிரியர் இயேசுவின் அற்புத செயல்களை "அடையாளம்" என்று அழைக்கின்றார். அற்புதம் என்பதற்கு டைனமிஸ் (Dynamis) என்ற சொல் ஏனைய நற்செய்தி நூல்களில் பிரமிக்கவைக்கும் செயல் என்ற கருத்தில் பாவிக்கப்படுகின்றது. ஆனால் அதற்குப் பதிலாக யோவான் செமெயோன் (semeion) "அடையாளம்" என்ற சொல்லைப்பாவிக்கின்றார்

யோவானைப் பொறுத்தமட்டில் அடையாளம் என்பது கடவுளின் மாட்சியின் வெளிப்பாடு. அந்த அடையாளம் ஆழமான ஆன்மீக இறையியல் உண்மைகளை வெளிப்படுத்தி நிற்கும் ஒன்றாகும். வெறுமனே மக்களை மதி மயக்கவோ, கடவுள் தமது பலத்தை நிரூபிக்கவோ வெளிக்காட்டப்பட்ட ஒன்றல்ல.

எனவேதான் வானத்திலிருந்து அடையாளம் ஒன்றைத் தங்களுக்குத் தரும்படி கேட்ட பரிசேயர் சதுசேயரை இயேசு கடிந்து கொண்டார். "இந்தத் தலைமுறையினர் அடையாளம் கேட்பதேன்? இத்தலை முறையினருக்கு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லு கின்றேன்" (மாற்கு:8:12)

அடையாளம் என்பது இனிமேல் கடவுள் செய்யப்போகும் புதுச்செயலைச் சுட்டுகின்றது. ஆகாஸ் அரசனுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளம் யூதாவின் வரலாற்றில் கடவுள் ஆற்றப்போகும் புதுச்செயலை அறிவிக்கின்றது.

கானாவூர் கலியாண வீட்டிலே செயற்பட்ட அடையாளம் கடவுள் உருவாக்கப் போகும் "புதிய இஸ்ரவேலின்" புதிய இறை மக்களின் அடையாளம்.


யோவான் நூலாசிரியரைப் பொறுத்தமட்டில் அடையாளங்களுக்கெல்லாம் பெரும் அடையாளம் சிலுவைதான்.

அந்த சிலுவைதான் புதியனவற்றிற்கெல்லாம் ஊற்று. புதிய இறை மக்களின் சிறப்பு, புதிய மானுடத்தின் சிறப்பு, புதிய விண்ணரசின் தோற்றம் அனைத்திற்குமே அந்த சிலுவைதான் ஊற்று.

இன்னும் மக்கள் அடையாளத்தைத் தேடுகின்றார்கள். அழிவின் மத்தியில் வாழ்வின் அடையாளத்தைத் தேடுகின்றார்கள். போரின் மத்தியில் அமைதியின் அடை யாளத்தைத் தேடுகின்றார்கள். வன்முறையின் மத்தியில் அகிம்சையின் அடையாளத்தைத் தேடுகின்றார்கள். வறுமையின் மத்தியில் அட்பத் தின் அடையாளத்தைத் தேடுகின்றார்கள். அநீதியின் மத்தியில் நீதியின் அடையாளத்தைத் தேடுகின்றார்கள். பகையின் மத்தியில் அன்பின் அடையாளத்தைத் தேடுகின்றார்கள். அழிந்து போகின்றவையின் மத்தியில் அழியாத அடையாளத்தைத் தேடுகின்றார்கள்.

அந்த அடையாளம் சிலுவையே. கானாவூரில் முதலாம் அடையாளத்தைச் செய்த இயேசுவே அந்த அடையாளம். அவரது சிலுவையே மாபெரும் அடை யாளம். புதுமையைச் செய்யும் கடவுளின் அடை யாளச் செயற்பாடு எங்களின் ஆரம்பமாகவேண்டும்.

தண்ணீர் இரசமாகிய புதுமை எங்கள் வாழ்க்கைக் கதையில் நிஜம் தானா? உண்மை தானா?




**வி.பி. தனேந்திரா**
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி க.தா.செல்வராசகோபால் இயற்றிய மற்றொரு ஆய்வு நூல்




- அன்புமணி -

கனடாவில் வதியும் இலக்கியக் கலாநிதி க.தா.செல்வராசகோபால் 2007ல் நான்கு ஆய்வு நூல்களை வெளியிட்டிருந்தார். அவை (அ) பாரத சக்தி மகா காவியம் (ஆ) நைடதம் (இ) கல்லாடம் (ஈ) கடல்கோள் ஓவியம்

“கடல்கோள் ஓவியம்” என்னும் ஆய்வு நூல் 26.12.2004ல் ஈழத்துக் கிழக்குக் கரையைத் தாக்கிய சுனாமி (கடல்கோள்) பற்றியது.

சங்க காலத்திலிருந்து இதுவரை ஒன்பது கடல்கோள் ஏற்பட்டுள்ளதாக நூலாசிரியர் கூறுகிறார். 26.12.2004ல் ஏற்பட்ட சுனாமி ஒன்பதாவது கடல்கோள் என்கிறார்.

இந்த சுனாமி பற்றி ஏற்கனவே பல நூல்கள் மடடக்களப்பில் வெளிவந்துள்ளன. இவற்றில் இடம் பெறாத பல அரிய தகவல்கள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

உதாரணமாக “கடல்கோள்” என்ற அருமையான தமிழ்ச்சொல் கடல் சீற்றத்தைக்குறிப்பிடுகிறது. ஆனாலும் நம்மவர்கள், ஜப்பானியர் “சுனாமி” எனக் குறிப்பிட்டதால் அதையே கைக்கொண்டனர்.

1004 பாடல்கள் கொண்ட இந்நூல், கடவுள் வாழ்த்தியல் முதல் கடல்கோள் இயல் பற்றிய சில பனுவல்கள் வரை 22 இயல்களைக் கொண்டுள்ளது.

இதுவரை 200க்கு மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ள நூலாசிரியரின் பெரும் பாலான நூல்கள் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளன. இந்நூலும் ஒரு செய்யுள் நூலே.

## படைப்பாளியின் குரல்

கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை சில நினைவுகூரத்தக்க இயற்கை அனர்த்தங்கள் உள்ளன. 1957 டிசம்பர் வெள்ளம், 1978 நவம்பர் புயல், 2004 டிசம்பர் கடல்கோள்.

இவற்றை நினைவுகூர்ந்த நூலாசிரியர் பின்வருமாறு கூறுகிறார். “1978ம் ஆண்டில் நான் வாழ்ந்த பிரதேசத்தில் வீசிய சூறாவளியின் தாக்கத்தால் நான் மிக அல்லாடிப் போனேன்”

அதன் கோரத்தை நேரிற் கண்ட அனுபவம் அதையிட்டு ஓர் இலக்கியம் படைக்கவேண்டும் என்ற ஆக்கக் கருவை உண்டாக்கிற்று. அதன் பயனாக தொண்ணூற்றாறு வகைப் பிரபந்த இலக்கிய வடிவுகளில் ஒன்றான பரணி யாப்பில் “புயற்பரணி”யைப் பாடினேன்.

இவ்வாறே 2004 கடல்கோள் பற்றியும் அவர் இவ்வாறு கூறுகின்றார். “இதிலே 2004ம் ஆண்டில் நிகழ்ந்த கடல்கோள் ஒன்பதாவது கடல்கோள் என்று கூறியுள்ளேன். அதற்கான காரணங்களும் சான்றுகளும் நூலின் ஓர் அத்தியாயத்தில் சாதாரண மக்களுக்கு உணர்த்தப்படும் அளவில் எடுத்துக் கூறியுள்ளேன்.

இந்நூலின் நோக்கம் மேற்படி கூற்றில் இடம் பெறுகிறது. அவ்வாறே இந்நூலை ஆக்கிய விதமும் பின்வருமாறு கூறப்படுகிறது.

கடல்கோள் பற்றிய தகவல்களை நான் பல நூல்களில் இருந்து திரட்டி அவற்றின் அடிப்படையில் இந்த நூலைப் படைத்துள்ளேன். கடலியல் பற்றிய மேலதிக அறிவைப் பெற விளைவோர்க்கு ஆதாரமான ஒரு நூல் பட்டியலையும் இணைத்துள்ளேன்.


அந்த வகையில் இது கடல்கோள் பற்றிய ஓர் ஆய்வு நூலாகிறது என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்கோள் ஓவியம் என இந்நூல் பெயர் பெற்றிருந்தாலும் உண்மையில் இது ஒரு கடல்கோள் காவியம் என்றே நாம் கொள்ளவேண்டும்.

1004 பாடல்கள் கொண்ட இக்காவியத்தின் பாடல்கள் விருத்தப்பாக்களாகவும் வெண்பாக்களாகவும் ஆசிரியப்பாக்களாகவும் அமைந்துள்ளன. பல்வேறு வகையான பாவடிவங்களையும் நூலாசிரியர் இந்நூலில் தருகிறார். மாதிரிக்குச் சில



(1) கடவுள் வாழ்த்து

உடல்தந்து உயிருட்டி உணர்ந்து வாழும்

திடன் தந்து திசை எட்டும் திகழும் உலகில்
நடமாட அருள்புரிந்த நாதா, ஐந்து
அடஞ்செய்யும் பூதத்தை ஆக்கும் வேதா
(பஞ்ச பூதங்களின் செயற்பாடுகளே உலகத்தை ஆட்டிப் படைக்கின்றன. அந்தப் பஞ்ச பூதங்களை உருவாக்கியவன் இறைவன் என்பது உட்பொருள்)

(2) புலரும்போதில் புவியின் அழகு

அதிகாலைப் பொழுதிற்கண் அயர்வு நீங்க
அலைகடலோ இரைச்சலிட்டு அழைக்கக் காண்போம்
புதியதொரு நாளொன்று புலருதென்று உலகம்
போர்த்த இருட்துப்பட்டியை மெல்ல நீக்கும்
உதித்தெழவே உந்துகின்ற உதயநாதன் கடலில்
உடலெழுப்பிப் படிப்படியாய் உருவங்காட்டும்
கதித்தாடும் அலை குனிந்து காலைக் கழுவிக்
கடவுளென தலைதாழ்த்தித் தரையைத்தாவும்

(3) வசந்தமெனும் மலர்ச்சி

பனிபடர்ந்த பாரதில் பசுமையற வெண்துகிலைத்
தனித்துடுத்த விதவை நிகர்த்தரையாள் -
புனிதமுற்று
புதுவாழ்க்கை பெற்றதுபோல் புவிமகள்
வசந்தமெனும்
சதிராட வந்திட்டாள்

ஆங்கிலத் தகவல்கள்

கடல்கோள் உருவாகும் விதம் கடந்த காலங்களில் ஏற்பட்ட கடல்கோள்களின் விபரம் முதலியவற்றை ஓர் ஆங்கிலக் கட்டுரை தருகிறது. இதை எழுதியவர் மட். நாவற்குடா இளையதம்பி தங்கராசா (முன்னாள் வங்கி அதிகாரி)

இதிலுள்ள சில விபரங்கள் முக்கியமானவை கடற்கோள் (சுனாமி) எப்படி உருவாகிறது? ஆள்கடலில் புவி ஓடுகள் இடம்பெயர்வதால் ஏற்படும் பூமி அதிர்ச்சி (நில நடுக்கம்) இதற்குக் காரணமாகிறது. நில நடுக்கத்தை றிச்ரர் எனக் கணக்கிடுவார்கள். 26.12.2004ல் ஏற்பட்ட ஆழ்கடல் நிலநடுக்கத்தின் அளவு 9.0 என்பது நாம் அறிந்ததே. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பல ஆழ்கடல் நில நடுக்கங்கள் 9.0ஐ விட குறைந்த அளவு றிச்ரர் என்பதால் அவை 26.12.2004 சுனாமிபோல் ஈழக்கரையில் தாக்கங்களை ஏற்படுத்தவில்லை.



கடந்த காலங்களில் உலகின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட கடல்கோள்கள் பற்றிய விபரங்கள் இந்த ஆங்கிலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையில் இடம்பெறுகின்றன.

- மிகப்பாரிய ஐந்து நிலநடுக்கங்கள், அவற்றின் விளைவுகள்
- சக்தி வாய்ந்த 12 நில நடுக்கங்கள், அவற்றின் விளைவுகள்
- கடந்த 70 வருடங்களில் ஏற்பட்ட நில நடுக்கங்கள்.

1556 முதல் 1990 வரை ஏற்பட்ட நில நடுக்கங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதிகூடிய ரிச்ரர் அளவு 9.5 கொண்ட நிலநடுக்கம் 1960ம் ஆண்டு சிலி நாட்டில் ஏற்பட்டுள்ளது. மிகக் குறைந்த ரிச்ரர் 1.2 நிலநடுக்கம் இத்தாலியில் 1908ல் ஏற்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு நில நடுக்கத்தின் போதும் லட்சக்கணக்கான மக்கள் உயிர் இழந்திருக்கின்றனர். (இவ்விபரங்கள் Toroator Star என்னும் சஞ்சிகையின் 27.12.2004 தேதி இதழிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன)

### வர்ணப் புகைப்படங்களும் அழிவு விபரங்களும்


கிழக்கிலங்கை அழிவுகளின் ஏராளமான வர்ணப் புகைப்படங்களையும் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களையும் நூலில் சேர்த்துள்ளார். பெயர்ந்த தண்டவாளங்கள், உடைந்த வீடுகள், கடல் மணலால் மூழ்கடிக்கப்பட்ட பிரதேசங்கள், மீட்கப்பட்ட பிரேதக் குவியல்கள் முதலியன இப்படங்களில் சிலவாகும்.

நூலின் அட்டையில் ஒரு பேரலை கொடிய அரக்கனைப் போல், அலைக் கைகளை விரித்தபடி எழுந்து வருகிறது. பயங்கரத்தின் உச்சத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

கிழக்கிலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் ஏற்பட்ட இழப்புகளை எடுத்துக்காட்டுவதற்கு 'ஒரு பானைச் சோற்றுக்கு ஓர் அவிழ் பதம்' என்னும் தலைப்பில் கடற்கோள் அழிவில் சிதைந்த கோமாரி பற்றிய விபரம் இடம்பெறுகிறது. (அக்கரைப்பற்று முன்னோடி ஊடகவியலாளர் வி.பி.சிவப்பிரகாசம் தரும் விபரங்கள் இவை)

கோமாரி கிராமம் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. இக்கிராமம் கடற்கரையோரமாக உள்ளது. அதனால் கிராமம் முற்றாக அழிந்தது. ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டொருவர் மட்டுமே தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். உயிருக்குயிரான குடும்பத்தினரை (தாய், தந்தை, மனைவி, மக்கள்) இழந்ததினால் இவர்கள் இப்போது நடைப்பிணமாகவே வாழ்கின்றனர்.

புதிதாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. உட்கட்டமைப்புகள் (Infrastructure) புனரமைக்கப்பட்டுள்ளன.




ஆனாலும் என்ன? "நமக்குமது நாம் போமளவும் எமக்கென்னென் றிட்டிண்டுறும்" என்றபடி காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள் இவர்கள்.

### வித்தியாசமான ஆவணப் பதிவு

26.12.2004 கடற்கோள் பற்றி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மட்டும் ஐந்து அல்லது ஆறு நூல்கள் வெளிவந்துள்ளன எனலாம். இவை பொதுவாகப் பல்வேறு பிரதேசங்களில் ஏற்பட்ட அழிவுகளின் பதிவாகவே அமைந்துள்ளன.

வீடிழந்த பலர் இன்னமும் (3 1/2 வருடங்களுக்குப் பின்னும்) அகதி முகாம்களிலும் கூடாரங்களிலும் தங்கியுள்ளனர். காரணம் சுயேச்சை நிறுவனங்கள் பல காலை வாரிவிட்டதுதான். நிறைய ஊழல்கள் பல பிரதேச செயலாளர் மட்டத்தில் இடம்பெற்றதும் இதற்கு ஒரு காரணம் எனலாம். இந்தப் பின்னணியில், ஆய்வு நோக்கில் ஒரு நூல் வெளிவந்திருப்பதும் அது செய்யுள் வடிவில் அமைந்திருப்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இன்றைய சம்பவம் நாளைய வரலாறு என்பதற்கமைய இந்நூலின் முக்கியத்துவம் நன்கு உணரப்படவேண்டும். இதே நூலாசிரியர் ஏற்கனவே கடந்தகால செயற்கை, இயற்கை அனர்த்தங்கள் பற்றிப் பின்வரும் செய்யுள் நூல்களை இயற்றியுள்ளார். அவை:

- புயற்பரணி
- ஈழத்துப் போர்ப்பரணி
- வறுமைப் பரணி
- 9வது கடல்கோள் ஓவியம் (இந்நூல்)

இவற்றுள் முதல் மூன்று நூல்களும் பரணி என்னும் பிரபந்த வடிவில் அமைந்தன. இந்நூல் ஒரு காவியம் வடிவில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஏணி

காலையில் எழுந்து
கணவனின் தேனீர் பருகி
கண நிமிடம் குளித்து
பல நிமிடம் அலங்கரித்து
சாறிநிறத்தில் சட்டைபோட்டு
சட்டைக்கேத்த செருப்பணிந்து
தலைக்குவுள், காதுக்குத்தொங்காட்டான்
தோலிலொரு பேக் கையிலொரு குடை
கவரிங் நகையுமாய்
காலடி ஓட்டோவில்
கச்சிதமாயப் பயணித்து
குட்மோணிங் கொடுத்து
குனிந்து ஒப்பமிட்டு
ஸ்ற்ராப் றூமில் இரண்டறக்கலந்து
சரோஜா வீட்டு சாமத்தியச் சடங்கு
கவிதா குழந்தையின் காதுக்குத்து
அகிலா அன்ரியின் அபோசன் மேட்டர்
அதிபர் மனைவியின் அட்டியல் நிலவரம்
கலந்தும் பகிர்ந்தும் கருத்தாய்க்கேட்டும்
பதினொன்று வரையும் பயனாய்க் கழித்து
ஓட்டைவடையும் ஒரு கப் தேனீரும்
உறிஞ்சும் போது இஞ்சி போதவில்லை
இனியேனும் சாறுவிடுங்கள்
சலிப்புடன் கூறி
பனைமட்டை மீது
கிளிப்பிள்ளை நடையாய்
கோம்சயன்ஸ் றூமில்சங்கமமாகி
ஓயெல் பொடியள் வீஸப் பார்த்து
சட்டியில் ஒட்டாமல் தோசை சுடுவது
ரீவியில் பார்த்த கீரவடை றிசிப்பி
சிறிப்புடன் பேசிய
சில கணம் நிதானித்து
ஸ்ரிக்கர் பொட்டை சரியாய் ஒட்டி
மணியொலி கேட்டு
எடுப்பாய் நடந்து
மீண்டும் குனிந்து
சிரமத்துடன் ஒப்பமிட்டு
வாசலில் நின்ற ஓட்டோ நுழைந்து
வீட்டில் புகுந்து
"அப்பப்பா என்ன வெயில்
ரயர்டா இருக்குது"
என்றபடியே சேவைகள் தொடரும்
யாரப்பா இந்தக் கலங்கரை விளக்கு
என்றொரு கேள்வி கேட்க வேண்டும்
யாருமல்ல,
எங்கள் ஏணி.



கவிஞர் மைந்தமிழ்க்குமரன் கடலிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதானம்

என்றுமில்லாத அளவிற்கு சமாதானத்தைத் தேடித் தேடி ஏங்குகின்ற மனித மனங்கள் மண்ணில் பெருக்கமடைந்துவிட்டன. வீட்டில், குடும்பத்தில், அலுவலகத்தில், தொழிற்றலத்தில், சுற்றத்தில், நம் சூழலில், ஊரில், எம் நாட்டில் உலகத்தின் தேசமெங்கும் இன்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒன்றாக அமைதியும் சமாதானமும் அமைந்துவிட்டன.

நம் வாழ்க்கையின் போக்கினால், எம் மனங்களின் விகாரத்தினால், தலைக்கேறிவிட்ட மமதையினால் சமாதானத்தை நமக்குள்ளே ஆழக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு எங்கோ தொலைத்துவிட்ட உணர்வுடன் அதனைத் தேடிக்கொண்டிருக்கிறோம். நமது இந்தத் தேடலில் மற்றவர்களுடைய சமாதானத்தையும் நாம் இல்லாமல் செய்துவிடுகின்றோம். இல்லாததைத் தேடுவதில் ஏமாறும்போது ஏக்கம் கொள்கின்றோம். ஏங்கும் மனதில் அமைதி இருப்பதில்லை. இருப்பதைக் கொண்டு நிறைவடையும்போது மனம் பூரிப்படைகின்றது. அந்த நிறைவுதான் சமாதானம் - நிம்மதி. இதுதான் பொது விதி.

நமக்குள்ளே நாம் தொலைத்துவிட்ட சமாதானத்தை யாராவது மீட்டுத்தரவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கவே செய்கின்றோம். குருடனுக்குக் குருடன் வழி காட்டும் நிலைதான் மிச்சம்.

சமாதானத்தின் பாதுகாவலியாம் எம் அன்னை மரியாள், தனக்குள்ளே சமாதானத்தை உருவாக்கிக்கொண்டு நடப்பவற்றை இறைவனின் மீது கொண்டிருந்த விசுவாசத்தினூடே பார்த்திருந்து, ஒவ்வொரு கட்டமும் - அது மகிழ்ச்சியாய் இருந்தாலென்ன, துன்பமாய் இருந்தாலென்ன அதில் சமாதானத்தையும் நிம்மதியையும் தேடி உருவாக்கிக்கொண்டு வாழ்ந்து நின்றவள்தான்.

மரியாள் கன்னியாக இருந்தபோதே யூத சமுதாயத்தில் கர்ப்பிணியாக இருப்பதென்பது எத்துணைப் பயங்கரமானதென்று அவள் அறியாததல்ல. இருப்பினும், இறைவன் மீது அவள் கொண்டிருந்த நம்பிக்கையும் விசுவாசமும் எதையும் மேற்கொண்டு அமைதியாக அவளை வாழச் செய்தன. தான் கண்ட அமைதியையும் சமாதானத்தையும் தன் உறவினள் எலிசபெத்துடன் அவள் பகிர்ந்துகொண்டு அந்த மூதாட்டியையும் அமைதி காண - சமாதானம் காண வழி செய்தவள் அவள்.

சமாதானத்தின் அன்னையாகவும், சமாதானத்தின் பாதுகாவலியாகவும், நிம்மதியின் ஊற்றாகவும் அவளைக் காண்கின்றோம். திருமண வீட்டிலே பந்தியில் திராட்சை இரசம் தீர்ந்து போவதென்பது மண வீட்டாருக்குப் பெருத்த அவமானம். எனவே, அங்கு நிம்மதி தொலைந்துவிட சமாதானம் பறிபோய்விடுகின்றது. அங்கு அன்னை இருந்தாள். அவர்களது நிம்மதியைப் பாதுகாத்து சமாதானத்தையும் நிலைநாட்டுகிறாள். பெரிதாக எதையும் அவள் செய்யவில்லை. தான் சமாதானத்தைக் கண்டடைந்த வழியைத்தான் அவர்களுக்குச் சொல்லித் தந்தாள். “அவர் சொல்வதைச் செய்யுங்கள்” என்கிறாள்.

சமாதானம் பெறும் வழியே அதுதான். இறைமகன் இயேசு சொல்வதைச் செய்தாலே போதும் சமாதானம் நம்மை வந்து ஒட்டி நிற்கும். மரியன்னை தானும் செய்தாள், அமைதி கண்டாள். இதையே மற்றவருக்கும் சொல்லித் தந்தாள்; தருகின்றாள். எங்கள் மனதிற்கும் சரி, வீட்டிற்கும் சரி, எங்கள் சமுதாயத்துக்கும் சரி, எங்கள் நாட்டிற்கும் சரி, ஏன் முழு உலகுக்குமே சமாதானத்தின் இராக்கியானவள் அன்னை மரியாள்.



- ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளகம்



## Mass Items

Chalice
Ciborium
Purificatory set
Candle stand
curual set

## Books

Prayer books
திருக்குடும்பப் பக்தி மாலை
திருப்புகழ் மாலை
பெரிய குறிப்பிடம்
விளக்கவுரை
விவிலியக் களஞ்சியம்
வத்திக்கான் சங்க ஏடு
பூசைப் புத்தகம்
வாசகப் புத்தகம்
Bible



நினைவு அஞ்சலி மடல்கள்
Birthday Cards
First Holy Communion Card
Picture Cards

சுருபம்
Frame
Stand Frame
Rosary
Meddles
Crosses
Key tag
Sticker
Wall Sticker
Both sides Sticker
Words Sticker
Chain
Chain with Cross
Alter Lamp

திருப்பலிப் பாடல் CDகள்
மாதா பாடல் CDகள்
VCDகள்
MP3 CDகள்
DVDகள்



மத்திய வீதி
மட்டக்களப்பு
T.P - 065 2222485




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசு மரம் உண்டாக்குவோம்
பரிசுகள் பல பெற்றிடுவோம்

சிறுவர்களே... உங்கள் எதிர்காலத்தை வளமாக்க
சிங்கிதி சிறுவர் கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள்.
அது காசு மரம்போல வளர்ந்து உங்களுக்கு
பல பரிசுப் பொருள்களை அள்ளித்தரும்.

HNB சிங்கிதி சிறுவர் கணக்கு 12 வயதுக்குக்
குறைந்த உங்களுக்காக வளரும்
காசு மரம் போன்றது.

காசு மரம் ஒன்றை வளருங்கள்.
எதிர்காலத்தில் பயன் பெறுங்கள்.

HNB
சிங்கிதி
சிறுவர்

**Hatton National Bank PLC**

**Head Office, Marketing Division,**
**HNB Towers, Level 19**
**No. 479, T. B. Jayah Mawatha,**
**Colombo 10, Sri Lanka.**
**Tel: 2 661971-5, 2 661958**
**Fax: 2664892**
**Email: supund@hnb.lk**
**Website: www.hnb.net**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SEYLAN
BANK PLC
The bank with a heart

# SEYLAN GRAMEEN SAVINGS A/C

15%

QUARTALY & ANNUAL RAFFLES

FREE ATM CARD

## FIXED DEPOSIT RATES

01 மாத நிலையான வைப்பு - 20%
03 மாத நிலையான வைப்பு - 19%
01 வருட கிராமீன் வைப்பு - 20.5%

## SAFTY LOCKERS

>>>>Fixed deposit → LKR 50,000/-

T.P: 065 2224419 / 2226395


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org